கல்கி

KALKI 28.1.90
ரூ. 2.50



ஆந்திராவில் நக்ஸலைட்டுகள்

— நேரடி ரிப்போர்ட்


இதோ! ரூ.4/-* பெறுமான சூப்பர் சலுகை!
கிஸான் மற்றும் டிப்பி'ஸ் ஜாம், சாஸ் மற்றும் ஸ்குவாஷுடன்!
TOMATO SAUCE
Kissan
Dipy's
ORANGE SQUASH
Dipy's
TOMATO SAUCE
Dipy's
MIXED FRUIT JAM
ஒரு பாக்கெட்
"கிஸான் மில்க்ட்ரீம்" பிஸ்கட்
இலவசம்! இலவசம்! இலவசம்! இலவசம்!
MILK DREAM
Kissan
KISSAN MILK DREAM BISCUITS
*ஒவ்வொரு 500 கிராம்/700 மி.லி.
கிஸான் ஜாம்/சாஸ்/ஸ்குவாஷ்
பாட்டிலுடன் அல்லது ஒவ்வொரு
500 கிராம்/400 கிராம்/700மிலி
டிப்பி'ஸ் ஜாம்/சாஸ்/ஸ்குவாஷ்
பாட்டிலுடன்சுமார் நான்கு
ரூபாய் பெறுமான 100 கிராம்
"கிஸான் மில்க்ட்ரீம்" பிஸ்கட்
பாக்கெட் இலவசம்!
முந்துங்கள்! இச்சலுகை சரக்கு நீடிக்கும்
வரை தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா,
கோவா, கர்னாடகா மற்றும்
பாண்டிச்சேரி பிரதேசங்களில் மட்டுமே!
Visesh/KPL/8953/Tam

சுரங்கப் பாதையில் கண்டெடுத்த சோகமூட்டை!

உபயோகமில்லாத பொருள்களைத் தெருவோரங்களிலிருக்கும் குப்பைத் தொட்டிகளில் விட்டெறிவது போல, சிலர், தங்கள் வீட்டு மனிதர்களையே தெருவில் வீசியெறிகிறார்கள்! அப்படித் தம் சொந்த மனைவியாலேயே வீசியெறியப்பட்டவர்தாம் முப்பத்தொன்பது வயதான கோபால்.

"**எ**னக்கு ரயில்வேயில் நல்லதொரு வேலை. சென்ட்ரல் ஸ்டேஷனில் வேலை செய்து கொண்டிருந்தேன். 74ல் எனக்குக் கல்யாணமானது. சந்தோஷத்தோடு மண வாழ்க்கையைத் துவக்கினேன். இரண்டு பையன்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். வாழ்க்கை மேலும் சந்தோஷமானது.

இந்தச் சந்தோஷ வேளையில்தான் என் மனைவிக்கும் பெரம்பூரில் கடை வைத்திருக்கும் ஒருவருக்கும் கள்ளத் தொடர்பு இருப்பது தெரிந்தது. எனக்கு அதனால் உடனடியாகக் கோபம் வரவில்லை. மாறாக என் மனைவியின் மேல் அனுதாபமே பிறந்தது!

"எனவே, அது மாதிரியான தொடர்பு குடும்ப கௌரவத்துக்கு இழுக்கானது என்று என் மனைவியிடம் நயமாகச் சொல்லிப் பார்த்தேன். அவள் கேட்பதாக இல்லை. அதனால் கோபப்பட்டுக் கண்டித்துப் பார்த்தேன். அதுவும் அவளிடம் எடுபடவில்லை. ஒரு கணவனின் இதயத்தை ரணமாக்கும் அந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து என் கண் முன்னாலேயே நடக்க ஆரம்பித்தன. என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"இனியும் அவளோடு வாழ முடியாது என்ற நிலையில் அவளை அவள் தாய் வீட்டுக்கு அனுப்பினேன். தனிமையும், என் மனைவியின் ஏமாற்றுச் செயல்களும் என் இதயத்தைச் சுற்றிச் சுற்றி என்னைக் கேலி செய்வது போல் ரீங்காரமிட்டன. நினைக்க நினைக்கத் துக்கமாக வந்தது. அந்தத் துக்கத்தை மறக்கக் குடிக்கத் துவங்கினேன்.

"இதற்கிடையில் என் தாயும் மற்றவர்களும் என்னிடமும், என் மனைவியிடமும் சமாதானம் பேசிச் சேர்த்து வைத்தனர். நானும் என் மனைவியின் துரோகத்தை மறந்து அவளோடு சேர்ந்து வாழ ஆரம்பித்தேன். அதன் பிறகும் அவனுடைய தொடர்பு நின்றபாடில்லை. இந்த நிலையில் என்ன செய்வது? விவாகரத்தைத் தவிர வேறு வழியே புலப்படவில்லை.

"**வே**று வழியின்றி விவாகரத்துக்கு மனுச் செய்தோம். அந்த மனுவின் பேரில் ஓராண்டு காலமாவது கணவனும் மனைவியும் பிரிந்து வாழ வேண்டும் என்பதால், அதன்படி பிரிந்து வாழ ஆரம்பித்தோம். இந்த நிலையில் எனது குடிப் பழக்கமும் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

"ஒருநாள் திடீரென்று பகலிலேயே



எனக்குக் கண் தெரியாமல் போனது. ரயில்வே ஆஸ்பத்திரிக்குச் சென்று அட்மிட் ஆனேன். அங்கு செய்யப்பட்ட மருத்துவத்தால் கண் பார்வை மீண்டும் கிடைத்தது. ஆனால் நரம்புக் கோளாறுகள் காரணமாக இடுப்புப் பகுதி சுத்தமாகவே செயலிழந்து போனது. பேச்சும் தடுமாற ஆரம்பித்து வார்த்தைகளைச் சுத்தமாக உச்சரிக்க முடியாமல் போனது.

''ரயில்வே ஆஸ்பத்திரியில் இந்தக் குறைகளைக் குணப்படுத்த முடியாது என்று சொல்லி விட்டார்கள். தொடர்ந்து என்னால் வேலை செய்ய முடியாத நிலை.

''இந்த நிலையில்தான் என் தாயும் மற்றவர்களும் மீண்டும் என் மனைவியை அழைத்து வந்தார்கள். எனக்குப் பதிலாகக் கருணை அடிப்படையில் என் மனைவிக்கு ரயில்வேயில் வேலை வாங்க ஏற்பாடு செய்தால், அவள் குடும்பத்தை இனி ஒழுங்காக நிர்வகிப்பாள் என்று சமாதானம் கூறினார்கள். நானும் பழைய விஷயங்களை ஜீரணித்துக் கொண்டு சரியென்றேன்.

''என் மனைவிக்குக் கருணை அடிப்படையில் வேலை கிடைத்தது. எனக்குச் சேர வேண்டிய பி.எஃப்., போன்ற சேமிப்புகளெல்லாம் அவள் பெயருக்கு மாற்றப்பட்டு விட்டன. நானோ வேலை ஏதும் செய்ய முடியாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் நிலை. இவையெல்லாம் என் மனைவிக்கு மிகவும் சௌகர்யமாகப் போய் விட்டது.

''நாளாக நாளாக என்னை அலட்சியம் செய்ய ஆரம்பித்தாள். அவளுடைய வெளித் தொடர்பு மேலும் வலுப்பட்டது. அந்த ஆள் எங்கள் வீட்டுக்கே வர ஆரம்பித்தார். இது பற்றி நான் ஏதாவது கேட்டால், இருவருமாகச் சேர்ந்து என்னை அடிக்க ஆரம்பித்தார்கள்.

''இப்படிச் சில நாட்கள் சென்றன. பிறகு, நான் வீட்டிலிருப்பது அவர்களுக்கு ஒரு பாரம் என்பதோடு, தொந்தரவும் என்று நினைத்து, என்னை எப்படியாவது அப்புறப்படுத்த நினைத்தனர். அதன் முதல் கட்டமாக என்னை வீட்டுக்குள் போட்டுக் கதவைச் சாத்தினர். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து, கம்புகளால் என்னைக் கடுமையாகத் தாக்கினர். நான் நினைவு தப்பிப் போனேன்.

''மீண்டும் நான் நினைவு திரும்பிய போது நேரு பூங்கா அருகிலுள்ள சுரங்க நடைபாதைக்குள் கிடந்தேன். அசைய முடியவில்லை. பார்த்தவர்களெல்லாம் என்னைப் பிச்சைக்காரனென்றே நினைத்து ஒதுங்கி ஒதுங்கிச் சென்றார்கள்.

''இந்த நிலையில்தான் என்னோடு வேலை செய்த ஒருவர் அங்கே நான் கிடந்த நிலையைக் கண்டார். என்னிடம் அவர் ஏற்கெனவே நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தார். அந்தப் பணத்தில் எனக்குத் தினமும் சாப்பிட ஏதாவது பார்சல் வாங்கி வந்து கொடுத்துக் கொண்டிருந்தார். ஆயினும் எனக்கு அவர் வேறு உதவிகளேதும் செய்யவில்லை. செய்யும் நிலையிலும் அவர் இல்லை.

''சுமார் இரண்டு வாரங்களுக்கு மேல் நான் அங்கேயே கேட்பாரற்றுக் கிடந்தேன். அதன் பிறகுதான் என் நிலையைப் பற்றிக் கேள்விப்பட்ட 'உதவும் கரங்கள்' வித்யாகர் என்னை அழைத்துக் கொண்டு வந்து தமது அமைப்பின் கருணை இல்லத்தில் வைத்துப் பராமரித்து வருகிறார்'' என்று தம் சோகக் கதையைத் திக்கித் திணறிக் கூறி முடித்தார் கோபால்.

''இவருக்கு இரண்டு தம்பிகள், இரண்டு தங்கைகள், ஓர் அண்ணன் என்று உறவுக்காரர்கள் நிறையப் பேர் இந்தச் சென்னையிலேயே இருக்கிறார்கள். இவர் சுரங்க நடைபாதையில் கிடந்த நிலை பற்றி எனக்கு டெலிபோனில் கூறியதே இவருடைய தங்கைதான். ஆயினும் அவர்கள் இவருக்கு உதவத் தயாராயில்லை என்பது ஆச்சரியமான விஷயம்...'' என்றார் வித்யாகர்.

— சாங்கிருத்யாயன்.

''சுயநலம் என்பது ஒருவன் தன் விருப்பப்படி வாழ்வது இல்லை; மற்றவரைத் தன் விருப்பப்படி வாழ வைப்பதாகும்!''

— ஆஸ்கார் வைல்ட்.

தகவல்: புத்தனாம்பட்டி சி. மணி.





**அந்நியரின்
சுரண்டலிலிருந்து
விடுபட்ட நாள்!
நம்மவரின்
சுரண்டலுக்கு
அங்கீகாரம்
வழங்கிய நாள்!**

— தமிழாசிரியன்.



அன்பழகனுக்கு இருட்டடிப்பா?

●● சுற்றுலாப் பொருட்காட்சியில் உள்ள கல்வி அரங்கைப் பார்த்து முடித்ததும் இந்தச் சந்தேகம் நமக்குத் தோன்றியது. மற்ற துறை அரங்குகளில், கலைஞருடன் ஜூனியர் அமைச்சர்கள் கூட பல போஸ் களில் புன்னகை செய்து கொண்டிருந் தார்கள். ஆனால் கல்வி அரங்கில் அந்தத் துறையின் அமைச்சரான அன்பழகனின் ஒரு படம் கூட இல்லை என்பது தற்செய லான விஷயமாகத்தான் இருக்குமோ!

●● பொருட்காட்சியில் நம் கண்ணில் பட்ட மற்றும் சில:

* செய்தித்துறை அரங்கில் மொத்தம் 90 படங்கள் இருக்கின்றன. அவற்றில் 71 படங் களில் முதல்வர் கலைஞர் இருக்கிறார். 21 படங்களில் தனியாகவும், மற்றவற்றில் பிற ரோடும் காட்சியளிக்கிறார்.

* நகர்ப்புற வளர்ச்சி அரங்கில், அமைச் சர் கண்ணப்பனுடன் எம். எல். ஏ. ஒருவர் குடிசைப் பகுதிகளைப் பார்வையிடுகிறார். அமைச்சருடன் சேர்ந்து மனுக்களைப் பெறு கிறார். 234 எம். எல். ஏக்களில் அந்த அதிர்ஷ்டக்கார எம். எல். ஏ. யாராக இருக்க முடியும், ஸ்டாலினைத் தவிர!

* மத்திய அரசு அமைத்திருக்கும் அரங்கு களில், மத்திய அமைச்சர்களின் படம் எது வும் இல்லை. ஆனால் மாநில அரங்குகளில் காட்சியளிக்கிறார் ஒரு மத்திய அமைச்சர். கொடுத்து வைத்த அந்த அமைச்சர் முர சொலி மாறன்தான் என்பது சொல்லித் தான் தெரிய வேண்டுமா, என்ன?



ராதாகிருஷ்ணன்

●● "தொகுதியில் பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குப் பஸ் வசதி செய்திருக் கிறேன். ஒரு கிராமத்துக்கு ஆரம்பச் சுகா தார நிலையம் அமைய உதவியிருக்கிறேன். ஏராளமான முதியோர்களுக்குப் பென்ஷன், கர்ப்பிணிகளுக்கு உதவித் தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி போன்றவற்றைச் செய்து கொடுத்திருக்கிறேன்" என்று சொன் னார் கோவில்பட்டி எஸ். ராதாகிருஷ்ணன். 'பரவாயில்லையே இந்த எம். எல். ஏ.' என்று நீங்கள் ஆச்சரியமாகப் புருவத்தை உயர்த்தும் முன் ஒரு தகவல். இவர் சென்ற சட்டமன்றத் தேர்தலில் கோவில்பட்டி தொகுதியில் தி. மு. க. சார்பில் போட்டி யிட்டுத் தோற்றவர்! தோற்றாலும் தொடர்ந்து மக்கள் பணிகளைச் செய்து வரு கிறார். வழக்கறிஞராக இருக்கும் ராதா கிருஷ்ணன், கோவில்பட்டி தொகுதியில் உள்ள 120 கிராமங்கள் பற்றிய நிலவரங் களைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைத் திருக்கிறார்.

கண்ணகி கோயில் தமிழ்நாட்டுக்குச் சொந்தம் என்றும், கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் தமிழகத் துக்குத் திருப்பிவிட வேண்டும் என்றும், பொது மக்கள் சார்பாக வழக்குப் போட்டி ருக்கும் ராதாகிருஷ்ணன், கோயமுத்தூரில் இந்திரா காந்தியின் மரணத்தின் விளைவாக ஏற்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்ட சீக் கிய வியாபாரிகளுக்குத் தருந்த நஷ்ட ஈடு வாங்கித் தருவதிலும் மும்முரமாக ஈடுபட் டவர். இப்போது இவரும் எழுத்தாளர் ராஜ நாராயணனும் சேர்ந்து கு. அழகிரிசாமி பெயரில், இடைச்செவல் கிராமத்தில் ஒரு நூல் நிலையம் அமைக்கும் பணியில் ஈடு பட்டிருக்கிறார்கள்.

●● சமீபத்தில் ஹரே கிருஷ்ணா இயக்கத் தினர் பூரி ரத யாத்திரை ஒன்றைச் சென்னை யில் நடத்தினார்கள். ஏராளமான உள் நாட்டு, வெளிநாட்டு பக்தர்கள் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும், ரதத்தின் முன்னால் சென்றார்கள். ரதத்தின் மேல் இருந்தவர்கள் சாலையில் சென்ற பக்தர் களுக்குச் சந்தனப் பிரசாதத்தைக் கிரிக் கெட் பந்து போலத் தூக்கிப் போட்டார்கள். வாழைப்பழம், வெள்ளரிக்காய் போன்ற வையும் ரதத்தின் மேலிருந்தே வீசப்பட்டன. அதைப் பார்த்தபோது என்னவோ போல இருந்தது என்றால், வியப்பளித்த ஒரு காட்சி; பாதுகாப்புக்காக வந்திருந்த காவலர் களும், போலீஸ் அதிகாரிகளும் ரதத்தின் வடத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றதுதான்!

— கௌசல்யா.



* ஆயுதப் பயிற்சி பெறும் நக்ஸலைட்டுகள்...

ஆந்திராவில் நக்ஸலைட்டுகள்

—நேரடி ரிப்போர்ட்

தெலுங்குதேச எம்.எல்.ஏ. ஒருவரை நக்ஸலைட்டுகள் கடத்திக் கொண்டு போக, சென்னா ரெட்டி கிணற்றில் கல்லைப் போட்டது போலிருக்க, என்.டி. ஆர்., பதறித் துடிப்பதாகக் காட்டிக் கொண்டார்.

அடுத்து, காங்கிரஸ் எம். எல். ஏக்களே கடத்தப்பட்ட போது, சென்னா ரெட்டி வளைந்து கொடுத்தார். எம். எல். ஏக்கள் விடுதலைக்கு நக்ஸலைட்டுகள் கோரிய விலைகள் தரப்பட்டன.

பின்னர், ஒரு பாங்கு மானேஜர் கடத்தப் பட்டதாகச் செய்தியும், 'இல்லை, அவர் சாமர்த்தியமாகத் தப்பிவிட்டார்' என்பதாக ஒரு செய்தியும் வந்தன. அதன் கீழேயே ஒரு பாங்கு காஷியர் நக்ஸலைட்டுகளால் கடத் தப்பட்டதாக மேலும் ஒரு தகவல்!

ஆந்திர மாநிலத்தில் இவ்வாறு நக்ஸலைட்டுகளின் அடாவடித்தனங்கள் தொடர் கின்றன.

நக்ஸலைட்டுகளால் அண்மையில் கடத் தப்பட்ட எம்.எல்.ஏ. வெங்கடேஸ்வர ராவ் பி.காம் பட்டப் படிப்புப் படித்த 35 வயது இளைஞர். நிஜாமாபாத் மாவட்டத்தில் உள்ள 'நிச்பள்ளி' தொகுதியிலிருந்து இரண் டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். கடத்தப்பட்டு விடுதலை யான பிறகு, இப்போது சுற்றிலும் பாதுகாப் புக்காக ஆட்கள்.

"நக்ஸலைட்டுகள் உங்களை எப்படி நடத் தினார்கள்?"

"நீங்களும் நானும் எப்படி நண்பர்களைப் போலப் பேசிக் கொண்டிருக்கிறோமோ, அதே போலத்தான் அந்த ஐந்து நாட்களும் என்னிடம் நடந்து கொண்டார்கள். நேரா நேரத்திற்கு உணவு, குளிருக்குக் கம்பளி என்று கவனித்துக் கொண்டார்கள். அந்த ஐந்து நாட்களும் காட்டிற்குள் என்னை நடக்க வைத்துத்தான் அழைத்துப் போனார் கள். உறக்கம் ஏதாவது ஒரு மரத்தின் கீழே! அவ்வப்போது அரசியல் தத்துவங்கள் பற்றி யும் என்னுடன் விவாதித்தார்கள். அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொன் னார்கள். நான் என் கருத்தைச் சொன் னேன். கருத்து முரண்பட்டாலுங்கூட அவர்கள் என்னைத் துளிகூட மரியாதைக் குறைவாக நடத்த வில்லை."

"உங்களைக் கடத்தியதற்காக பைலா. வாசுதேவராவ் பிரிவைச் சேர்ந்த நக்ஸலைட் டுகள் ஏன் 'பந்த்' நடத்தினார்கள்? உங்க ளுக்கோ அல்லது உங்கள் கட்சிக்கோ அவர்

களுடன் தொடர்பு உண்டா...?''

''கிடையாது. என்னைப் பற்றிப் பொதுவாகத் தொகுதியில் நல்ல அபிப்பிராயமே உண்டு. ஏன், காங்கிரஸ்காரர்கள் கூடத் தான் என்னை விடுவிக்க வேண்டும் என்று அறிக்கை விடுத்தார்கள். ஆனால் ஒன்று சொல்வேன். பைலா குரூப்பிற்கு இது போன்ற கடத்தல் வேலைகளிலோ, தனிநபர்க் கொலைகளிலோ நம்பிக்கை இல்லை.''

''உங்களைக் கொன்று விடுவார்கள் என்று நீங்கள் பயப்படவில்லையா?''

''மலகர ராவுக்கு நேர்ந்த கதி பற்றித் தெரியுமா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்கள். 'தெரியும்' என்றேன். 'நீங்கள் அப்படி முடிவெடுத்து விட்டால் நான் ஒன்றும் மறுப்புச் சொல்ல மாட்டேன்' என்று அவர்களிடமே சொன்னேன். ஆயினும் அவர்கள் என்னை ஒன்றும் துன்புறுத்தவில்லை.''



* கண்ணபிரான்: மனித உரிமைகளுக்காக...

வெங்கடேஸ்வரா ராவிடம் பேசிக் கொண்டிருந்ததிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிய வருகின்றன:

ஒன்று: நக்ஸலைட்டுகள் அப்படியொன்றும் அசுரர்கள் அல்ல; அவர்களிடமும் மனிதத்தன்மை உண்டு என்பது ஒன்று; மற்றொன்று நக்ஸலைட்டுகளிலும் பல பிரிவுகள் உள்ளன, நடைமுறையில் கொள்கை மாறுபாடுகள் உள்ளன என்பது.

நக்ஸலைட் இயக்கம் தோன்றியது மேற்கு வங்கத்தில்தான் என்றாலும் இன்றைய நிலையில் அது இன்னும் உயிர்த் துடிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பது ஆந்திர மாநிலத்தில்தான். அறுபதுகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட போது, பெரும்பாலான கம்யூனிசத் தீவிரவாதிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கட்சிக் கூட்டணி ஆட்சி ஏற்பட்டதும் மீண்டும் ஒரு பிளவு ஏற்பட்டது.

'பண்ணையார்களைக் கொன்றாவது ஏழை விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்போம்,' என்ற முழக்கத்துடன் 1967 இல் மேற்கு வங்கத்தின் வடகோடியிலிருக்கும் 'நக்ஸல்பாரி' என்ற கிராமப் பகுதிகளில் சாருமஜூம்தார் ஆரம்பித்த இயக்கம்தான் 'மார்க்சிய—லெனினிய' இயக்கங்களுக்கு வித்து.' ஆரம்பத்தில் இது தோன்றிய பகுதி 'நக்ஸல்பாரி' என்பதால் இந்தக் கம்யூனிஸ தீவிர வாதிகளுக்கு 'நக்ஸல் பாரிகள், நக்ஸலைட்டுகள்' என்று பெயர் வந்துவிட்டது. ஆனால், அப்போது சாரு மஜூம்தார் தமது இயக்கத்தைக் 'கம்யூனிசப் புரட்சியாளர் ஒருங்கிணைப்புக் கமிட்டி' என்று தான் அழைத்துக் கொண்டார்.

* வெங்கடேஸ்வரராவ்: கடத்தப்பட்ட எம்.எல்.ஏ.



தனிநபர்ப் படுகொலைகளில் மஜூம்தாரின் ஆதரவாளர்கள் தாராளமாக ஈடுபடவே, மார்க்சிஸ்ட் கட்சியில் இருந்து அவர்கள் நீக்கப் பட்டனர். நாடு முழுவதும் மார்க்சிஸ்ட் கட்சிக்குள் சாரு மஜூம்தாரின் வழிமுறை பற்றித் தீவிர விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அப்போது ஆந்திர மாநிலத்திலும் விவாதங்கள் நடைபெற்றன. நாகி ரெட்டி, சந்திர புல்லா ரெட்டி, தேவுலபள்ளி வெங்கடேஸ்வரராவ் என்ற மூன்று முக்கிய மார்க்சிஸ்டுகள் இந்த விவாதத்தின் திருப்பு முனையாக ஒரு மாற்றுத் திட்டத்தை முன் வைத்தனர்:

'மக்கள் மத்தியில் மார்க்சிய—லெனினியக் கருத்துக்களைப் பரப்புவதற்காக அரசியல் ரீதியிலான ஒரு பகிரங்க அமைப்பும், முதலாளித்துவ சமூகத்தை அழிக்க, ஆயுதமேந்திய ரகசிய அமைப்பு ஒன்றையும் ஒரே நேரத்தில் நடத்திச் செல்ல வேண்டும்' என்பதே அந்தத் திட்டம்.

சாரு மஜூம்தாருக்கு இந்த யுக்திகளில் உடன்பாடு இருக்கவில்லை. அவர் 'தனி நபர்க் கொலை' என்ற சித்தாந்தத்திலேயே



* கிருஷ்ணையா — நக்ஸல் எம். எல். ஏ.

தீவிர நம்பிக்கை உடையவராக இருந்தார். 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி சாரு மஜூம்தார் மார்க்சீய — லெனினீயக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தொடங்கினார். அதே சமயம் ஆந்திராவில் புரட்சிக் கம்யூனிஸ்டுகளின் ஆந்திர ஒருங்கிணைப்புக் கமிட்டி என்று நாகி ரெட்டி, சந்திர புல்லா ரெட்டி, வெங்கடேஸ்வர ராவ் ஆகியோரால் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் போராட்டம் நக்ஸல் பாரிகளால் ஆரம்பிக்கப்பட, போலீஸ் — தீவிரவாதிகள் மோதல் தொடங்கியது.

ஏற்கெனவே 1946 இல் நிலப்பிரபுக்களை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட தெலுங்கானாப் போராட்டம் நசுக்கப் பட்டதின் பாதிப்பாக, எஞ்சியிருந்த தீவிர வாதிகளில் பெரும்பாலோர் 'மார்க்சீய — லெனினீய' வாதிகளாயினர். ஆயுதத்தை ஏற்கெனவே கையில் எடுத்துப் பழக்கப் பட்டவர்கள் ஸ்ரீகாகுளம் போராட்டத்தில் ஈடுபடவே அவர்களைச் சமாளிப்பது போலீசுக்குப் பெரும் தலைவலியாயிற்று.

''அந்தப் போராட்டத்தின் போது போலீஸின் நடவடிக்கை மிகமிக மோசமாகவும் மனித உரிமைகளை மீறுவதாகவும் இருந்தது. ஏராளமானவர்கள் காரணமேயின்றிக் கடப்பட்டார்கள். இதில்மாணவர்கள்முதல், எழுத்தாளர்கள் வரை, எல்லோருமே 'அடக்கம்.படித்தவர்கள், சுயசிந்தனை உள்ளவர்கள் நக்ஸலைட்டுகளின் பால் பரிவுடன் மாறக் காரணமே, மாநில அரசு கட்டவிழ்த்து விட்ட வன்முறைதான்'' என்று அதை நினைவுபடுத்திக்கூறுகிறார், ஆந்திரப் பிரதேச மனித உரிமைக் கமிட்டியின் தலைவர் கே.ஜீ. கண்ணபிரான்.

1973 இல் நாகி ரெட்டி, புல்லா ரெட்டி, வெங்கடேஸ்வர ராவ் இடையே கருத்து மோதல் ஏற்பட, இயக்கம் மூன்று துண்டாக உடைந்தது. கம்யூனிஸப் புரட்சியாளர்களின் ஆந்திர ஒருங்கிணைப்புக் கமிட்டியின் செயலாளராக சந்திர புல்லா ரெட்டி பொறுப் பேற்ற சிறிது காலத்திலேயே அந்த இயக்கத்தைக் கலைத்து வேறு ஒரு மார்க்சீய லெனினீய இயக்கத்துடன் இணைத்துக் கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில் தான் 'கே.எஸ்.' என்று சுருக்கமாக அழைக்கப்படும் கொண்டப்பள்ளி சீதாராமையா, 'மக்கள் சேனை' (People's War Group) என்ற புதிய மார்க்சீய லெனினீய இயக்கத்தை ஆரம்பித்தார். முழுக்க முழுக்க சாரு மஜூம்தாரின் 'தனி மனிதக் கொலை' தத்துவத்தைப் பின் பற்றி, ஆயுதம் தாங்கிப் போராடும் இந்தப் பிரிவு தான் ஆந்திராவில் இப்போதுள்ள நக்ஸலைட் இயக்கங்களிலேயே மிகவும் பலம் பொருந்தியதாகும். கொண்டப்பள்ளி சீதாராமையா ரொம்பவும் தந்திரக்காரர். 1984 இல் ஹைதராபாத் உஸ்மானியா மருத்துவமனையில் இருதய நோய்ச் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த போது, 'சாகல



* கவிஞர் வாரவர ராவ்

மாகத்' தப்பி இன்றளவும் போலீசார் மோப்பம் பிடிக்க முடியாத படி தலைமறைவாக இருக்கிறார்!

கொண்டப்பள்ளியின் 'மக்கள் சேனைப் பிரிவு' தவிர, இன்று நக்ஸல் இயக்கங்கள் ஆந்திராவில் பதின்மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டு இருக்கின்றன! இவற்றில்டையவாகதேவ ராவ் பிரிவு, நீர்மலா பிரிவு, ராஜண்ணா பிரிவு தவிர, மற்றவை சிறுசிறு பிரிவுகளாகச் சிதறிக் கிடக்கின்றன.



* நரசம்மா: சித்திரவதைக்குள்ளானவர்

இந்த மார்க்சிய — லெனினிய இயக்கங்களுக்குள் ஏன் இத்தனை விரிசல்கள்?

பிரபல தெலுங்குக் கவிஞரும் நக்ஸல் ஆதரவாளருமான வாரவர ராவ் சொல்கிறார்:

''லட்சியம் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்தும் விதத்தில் இந்தப் பிரிவுகளுக்குள் வேறுபாடுகள் இருக்கின்றன. மார்க்சிய — லெனினியத்தில் நம்பிக்கையுள்ளவன் என்ற வகையில் எனக்கு வன்முறையிலோ, அல்லது தனிமனிதக் கொலைகளிலோ உடன்பாடு கிடையாது. அதே நேரத்தில் மக்கள் சேனைப் பிரிவோ, வேறு இயக்கங்களோ சூழல் காரணமாக அந்தக் காரியங்களில் ஈடுபடுகையில் நாங்கள் பகிரங்கமாக அதைக் கண்டிக்க மாட்டோம். எங்கள் அபிப்பிராயங்களையும் கண்டனங்களையும் அவர்களிடம் தான் நேரிடையாகத் தெரிவிப்போம். ஏனெனில், எக்காரணம் கொண்டும் ஒரு லட்சியப் போர் பலவீனப்படுவதை நாங்கள் விரும்பவில்லை!''

சமீபத்தில் எம்.எல்.ஏக்களைக் கடத்தியது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஏழு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைக் கடத்தியது எல்லாமே 'கே.எஸ்' தலைமையிலான மக்கள் சேனைப் பிரிவுதான். ஆந்திர நக்ஸலைட்டுகளிலேயே நவீன ரகத் துப்பாக்கிகள் இவர்களிடம் தான் இருக்கின்றன!

ஹைதராபாத் பத்திரிகையாளர் ஒருவர் கூறினார்: ''நக்ஸலைட்டுகளிடையே கோஷ்டி மோதல்களும் உண்டு. பைலா வாசுதேவ ராவ் கோஷ்டிக்கும் கொண்டப் பள்ளி சீதாராமையா கோஷ்டிக்கும் சுத்தமாக ஒத்துக் கொள்ளாது. சொல்லப் போனால் என்.டி..ஆர் ஆட்சியின் போது மக்கள் சேனைப் பிரிவைச் சேர்ந்த நக்ஸலைட்டுகளைக் காட்டிக் கொடுப்பதற்கும் பிடிப்பதற்கும் பைலா வாசுதேவ ராவ் கோஷ்டி பெரிய அளவில் உதவிகரமாக இருந்திருக்கிறது. ஏன், இப்போது கூட மக்கள் சேனைப் பிரிவு தெலுங்கு தேச எம்.எல்.ஏ வைக் கடத்தியதை எதிர்த்து நிஜாமாபாத்தில் 'கடை அடைப்பை' முன்னின்று நடத்தியது, பைலா வாசுதேவ ராவ் பிரிவுதான்!''

கொண்டப்பள்ளி கோஷ்டிதான் _னி மனிதக் கொலைகளிலும், எம். எல். ஏ. போன்றவர்களைக் கடத்தி மிரட்டுவதிலும் நம்பிக்கைவைத்துத்தேர்தலில்போட்டியிடுவதில்லையே தவிர, பைலா வாசுதேவராவ் பிரிவும் சரி, சந்திர புல்லா ரெட்டி (ராஜண்ணா) பிரிவும் சரி, தேர்தலில் போட்டியிட்டுத் தலா ஓர் எம். எல். ஏ வைத் தங்கள் வசம் வைத்திருக்கின்றன.

''புரட்சிக்கான பாதை போடும் யுக்தி முறைகளில் தேர்தலில் போட்டியிடுவதும் ஒன்று'' என்கிறார் சந்திர புல்லா ரெட்டி பிரிவைச் சேர்ந்த நக்ஸலைட் எம். எல். ஏ. வான கிருஷ்ணையா.

நக்ஸலைட்டுகளின் பல பிரிவுகளிலும் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் அடித்தள மக்கள் சேர்ந்து கொண்டு தான் இருக்கின்றனர். நாளுக்கு நாள் இவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஸ்ரீகாகுளம், அதிலாபாத், கரீம்நகர், நிஜாமாபாத், கம்மம், கிழக்கு கோதாவரி, வாரங்கல் மாவட்டங்களில் மட்டுமே வேரூன்றியிருந்த நக்ஸலைட்டுகள் சமீப காலமாக ஆந்திரா முழுவதுமே பலம் பெறத் தொடங்கி இருக்கின்றனர். இதற்குக் காரணம், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்

கிற மக்கள் மீது மீண்டும் மீண்டும் நிலப் பிரபுக்கள், மற்றும் அவர்களுடைய அடியாட்களின் தாக்குதல், போலீசாரின் அத்துமீறல் ஆகியவை இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதுதான்.

ஓர் உதாரணம் தேவையென்றால் நரசம்மாவைச் சந்திக்கலாம். இருபத்து மூன்று வயதான கங்களா நரசம்மா பணிபாக்ஷி (நிர்மலா ரெட்டி) பிரிவு நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர். அவர் ஆந்திரப் போலீ கடனான தமது அனுபவத்தை விவரிக்கிறார்:

"கங்காதர மண்டலில் (தாலுகா மாதிரி) கர்ஷ குர்த்தியைச் சேர்ந்த பண்ணையார் ஸ்ரீஹர ரெட்டி. 88 — ஆம் வருஷம் மார்ச் மாதம் மாலம்மா என்ற பெண்ணைச் சித்திரவதை செய்து வந்ததை எதிர்த்து, கரீம் நகர்ப் பிரிவுத் தலைவரான வசந்தா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். ஆனால் போலீஸ் பண்ணையார் ஸ்ரீஹர ரெட்டியை விட்டுவிட்டு அவருடைய அடியாட்கள் இருவரை மட்டுமே கைது செய்தது.

"இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்து ரொம்ப நாட்களுக்குப் பிறகு நவம்பர் மாதம் 3 —ந் தேதி வசந்தாவைச் சிறப்புக் காவல் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் 'மொகிலய்யா' கைது செய்து அழைத்துக் கொண்டு போனார். மறுபடி வசந்தாவை 89 — ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் பார்த்த போது கர்ஷ குர்த்தி கிராமம் அருகே ஒரு குன்றுக்குக் கீழே பிணமாகக் கிடந்தாள். அவளைச் சித்திரவதை செய்ததை நேரிடையாகப் பார்த்த சுஜாதா என்ற பெண் எங்களுக்கு ஏற்கெனவே தகவல் சொல்லியிருந்தாள்.

"நாங்கள் பெண்களைத் திரட்டி இன்ஸ்பெக்டர் மொகிலய்யா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தோம். இதற்குள்ளாக என் மீதும், சுஜாதா மீதும் தீவிரவாதிகள் பிரிவுப்படி தனித் தனியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விட்டன!

"பிப்ரவரி மாதம் மொகிலய்யா என்னைக் கைது செய்து, ஒரு மாதம் ஸ்டேஷனில் வைத்துச் சித்திரவதை செய்தார். குப்புறப் படுக்க வைத்துக் கால்களின் மீது உலக்கையை வைத்து அதன் இருபுறமும் இரண்டு கால்களை வைத்துக் கொண்டு ஒரு போலீஸ்காரர் ஏறி நிற்பார். இன்னொருவர் காலை மடக்குவார். பிறகு குதிகால் தரையில் படும்படி உட்கார வைத்து, அப்படியே கையையும் காலையும் சேர்த்துக் கட்டி விடுவார்கள். இப்படிப் பலவிதச் சித்திரவதைகள். வலி உயிர் போகும்.

"ஒரு மாதத்துக்குப் பின் நான் விடுதலை செய்யப்பட்டேன்: மறுபடி என்னைக் கடந்த அக்டோபர் 4 — ந் தேதி கைது செய்து, ஸ்ரீசில்லா, போயினபள்ளி, வெமுலவாடா, கங்காதரா, கரீம் நகர் காவல் நிலையங்களுக்கு மாற்றிக் கொண்டே இருந்தார்கள். ஒவ்வோர் இடத்திலும் சித்திரவதை தான். கடைசியாகத் தெலுங்குதேச எம்.எல்.ஏ. கடத்தப்பட்ட பிறகு, அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்ததும் விடுதலை செய்தார்கள். ஆனால் சுஜாதாவின் கதி



ராம்ஜெத்மலானி

"என் கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும்வரை..."

சிம்ரஞ்சத் சிங் மான் மீதான வழக்கில், அவருக்கு ஆதரவாக நான் ஆஜராவதற்கு முன்பு, சிறையிலிருந்த அவரைச் சந்தித்தேன். "உங்கள் கொள்கைகள் பற்றிய எனது சந்தேகங்கள் தீர்ந்து, முழுமையான திருப்தி ஏற்பட்டாலன்றி, நான் உங்களுக்காக வழக்காடுவது சாத்தியமில்லை" என்று கூறி அவரிடம் ஒரு கேள்வித்தாளை நீட்டினேன்.

எனது முதல் கேள்வி: "வன்முறை பற்றி உங்கள் கருத்து என்ன?"

"நான் வன்முறையை அடியோடு வெறுக்கிறேன். சாத்வீக முறைகளையே நம்புகிறேன்."

எனது இரண்டாவது கேள்வி: "நான் ஓர் இந்து. உங்களுக்கு நான் ஒரு கெடுதலும் வராமல் நிச்சயம் பாதுகாப்பேன். அதேபோல ஒவ்வொரு சீக்கியரும் பஞ்சாபில் உள்ள இந்து சகோதரர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும்!"

இதற்கு அவர் அளித்த பதில், "என் கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும்வரை நான் இந்துக்களுக்குப் பாதுகாப்புத் தருவேன்," என்பது. சமீபத்தில் அவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டவுடன் சிறை வாசலில் அவர் சொன்ன வாசகம்: "எனக்குக் காந்திய வழிகளில்தான் நம்பிக்கை இருக்கிறது."

இப்படிப்பட்ட மானைத்தான் காங்கிரஸ் அரசு பயங்கரவாதி என்று சொல்லி ஐந்தாண்டு காலம் சிறையிலடைத்துச் சித்திரவதைகள் செய்தது!

— சென்னையில் ராம்ஜெத்மலானி பேசிய பேச்சிலிருந்து தொகுத்தவர்: மௌனி

படம்: சுபா

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் செரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது செரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை செரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: செரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: செரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது செரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



இலவசம்
செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

செரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

என்னவாயிற்றென்றே தெரியவில்லை.''

நக்ஸலைட்டுகளைப் பொறுத்தமட்டில், தங்களுடைய மோசமான எதிரியாகக் கருதுவது வெங்கல்ராவைத்தான். அவர் ஆந்திர முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில்தான் விசாரணையே இன்றி நக்ஸலைட்டுகளை நசுக்கும் நடவடிக்கைகளை எடுத்தார். நக்ஸலைட் என்று போலீசாரால் சந்தேகிக்கப்படுபவர்கள் கூட ஒரு போலியான மோதல்களின் பேரில் கொல்லப்பட்டனர்.

மனித உரிமைக் கமிட்டித் தலைவர் கண்ணபிரான் கூறுகிறார்:

''ஒருபுறம் நக்ஸலைட்டுகளை ஜனநாயக நீரோட்டையில் சேரும்படி அழைப்பு விடுத்துக் கொண்டே மறுபுறம் நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்த நூறு கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும், மண்டல் பிரஜா பரிஷத் தலைவர்களும், நக்ஸலைட் எம். எல். ஏக்கள் இரண்டு பேரும் செயல்பட விடாமல் போலீஸ் தலையிடும் அக்கிரமமும் நடக்கத்தான் செய்கிறது. நக்ஸலைட் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களைப் போலீஸ் போலி வழக்குகளில் ஈடுபடுத்திக் கைது செய்து, சித்திரவதை செய்கிறது. வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் கைது செய்து, தங்கள் பதவியை ராஜினாமா செய்யும்படியும் வற்புறுத்துகிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.''

இவ்வாறு கூறும் கண்ணபிரான், போலீசின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளை விமர்சித்து வெளிச்சம் போட்டுக் காட்டி வந்த ஆந்திர மனித உரிமைக் கமிட்டியின் இரண்டு முக்கிய பிரமுகர்களான டாக்டர் ராமநாதமும் ஜபா லக்ஷ்ம ரெட்டியும் போலீசாரால் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் குற்றம் சாட்டுகிறார்.

''காவல் நிலையத்தில் வருஷத்திற்குக் குறைந்தபட்சம் இருபது பேராவது கொல்லப்படுகின்றனர். இது தவிர, மோதல் துப்பாக்கிச் சண்டை என்ற பெயரில், கடந்த இருபது வருஷத்தில் எழுநூறு பேருக்கு மேல் போலீசாரால் கொல்லப் பட்டிருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் ஏழை விவசாயிகள், மலையின மக்கள். இவர்கள் காலம் பூராவும் அதிகார வர்க்கத்தினரின் சித்திரவதைகளுக்கும், வீட்டுக்குத் தீவைப்பு, பயிர் அழிப்பு, கற்பழிப்பு போன்ற கொடுமைகளுக்கும் உள்ளாகி அல்லல் படுபவர்கள்.

''இருபது ஆண்டுகளுக்கு முன் ஆந்திரா முழுவதுமாக அறுநூறு நக்ஸலைட்டுகள் இருந்திருப்பார்களா என்பதே சந்தேகம். அப்படி இருந்த நிலையை மாற்றி, அடித்தள மக்களுக்கு நக்ஸல் தத்துவத்தின் பால் ஆர்வம் பிறக்கச் செய்ததே வெங்கல் ராவ் போன்றவர்களின் 'அரசு வன் முறை' தான்!

''இங்கே நிலவுகிற வறுமை மற்றும் சமுதாயப் பாகுபாடுகள் தான் மக்களைப் போராடச் செய்கின்றன. நிலச்சீர்திருத்தம் மற்றும் சமூக நலத்திட்டங்களை முறையாகச் செயல் படுத்தி, மக்களுக்கு நல்லது செய்வதை விட்டுவிட்டு, ஆட்சியாளர்கள் சட்ட விரோதமாக அடக்கு முறையைக் கையாள முயற்சி செய்ததின் விளைவுதான் நக்ஸலைட்டுகளின் இன்றைய வளர்ச்சி.''

கண்ணபிரானுடைய இந்தக் கணிப்பு அர்த்தமுள்ளதாகவே தோன்றுகிறது. அணுகுமுறையில் மாற்றம் தேவை. அரசின் அடக்குமுறை அன்பாக மாறும் போது, வேலை வாய்ப்புக்கள் பெருகி வறுமை நீங்க வழி பிறக்கும் போது, ஏற்றத்தாழ்வுகள் அடியோடு நீங்காவிட்டாலும் கூட, மனிதனை மனிதனாக மதிக்க மனிதன் கற்றுக் கொள்ளும் போது நக்ஸலைட் பிரச்னை தன்னால் மறைந்தே போகும்.

— சுந்தரராஜன்

அட்டை வண்ணப்படமும், நக்ஸல்பாரிகளின் ஆயுதப் பயிற்சி படமும் **:காட்உ**

மற்ற படங்கள்: **சுரேஷ்குமார்**


அடுத்த இதழில்...

○ வீட்டு வசதி சாதனங்களால் வேலைப் பளு குறைந்துள்ளதா?
— கவர் ஸ்டோரி






○ ஆச்சி கை மணமும் அந்தக் கால அலங்காரமும்
— செட்டிநாடு உணவு விடுதிகள்


எம். ஜி. ஆர்.
பிறந்தநாள் விழா...
நான்தான் சிலை திறந்து வச்சேன்... பாத்துக்கோ!
தேசிய முன்னணி அரசு தபால்தலை வெளியிட நான்தான் பெற்றுக் கொடுத்தேன், மறவாதே!
ஜெயலலிதா
மக்கள்
இன்னிக்கி உசிரோட இருந்தா அட்டா போதும்னு ஓடி இருப்பாரு!
நான் மட்டும் செய்யலையா என்ன?
நானுந்தான்... வெறி... வெறி...
ராஜினாமா ஏற்பு
ராஜினாமா கடிதங்கள்
எங்கெங்கு கயிறு கட்டப் பண்ணலாம்?
கவர்னர்கள்
விவசாயிகள், சைக்கிள் தொழில் செய்வோர்
நம்மையும் கொஞ்சம் கவனிச்சா நல்லா இருக்கும்!
பெரிய தொழிலதிபர்கள், வியாபாரிகள்
மது தண்டவதே
மார்ச் 20: பட்ஜெட்



கல்கி

1990 ஜனவரி 28
மலர் 48 இதழ் 26
சுக்ல தை 15



காஷ்மீர் பிரச்னை — நாலு முனைத் தாக்குதல்!

காஷ்மீரத்தில் ஃபாரூக் அப்துல்லா அமைச்சரவை கலைக்கப்பட்டு, கவர்னர் ஆட்சி அமைவதாலோ, புதிய ஆளுனர் பொறுப்பேற்பதாலோ பிரச்னைகள் தீர்ந்து விடாது. பொறுப்பில் உள்ளவர்கள் பிரச்னைகள் தீர அரும்பாடுபட வேண்டும். காஷ்மீரப் பிரச்னை இரு வகையானது. முதலாவது பாகிஸ்தானின் ஊடுருவல்; இரண்டாவது மக்களின் மனோபாவம்.

காஷ்மீர மக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்களானதால், இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்ற தருணத்தில், காஷ்மீரம் தன்னுடன் இணையும் என்று பாகிஸ்தான் எதிர்பார்த்தது. ஆனால் காஷ்மீர மகாராஜா இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதாக அறிவித்து விட்டார். அந்தக் கணம் முதலே பாகிஸ்தான் நேரடியாகவும் மறைமுகமாகவும் காஷ்மீரத்தில் ஊடுருவலைத் தொடங்கி விட்டது. இன்னும் காஷ்மீரின் ஒரு பகுதி பாகிஸ்தான் வசம்தான் உள்ளது. சமீபகாலமாக 'காஷ்மீர விடுதலை முன்னணி' என்ற அமைப்புக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து, பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து, ரகசியமாக எல்லை தாண்டி அனுப்பி வைக்கிறது பாகிஸ்தான்.

இதனை இந்திய அரசு இருவிதங்களில் எதிர்கொள்ள வேண்டும். பயங்கரவாதிகளின் ரகசிய ஊடுருவலைத் தடுக்க, எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். அதே சமயம், இந்த ஊடுருவல் நிற்கவில்லையானால் இந்தியா கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதையும் அவசியமானால் போர் நிறுத்த எல்லையைக் கூடக் கடக்க வேண்டியிருக்கும் என்பதையும் எடுத்துக் கூறி, பாகிஸ்தானைக் கடுமையாக எச்சரிக்க வேண்டும். கூடவே, பாகிஸ்தானுடன் நட்புறவைப் பலப்படுத்திக் கொள்ளத்தான் இந்தியா விரும்புகிறது என்பதையும் இஸ்லாமாபாத்துக்குத் தெளிவாக்க வேண்டும். ஊடுருவல் நின்றால், யுத்த மேகங்கள் விலகினால், ஒத்துழைப்பு அதிகரித்தால் இரு நாடுகளுமே விரைவாகப் பொருளாதாரத்தில் முன்னேறலாம் என்பதை எடுத்துக் காட்டுவதுடன், இவ் விஷயத்தில் இந்தியாவின் நல்லெண்ணத்தை உறுதிப்படுத்தும் வகையில் பாகிஸ்தானின் ஏதேனும் ஒரு வளர்ச்சித் திட்டத்தில் இந்தியாவும் பங்கேற்கத் தயாராக இருப்பதாக அறிவிக்கலாம்.

காஷ்மீர மக்களின் மனோபாவம் விசித்திரமானது. பெரும்பாலும் முஸ்லிம்களாக இருப்பதால் இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் பக்கம் அவர்கள் மனம் ஈர்க்கப்படுவதில் வியப்பில்லை. ஆனால் இந்தக் கவர்ச்சி முழு மாயையே. தப்பித் தவறி பாகிஸ்தானுடன் சேர்ந்தால் காஷ்மீர மாநிலம் பத்தோடு பதினொன்றாகி விடும். ஆனால் இந்தியாவுடன் இணைந்திருக்கும் காஷ்மீரம் பலவிதமான சலுகைகளையும் விசேஷ கவனத்தையும் பெற்று வருகிறது. எனவே, துரித வளர்ச்சி பெற வாய்ப்பு அதிகம். காஷ்மீரம் தனி நாடாக விளங்குவதாக யோசித்துப் பார்ப்போமேயானால், பாதுகாப்புச் செலவினங்களுக்கே வருவாய் முழுவதும் காணாது! எனவே முன்னேற்றமும் இராது. மதச் சுதந்திரம் உள்பட, சகலவித சுதந்திரங்களும் உறுதி செய்யப்படும் இந்தியாவுடன் இணைந்து இருப்பதில் தான் ஆதாயம் அதிகம். இந்த உண்மைகள் நயமான பிரசாரம் மூலம் காஷ்மீர மக்களுக்கு வலிமையான முறையில் உணர்த்தப்பட வேண்டும். தவிர, வறுமை, வேலையின்மை போன்ற பிரச்னைகளையும் தீவிரமாக அணுகி தீர்வுக்கு வழிகாண வேண்டும். குறிப்பாக இளைஞர்களைக் கவருமாறு புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படுதல் அவசியம். இவற்றில் போதிய கவனம் செலுத்தாமல், 'பயங்கரவாதிகளை ஒடுக்குகிறோம்' என்று ஆரம்பித்தால், அது விபரீத விளைவுகளையே உருவாக்கும். அனுதாபம் அந்தப் பக்கம் சரிந்து, இந்திய அரசின்பால் விரோத பாவம் வளர்ந்து, இந்தியாவை அந்நிய நாடாகக் கருதும் எண்ணமே மேலோங்கும். பயங்கரவாதிகளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அதனை இராஜதந்திரத்துடன் இணைத்துச் செயல்படுத்துவது அவசியம்.

காஷ்மீரப் பிரச்னையை ஒரு ஆளுனரோ அல்லது ஒரு முதல்வரோ மட்டும் தீர்த்து வைத்து விட முடியாது. மாநில ஆட்சித் தலைவர் தவிர, பிரதமர், உள்துறை அமைச்சர், அயல் விவகார அமைச்சர் ஆகிய நால்வரும் இணைந்து தாக்கினால்தான் அதனை வெற்றி கொள்ள முடியும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

பச்சைக் கொடி



சத்திய சந்தனான கார் டிரைவரைக் கோடீசுவரத் தொழிலதிபரின் தங்கை காதலிக்கப் போய், இருவரையும் பிரிக்கும் முயற்சியில் டிரைவரைத் தொழிலதிபர் ஒரேயடியாய் கபரஸ்தான் அனுப்பச் சூழ்ச்சி செய்ய... முடிவு சொல்லத் தேவையா என்ன? வில்லனின் தில்லுமுல்லு அம்பலம் ஏறி, காதலர் அபிலாஷை ஈடேறி, சுபம்.

சித்தாத்தா கொடுமைக்கு ஆளாகும் தந்தை ஜனகராஜிடம் பாண்டியராஜ், "போன ஜன்மத்திலே என்ன பாவம் பண்ணினீங்களோ...?" என்று அவர் இடிபடும் ஒவ்வொரு கட்டத்திலும் அனுதாபத்தை வழித்துப் போடுவது ஏக கலகல. தன் தங்கையை — சித்தாத்தா மகளைப் பெண் பார்த்துச் சம்மதம் சொல்லிவிட்டுப் போனவர்களிடம் போய் தன் தங்கையைப் பற்றி வேறு யாராவது தப்பாய்ச் சொல்லுமுன் தானே முந்திக் கொண்டு, "என் தங்கச்சி ரொம்ப நல்லவள். அப்படி இப்படி யாரோடவாவது சினிமா பீச்சுன்னு போவாள். ஆனா தப்பாய் ஒன்றும் நடந்ததில்லை," என்று உண்மை விளம்ப, மறுநொடி அவர்கள் காணாமல் போக, சிற்றன்னை அவரை வீட்டை விட்டுத் துரத்த... உண்மை விளம்புவதில்தான் எத்தனை தொல்லை! நிரோஷா அவரை போட்கிளப்பில் ஏரி நடுவில் ஓரம் கட்டி, 'ஐ லவ் யூ' சொன்னதும் அப்படியே ஏரிக்குள் பாய்ந்து நேரே நாஸரிடம் வந்து, 'உங்க தங்கச்சி என்கிட்ட 'ஐ லவ் யூ'ன்னுதுங்க. தப்பில்லையா?" என்று கேட்கிற அப்பாவித்தனம்... இப்பேர்க்கொத்த பாண்டியராஜின் மேல் கொலைப்பழி, விடிந்தால் தூக்கு என்ற அளவுக்கு நெருக்கடி பிறக்கும் சிக்கல் கிச்சென்றுதான் இருக்கிறது. அதற்கப்புறம் வரும் கூத்து இருக்கிறதே, சாவு வீட்டிலே சதிராடும் கொண்டாட்டம் மாதிரி பொருந்தாவிட்டாலும் விசிலடிக்கலாம்.

நிரோஷா வளமை, இளமை, குளுமை. முரட்டுக் கல்லூரி மாணவியின் தடாலடியும் முறைப்பும், "ஏய், லுக் மிஸ்டர்! இது தாண்டா காதல்," என்று கன்னத்தில் அறையும் வேகம்!

ஜனகராஜின் ஆர்ப்பாட்ட அலை வீச்சு அமர்க்களம். ஆபீசில் கமிஷன் கந்தசாமியாய் உட்கார்ந்து, வந்த பார்ட்டியின் பேச்சுக்கெல்லாம் காது கொடுக்காமல் பேனா ஓட்டி, பத்துப் பத்தாய் மேசையில் வைக்க முகம் விகசித்து, வந்தவரின் கோரிக்கையை விலாவாரியாய் விளம்பி, "ரெண்டு நாளுக்கு முன்னாடியே ரெடி பண்ணியாச்சு. கமிஷனுக்காகக் காத்திருந்தேன். வந்தாச்சே. எடுத்துப் போ," என்று நகர்த்துவதாகட்டும், மகன் சிறையில் அடைபட்டதும் பதறும் தந்தைப் பாசமாகட்டும் — ஜனகராஜ தர்பார்!

நாஸரின் குள்ளநரித்தனம் படு பாந்தம். அத்தனை படா கோடீசுவரர், ஜெயிலுக்குள் சைபன் மூடியைத் திறந்து கொண்டு போய் ஒரு கைதியைக் கொலை செய்தது செவி மலர்! (சே, இதுமாதிரி இன்னோர் உதாரணம் கண்டுபிடிக்கணும்.)

அந்தக் குழந்தைப் புதுமுகம் பேபி விஜயா ரொம்ப விளைந்த கட்டை மாதிரி சக்கைப் போடு போட்டிருக்கிறதே! தகப்பனாரிடமிருந்து தப்பிக்க அது ஒளிந்து ஒளிந்து செல்லுவதும், காரில் தொற்றிக் கொண்டு ஏணி வழியே தப்புவதும் கிளாஸ்.

கடைசியில் அத்தனை பேரையும் வாரிச் சுருட்டி வாயில் போட்டுக் கொண்டு விடுகிறார், சி. ஐ. டி. வெ. ஆ. மூர்த்தி. மரண தண்டனைக் கைதி பாண்டியராஜனை வெளியில் கொண்டு சென்று ஒரு கொலையாளி பற்றித் துப்பறியும் மகத்தான பொறுப்பில் அவர் படும் அவஸ்தைகள் ஒவ்வொன்றுமே குபீர் குபீர்ச் சிரிப்புத்தான்.

தனித்தனியே பார்த்தால் அந்தந்தக் கட்டங்கள் சுவைதான். ஆனால் ஒன்றோடு ஒன்று ஒட்டாததால் வெறுப்புத் தொற்றிக் கொள்கிறது.


— பி. எஸ். எஸ்.

வேத வித்து தொடர்கதை பற்றி

சாவி ஆசிரியருக்கு

கவியரசு வைரமுத்து எழுதுகிறார்

பூக்களும் வரும் அம்புகளும் வரும்!



அன்புள்ள ஆசிரியர் சாவி அவர்களுக்கு, வணக்கம்.

உங்கள் எழுத்துக்களின் உச்சமாய் இந்தப் படைப்பு இருக்குமென்ற அறிகுறியை என்னால் அறிந்துகொள்ள முடிகிறது.

ஒரு புள்ளியைத் தீர்மானித்துக்கொண்டு உங்கள் அம்பு வில்லிலிருந்து விடை பெறுகிறது என்பதை மாத்திரம் இந்தச் சில அத்தியாயங்களே தெரிவிக்கின்றன.

உங்கள் எழுத்துக்களில் எனக்குப் பிடித்தது பாசாங்கு இல்லாத நடை; அகங்காரமில்லாத அலங்காரம்.

வேதவித்தினைப் பிளந்து பார்க்கக்கூடிய உரமும் திறமும் உங்கள் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் உண்டு என்பதை நான் அறிவேன்.

எனவேதான், உங்களின் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் வரிசையில் நானும் நின்றுகொண்டிருக்கிறேன்.

நீங்கள் தேர்ந்துகொண்டிருக்கிற விஷயமும் பாத்திரங்களும் இதயத்தைப் பிறாண்டுகின்றன; மனசின் இருட்டுப் பிரதேசங்களில் 'டார்ச்' அடிக்கின்றன.

உங்கள் வாழ்க்கை—கல்வி—அனுபவத் திரட்சி—மனித மதிப்பீடுகளின் மாறுதல்களை வரவேற்கும் மனோபாவம்—கால்களில் சதங்கை கட்டி ஓடும் நதியைப் போன்ற உங்கள் நடை—வாழ்க்கையைத் துளைக்கும் உங்கள் பார்வை எல்லாம் இந்த 'வேதவித்து' முளைக்கத்தானோ என்று வியந்து நிற்கிறேன்.

நிறையப் பூக்களும், நிறைய வேல்களும் உங்கள் மீது வீசப்படலாம்; தாங்குவதற்குத் தயாராகுங்கள்.


அன்போடு,

சாவி இதழில்

இத்தொடர்கதை கடந்த 5 வாரங்களாக வந்து கொண்டிருக்கிறது

பாரத் ஓவர்சீஸ் வங்கியில்
(இணைப்புத் துறை வங்கி)

இடப்பட்ட டிபாசிட்டுகள்
சேமித்த தேன் துளிகள்



- ஏழு ஷெட்யூல்ட் கமர்ஷியல் வங்கிகளால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் ஒரே வங்கி.
- அந்நியச் செலாவணியை கையாள அங்கீகாரம் பெற்றவர்கள்.
- இந்தியாவில் எல்லா முக்கிய நகரங்களிலும், பாங்காக்கிலும் (தாய்லாந்து) கிளைகள் உள்ளன.


சேமிப்பு விழா
(22.1.90 முதல் 3.2.90 வரை)

வாடிக்கையாளர்களின் தேவைக்கு வைப்பு நிதிக் கணக்கு (டெபாசிட்) திட்டங்கள்

(அ) நிலையான வைப்பு நிதிக் கணக்கு (பிக்ஸட் டெபாஸிட்)
(ஆ) மாதாந்திர வருமான வைப்பு நிதிக் கணக்கு
(இ) தனித்தன்மை வாய்ந்த மறு முதலீடு வைப்பு நிதிக்கணக்குத்திட்டம்
(ஈ) பணச் சான்றிதழ்
(உ) அயல் நாடுகளில் வசிக்கும் - இந்தியர்களுக்கான அந்நியச் செலாவணி வைப்பு நிதித்திட்டம்.
(ஊ) வைப்பு நிதி வளர்ச்சித் திட்டம் (ரெகரிங் டெபாஸிட்)
(எ) குழந்தைகள் நல வைப்பு நிதிக் கணக்கு

பாரத் ஓவர்சீஸ் வங்கி லிமிடெட்
தலைமை அலுவலகம் - 'ஆக்ஸ்போர்டு ஹவுஸ்' அண்ணாசாலை,
சென்னை-600 006.

Century/BOBL/187



கவிதைக்குள் ஒரு கவிதை

* ரசிகமணி ரசித்த அருவி

திண்ணெனக் குதிக்கும் அருவி!

பக்தர் ஒருவர். திருக்குற்றாலம் போனார். குற்றால நாதரை நன்றாகத் தரிசனம் செய்தார். தம் குறைகளையெல்லாம் பலமுறை கூறிக் கூறி முறையிட்டார். நேரம் போனதுதான் மிச்சம். குற்றால நாதரின் அருள் கிடைக்கவில்லை.



ரசிகமணி

வெகு நேரம் பொறுத்துப் பார்த்த பக்தரின் மனத்தில் ஒரு சந்தேகம் தோன்றுகிறது. பக்தர்களின் குறைகளைக் கேட்டவுடனேயே பரிந்தோடி வந்து அருள் செய்யும் பரமன் ஏன் என் முறையீடுகளுக்குச் செவிசாய்க்கவில்லை? ஒரு வேளை இதுதான் காரணமோ? இந்த அருவியின் பெரும் சப்தத்திலே என் முறையீடு அவர் காதில் விழவில்லையோ?

இவ்விதம் பக்தர் ஒருவர் கூறுவதாகக் கவிஞர் ஒருவர் கற்பனை செய்து பாடிய பாடல் இது:

"கண்ணிமைக்காது காண்தரு வெற்பில்
கார்பல உறங்கு குற்றாலத்து
அண்ணலே! என்றன் குறையெல்லாம் கூவி
அரற்றியும் நினைதருள் காணேன்!
விண்ணிடை நின்று விரைவொடு வந்து
வெண்ணகை யொடு விளையாடித்
திண்ணெனக் குதிக்கும் அருவியின் ஒலிதான்
திருச்செவி அடைத்தது கொல்லோ!"

இந்தப் பாடலில் "திண்ணெனக் குதிக்கும்" என்ற இடத்தைக் கொஞ்சம் அழுத்திப் படித்துப் பாருங்கள். அருவி விழும் ஒலி நம் மனச் செவியில் கேட்கிறதல்லவா?

திருச்செவி அடைத்தது கொல்லோ? — இதில் வரும் 'கொல்லோ?' என்ற சொல்லில் உள்ள 'ஓ'காரம் பக்தரின் ஏக்கத்தை நன்றாக வெளிப்படுத்துகிறது.

இந்த நயமான கவிதை வெளிவருவதற்காகத்தான் பரமன் பக்தனுக்கு அருள் செய்யாமல் காலம் தாழ்த்தியிருக்க வேண்டும் என்று நமக்கு நினைக்கத் தோன்றுகிறது.

அதுசரி, இவ்வளவு இனிமையான பாடலை இயற்றியவர் யார்?

தமிழ் மக்களின் இதயத்தில் நீங்காத இடம் பெற்ற அமரர் ரசிகமணி டி. கே. சி. அவர்கள்தாம்.

— வெ. ர. நாகராஜன், சிவகங்கை.

குற்றால அருவி வண்ணப்படம்: **தம்பையா**

"என்னைக் கல்யாணம் செய்துக்கிறதில்லேன்னு முடிவாத் தீர்மானிச்சுட்டீங்களா?"

"ஆமாம், டார்லிங். எனக்கு வேற வழியில்லே..."

"அப்படியானால் சரி, கண்டனுக்காக என்கிட்டே வாங்கிய கடனை எப்போ திருப்பித் தரப் போறீங்க?"

— கடுவை. கோபால்சாமி.





தரகர்: முதல் இரண்டு பெண்களையும் உள்ளூரிலேயே கட்டிக் கொடுத்திங்க; மூணாவது பெண்ணுக்கு மட்டும் வெளிநாட்டு மாப்பிள்ளை பார்க்கச் சொல்றீங்களே, ஏன்?

தொழிலதிபர்: அதுவா...? இவள் மத்த ரெண்டு பேரையும்விட அதிக அழகாச்சே! அதனாலே இவளை 'எக்ஸ்போர்ட் க்வாலிட்டி'யா நினைக்கிறேன்!

— கரம்.

இரண்டாவது சூரியன்

26

பாலகுமாரன்

அந்த மோட்டார் சைக்கிள் மறித்துக் கொண்டு நகர்ந்த போது, ஆட்டோக்காரன் கலவரப்பட்டான். இடதுபக்கம் ஒதுங்கி நின்ற போது, பானுமதி அவனை நிறுத்தச் சொன்னாள்.

"நான் கூப்பிட்டதைப் பார்த்துட்டீங்களா? பார்க்கலையோன்னு நினைச்சேன். எங்கே, ஏதாவது முக்கிய வேலையா?" இறங்கி, பரத்தை நோக்கி நடந்து கேட்டாள்.

பரத் கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"சாவித்திரி டீச்சரை நர்ஸிங் ஹோம்ல மாத்திப் போட்டோம். அப்புறம்... நீங்க பார்த்தீங்களா?"

"இல்லை."

"என்னமோ இருன்னு தோணிச்சு. போய் அந்த டீச்சரைப் பார்த்துட்டு வரலாம்னு..."

"போகலாம். கூட இருக்கிறவங்க ஏதாவது சொல்லுவாங்க."

"அதுக்காகப் போகாமலா இருக்கிறது? பேஷண்ட்டுக்கு ஒரு தெம்பு வருமில்லை. வாரீங்களா, போகலாம். இல்லை, வேற வேலை இருக்கா?"

"நான் வரலை."

"ஏன்?"

"மனசு சரியில்லை."

"ஏன்?"

"ஏன்?' அந்த ஆள் கத்திக் கலாட்டா பண்ணிட்டுப் போயிருக்கான். 'ஏன்னு கேட்டா என்ன அர்த்தம்?"

"அட போங்க மேடம். இதுக்கா பயந்துட்டீங்க? அந்த ஆள் தண்ணி போட்டிருந்தாரு. நிலைமை தெரியாம ஆடிட்டாரு. அதான் கூட்டிக்கிட்டுப் போய்ட்டேன்."

"நீங்க இருந்தீங்க, சரி. இல்லேன்னா...?"

"இல்லேன்னா நீங்கள் ஏதாவது செய்து வெளியே அனுப்பியிருப்பீங்க. பிடிச்சுத் தள்ளியிருந்தாப் போதும். அவரு எழுந்துக்க அரை மணி ஆகும்."

"இது இன்ஸல்ட் இல்லையா?"

"மவுண்ட் ரோடில நின்னுக்கிட்டு இதுக்குப் பதில் சொல்ல முடியாது. ஆட்டோவை அனுப்பிட்டு வாங்க."

"நான் நர்ஸிங் ஹோமுக்கு வரலை."

"வேண்டாம். எங்கேயாவது உட்கார்ந்து பேசலாம் வாங்க."

"எனக்குப் பிடிக்கலை பரத்."

"என்னையா?"

"எல்லாரையும், எல்லாத்தையும். நிம்மதியா வாழவிட மாட்டாங்களோன்னு தோணுது."

"என்ன செய்யப் போறீங்க?"

"தெரியலை. சாகவும் பயமா இருக்கு."

"ஒரு கப் காப்பி குடிச்சுட்டுச் செத்துப் போகலாம் வாங்க. தெம்பா இருக்கும்."

"உங்களுக்கு இன்னும் வாழ்க்கை புரியலை. வாழ்க்கையோட வேதனை புரியலை. எல்லாம் தமாஷ். ஜாலி. என்டெர்டெய்ன்மென்ட்."

"யூ ஆர் ராங் மேடம். என் துக்கம் என்னோட இருக்கு. என்னன்னு நீங்க கேட்டதும் இல்லை; நான் சொன்னதும் இல்லை. சொல்லாது போனதாலேயே இல்லைன்னு நினைச்சுடக் கூடாது. வாங்க போகலாம். எவ்வளவுப்பா மீட்டர்?"

நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்து படியேறி அறை தேடி உள்ளே நுழைந்த போது, படுக்கை காலியாக இருந்தது.

'டிஸ்சார்ஜ் ஆயிட்டாளா? கடவுளே, உனக்கு வந்தனம். மனசு கூவிற்று.

"ஸிஸ்டர் இந்த ரூம்ல, பேஷண்ட் டிஸ்சார்ஜ் ஆயிட்டாங்களா?"

"இல்லை. அடுத்த ப்ளாக்ல இருக்காங்க."

"ஏன்?"

"இடதுகை சரியா வரலை. வேற டாக்டர் பார்க்கிறார்."

"முருகா!"

கிட்டத்தட்ட ஓடினார்கள்.

சாவித்திரியா இது? தலைமயிர் கொட்டிப் போய், கன்னம் ஒட்டி, உதடு கறுத்து, வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தாள். நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டிருக்கிறதாம்!

சாவித்திரியை உலுக்கினாள். அசைவே இல்லை. நெஞ்சுக் கூட்டில் கை வைத்தாள். சூடு இருந்தது. எலும்புகள் புடைத்துத் தெரிந்தன. பிடுங்கிய கிழங்கு மாதிரி இருந்த பெண்ணா இவள்! கன்னம் ஒட்டிப் போனதில் பல் எடுப்பாகி, நாக்கு முழு பலத்துடன் இல்லாது எச்சில் வழியவிட்டு... பார்க்கப்

பார்க்கப் பொங்கியது.

அங்குள்ள ஸிஸ்டர் பேசினாள்: ''நிறைய காம்ப்ளிகேஷன். வருஷம் ஆகும் நடமாட.''

வெளியே வந்தபோது பெரும் பயம் வயிற்றைக் கவ்வி இழுத்தது.

பரத் ஆடிப் போயிருந்தான்.

''டீச்சர் மறுபடியும் வேணா ராயப்பேட்டைல பசர்த்துடலாமா? கேளுங்களேன்.''

''வேணாம், வாங்க.''

''என்னால் முடியும் டீச்சர்.''

''அவங்களாலேயும் முடியும் பரத். வாங்க.''

வண்டியேறி ரெஸ்டாரெண்ட் போனார்கள்.

''ச்சே! சாகறது கூட ஒருத்தருக்குச் சந்தோஷமாயில்லைன்னா, அது எவ்வளவு குரூரம்?''

''புரியலை.''

''வாழ்க்கைதான் வேதனை. சாகறதாவது வலியில்லாம — வேதனையில்லாம வரக் கூடாதா?''

''வாழ்க்கை வேதனைன்னு யார் சொன்னது? நாமாக ஏதாவது நினைச்சுக்கிட்டு நம்மை ஏன் ஹிம்ஸை பண்ணிக்கணும்? அப்புறம் வாழ்க்கையைக் குத்தம் சொல்லணும்?''





கருத்து: கார்த்திக்..

''உங்களுக்குத் தெரியலை பரத்.''

''உங்களுக்குத் தெரியலை. என் பத்து வயசுல, திருப்பதிக்குக் கும்பலா, குடும்பத் தோட போயிருந்தேன். என் சொந்தக்கார அம்மா, முப்பது வயசு. தலைநிறையப் பூ வச்சுக்கிட்டுப் பயபக்தியா க்யூவில நின்னாங்க. கோயிலுக்குள்ளே போனப்போ, குரங்கு தாவித் தலைல இருக்கிற பூவைப் பறிச்சு இழுத்துக்கிட்டுப் போயிடுச்சு. பயந்துட்டாங்க அந்த அம்மா. பக்கத்திலே இருந்தவங்க, இது சாமி குத்தம். முடி எடுக்க றேன்னு வேண்டிக்கிட்டு முடி எடுக்காம இருந்திருப்பேன்னாங்க. அவங்க உடனே எமோஷனல் ஆகிப் போய் முடி எடுத்துக்கிட்டு வந்துட்டாங்க. முடி எடுத்துட்டதும் துக்கமா, அவமானமாப் போயிடுச்சு. ஒரு வருஷம் வெளியில் தலையே காட்டலை. வாழ்க்கை முழுக்கவே மாறிப் போயிடுச்சு. ஒரு வருஷ வேதனை முழுவதும் அப்படியே நின்னுடுச்சு.''

''குரங்கு, பூவைப் பறிச்சது ஒரு ஆக்ஸிடெண்ட். விபத்து. தூரத்திட்டுச் சும்மா இருந்திருக்கலாம். எமோஷனலா ஏதோ செய்துட்டு செய்துட்டேனே, செய்துட்டேனேன்னா? அப்பவே நான் ரொம்ப யோசிக்கிறவன். நமக்குத் துக்கமோ விபத்தோ வரக் கூடாதுன்னு நினைக்கிறோம். வந்தா பரிகாரம்னு கூட துக்கம் தேடறோம். காதல் தோல்வி ஒரு துக்கம். அதுக்கு விஷம் குடிச்சுட்டுக் கைகால் போய் உட்கார்ந்திருக்கிறது ஒரு துக்கம். தேவையா? துக்கத்துக்கு துக்கம் நிவர்த்தியா?''

''உங்க ஐயா குடிச்சுட்டு வர்றது ஒரு துக்கம். அதுக்கு உடனே ஏதாவது நீங்க செய்துக்கணுமா? செய்துட்டுத் துக்கப்படணுமா?''

''நான் ஒண்ணும் விஷம் குடிக்கலை. விஷம் கொடுத்தேன்.''

''யாருக்கு?''

''அந்த ஆளுக்கு.''

''ஐயோ, என்ன செய்தீங்க?''

சொன்னாள்.

''இப்படி எல்லாத்துக்கும் அத்தனை உயரம் போய்ப் புகார் கொடுத்திங்கன்னா உங்க பேர் கெட்டுப் போகும்.''

''என்ன கெட்டுப் போகும்?''

''புருஷன் மேல கம்ளையின்ட் கொடுத்தாங்க. யாரோ ஒரு வீடியோ ஆளை, சப்போர்ட் பண்ணாங்க. எதுனா பேச்சு வரும்.''

''வரட்டும்.''

''தேவையில்லாம என் பேர்ல கோபம் வரும்.''

''வராது.''

''உங்க ஆளுக்கு என்ன கோபம்? எனக்கு உதவி செய்ததுதானே. எனக்காகத் தலை வரிட்டப் போனதுதானே!''

''அது என் விருப்பம்.''

''எனக்கு உதவி கேட்டுப் போய் அவனுக்கு உடல்நலம் தரப் போய்... தப்பாப் பாப்புலர் ஆனீங்களே...''

''தப்பாப் பாப்புலர்னா?''

''உங்களைத் தவறா எடை போடுவார்களே?''

''போடட்டும்.''

''வெறுத்துப் போய்ப் பேசறீங்களா?''

''இல்லை பரத். இன்னிக்கு ஒண்ணு புரிஞ்சுது. உலகம் அவரை வேற கல்யாணம் செய்துக்கோன்னு சொல்லுது. என்னைச் சொல்லலை. ஐயோ பாவம், தனியா இருக்கற பொம்பளைன்னு பரிதாபப்படுது. நான் தனியா இருக்கறது நல்லது'ங்கற மாதிரி பேசுது. எனக்கு வெறுப்பா இருக்கே தவிர, தற்கொலை தோணலை. சாவித்திரி மாதிரி நிச்சயம் ஆயிடக் கூடாது.''

''வெரிகுட். கல்யாணம் பண்ணிக்கங்க...''

''அதுக்கும் மனசுல இடம் இல்லை. அதுவும் பிடிக்கலை.''

''ஏன்?''

''மறுபடி பனியன் தோச்சு, ஜட்டி அலசி, காப்பி கலந்து ஆளை எழுப்பி, தூங்கறாரு சத்தம் போடாதீங்கன்னு பசங்களை அதட்டி... என் வீட்ல ஆம்பளை ராஜ்யம் மறுபடி வரதுல இஷ்டம் இல்லை.''

''வேணாம்.''

''அதே சமயம், ஆண் ஒரு சௌகர்யம்னு தோணுது.''

''கரெக்ட்.''

''ஒண்ணு கசையடி... இல்லை, ஜெயில். இதுல எது வேணும்னு நான் தீர்மானம் பண்ணணும் இப்ப.''

''சும்மா இருங்க மேடம். புருஷனோட சந்தோஷமா இருக்கற பெண்கள் இல்லையா?''

''இல்லை பரத். நூத்துக்குத் தொண்ணூறு பேர் சவுக்கடி வாங்கறாங்க. இல்லை, தனிமை இரவுல இருக்காங்க.''

''கல்யாணமும் தப்பு; தனியாவும் இருக்க முடியாது அப்படியா?''

''யெஸ்.''

''குழப்பமான இடம் இல்லை இது?''

''யெஸ். புருஷன்கிட்டேர்ந்து விவாகரத்து வாங்க எனக்கு தைரியம் கொடுத்தது எது?''

''உங்க நம்பிக்கை.''

''என் நம்பிக்கை எது?''

''உங்க மூளை.''

''கரெக்ட். என் பொருளாதார விடுதலை. நான் சம்பாதிக்க முடியும். என் குழந்தைகளை நான் காப்பாத்த முடியும்ங்கிற நம்பிக்கை. வேற ஒரு விடுதலை வரலை.''

''என்ன விடுதலை?''

''சென்டிமெண்ட் விடுதலை. நீங்கள் சொன்ன திருப்பதி சம்பவம் சென்டிமெண்டலா விழுந்துட்டாங்க. பூவைக் குரங்கு பறிச்சுடுச்சுன்னு உடனே முடியை எடுத்துட்டாங்க. முடி எடுத்தவுடனே முகம் மாறிப் போச்சுன்னு அழுதுட்டாங்க. பாவம் பரத். மகா பாவம். பூ, பொட்டு, முடி, பட்டு, மெட்டி, எல்லாம் சென்டிமெண்ட்ஸ். நாலாயிரம் ரூபாய் சம்பாதிச்சாக் கூட இதிலேர்ந்து தப்பிச்சுட முடியலை. இது புருஷன்கிற ஆளோட சின்னம். குடும்பப் பெண் என்கிற சின்னம். இல்லை?''

''ம்ம்.''

''என் பொட்டுக்கும் என் புருஷனுக்கும் என்ன சம்பந்தம்? என் பூவுக்கும் என் கணவனுக்கும் என்ன முடிச்சு? அலங்காரத்திலே கூட ஆண் ஆதிக்கம் ஏன்? ஆணுக்காக ஏன்? அவனோட அடையாளமா ஏன் அது இருக்கணும்?''

''தேவையில்லை. இப்ப விடோஸ் கூட...''

''மாறிக்கிட்டு வருது. ஆனா, ஆம்பிளைங்கிறது பொம்பளைக்கு ஓர் அலங்காரம். டெக்கரேஷன். அதுக்கு விலை — சுதந்திரம். அடிமைத்தனமில்லை இது?''

''புரியுது.''

''உள்ளே என்னவோ தவிக்குது பரத். நான் ஏன் டைவர்ஸ் பண்ணதாலேயே நோன்பு இருக்கிற மாதிரி தனியாக் கிடந்து சாகணும்?''

''அதாங்க இன்னொரு கல்யாணம்...''

''முடியாது பரத். மேன் ஆப் த ஹவுஸ்ன்னு இனி யாரும் என் வீட்டிலே இருக்க — என்னை அதிகாரம் பண்ண முடியாது. இனிமே என்னால் அடங்கி அனுசரிச்சு வாழ முடியாது. அதிகாரத்தைப் பொறுத்துக்க முடியாது.''

''ஒரு கேள்வி?''

''கேளுங்க.''

''பள்ளிக்கூடத்திலே அனுசரிச்சுப் போகலையா? தெருவிலே அனுசரிச்சுப் போகலையா? வீடு மட்டும் என் அனுசரிச்சுப் போகிற இடமா இருக்கக் கூடாது?''

''குட். நல்ல கேள்வி. பரத், நீங்க தனியான ஆளா, சமூகமா?''

''இரண்டும்.''

''எப்படி?''

''எனக்குன்னு சில உணர்வுகள் இருக்கு; சமூகத்துக்குன்னு சில மதிப்புகள் இருக்கு.''

''உதாரணத்துக்கு?''

''எனக்குப் பசிக்குது. ஊர் சாப்பிட்டால் போதாது. நான் சாப்பிட்டே ஆகணும். அதே சமயம் ஊர் பட்டினி... எனக்கு மட்டும் வேணும்னும் போக முடியாது.''

''இரண்டுக்கும் எது முக்கியம்?''

''என் பசி முதலில். நான் பசியாறிய பிறகு ஊர்ப் பசிக்குத் தீர்வு வரும்.''

''அதாவது நீங்க சந்தோஷமா வயிறு நிறைஞ்சா ஊர் வயிறு நிறைவது முக்கியமாப் படும்.''

''ஆமாம்.''

''அப்ப நீங்க தனியா, சமூகமா? எது முதல்?''

''இரண்டும் முக்கியம். ஆனா நானே முதல்.''

''இதோ என் பதில். தெருவுக்கு நான் எப்ப வர்றேன்? என் வீட்டுச் சமையல் நடந்த பிறகு; நான் சாப்பிட்ட பிறகு, பள்ளிக்கூடத்துக்கு வர்றேன். அனுசரிச்சுப் போறேன். என் வீட்டிலே சோறு எனக்குப் போடலை, பள்ளிக்கூடத்திலே அனுசரிக்க முடியுமா?''

''என்ன செய்யப் போறீங்க?''

''என்னை நான் காப்பாத்திக்கப் போறேன்.''

''எதுலேர்ந்து?''

''என்கிட்டேர்ந்து பரத்.''

பரத் அவளை உறுத்துப் பார்த்தான். அவனுக்குப் புரிந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

தூங்கும் தபால்துறை

ஆறு மாதங்களாகத் தபால் ஊழியர்களின் கடைக்கண் பார்வையில் படாமல் இருந்த தபால் பெட்டியொன்றின் தபால்களுக்குச் சமீபத்தில் சாபவிமோசனம் கிடைத்தது! ரெய்ப்பூரின் 'கங்காலி பாரா' ஊரில் உள்ள இந்தத் தபால் பெட்டியைக் காவல்துறையின் உதவியுடன் திறந்த போது, சுமார் 25,000 தபால்கள் இருந்தன! தீபாவளி, புத்தாண்டு வாழ்த்துக்கள் தவிர, வேலைக்கான விண்ணப்பங்களும் நிறைய இருந்தனவாம்!

தபால் துறையினரிடமிருந்து ''விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்ற வழக்கமான பதில்தான் வந்தது. இதனால் வேலை வாய்ப்புப் பறிபோனவர்களுக்கு என்ன சமாதானம் கூறப் போகிறது தபால்துறை?

— டைம்ஸ் ஆஃப் இந்தியா.

தகவல்: ஆர். அரிகோபி.



புருஷ லட்சணம்

சிவா திரும்பினான். உறுத்தலாய் அவளைப் பார்த்தான். எப்படிச் சிரிக்க முடிகிறது இவளால் அதுவும் இத்தனை மென்மையாக.

''லுக் சிவா... உனக்குக் கோபமிருந்தா, வயிறு என்ன பாவம் பண்ணியது? வா, சாப்பிட வா. தட்டைப் போடறேன்.''

நீ வருகிறாய். உன் பதில் எனக்குத் தேவையில்லை என்பது போன்ற செயல் இது. நம் மீது உள்ள அன்பினால் இப்படிச் சொல்கிறாளா, இல்லை வேலையத்தவன் இழுத்த இழுப்பிற்கு வருவான் என்கிற அலட்சியமா? இல்லை, தான் சம்பாதிக்கிறோம் என்கிற திமிரா?

புரியாமல் பார்த்தான்.

''சிவா.''

வித்யா அவனை உன்னிப்பாய்க் கவனித்தாள். இல்லை, இவன் இன்று சரியில்லை. என்னவோ இருக்கிறது.

''சாப்பிடுப்பா. தட்டைப் பார்த்துச் சாப்பிடு. பொரியல் இன்னும் கொஞ்சம் போடவா? கூட்டு அப்படியே இருக்கு பாரு.''

''வேணாம். போதும்.''

''சிவா...''

''என்னண்ணி?''.

''உங்கண்ணன் ரொம்பக் கவலைப்படறாரு உன்னைப் பத்தி.''

'ஓஹோ' எனச் சிரித்தான்.

''நீ ஏதோ பொறுப்பா இருக்கலை போல ஃபீல் பண்றாருப்பா. சரி சரி சாப்பிடறதை நிறுத்திடாதே. உன்கிட்டக் கொஞ்சம் பேசணும். கோபப்படக் கூடாது.''

''சொல்லுங்க.''

''கோபப்பட்டுப் பாதில எழுந்து போயிடக் கூடாது.''

''இல்லை. சொல்லுங்க.''

''ஏதோ போராட்டம் பண்ணப் போறீங்களாமே கலெக்டர் ஆபீஸ் முன்னால நாளைக்கு?''

''நாளன்னிக்கு. என்ன அதுக்கு?''

''இல்லை. ஜஸ்ட் க்யூரியாஸிடிதான். எதுக்குன்னு தெரிஞ்சுக்கலாம்னு.''

என்ன திமிராகக் கேட்கிறாள். எதுக்குப் போராட்டம் நடத்தப் போகிறோம். இன்னும் நிறைய கிரிக்கெட் மாட்ச் ரிலே பண்ண வேண்டுமென்றா கேட்கப் போகிறோம்? அவனவன் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலைவது தெரியுமா பெண்ணே உனக்கு. போய். உங்களுக்கெல்லாம் விரல் சொடுக்கும் நேரத்தில் வேலை கிடைத்து விடுகிறது. மேக் அப் போட்டுக் கொண்டு போய்ப் பல்லிளித்து கதைப் புத்தகம் படித்து விட்டு வருகிறீர்கள். உங்களுக்கு எப்படிப் புரியப் போகிறது?

''ஒண்ணுமில்லை. வேலை கிடைக்காத இளைஞர்கள் எல்லாம் சேர்ந்து மறியல் பண்ணலாம்னு...''

''ஓ! கோவிச்சுக்காத சிவா. வேலைன்னா என்ன?''

முறைத்தலாய்ப் பார்த்தான்.

''இல்லை. நான் குத்திக் காட்டலை. கிண்டல் பண்ணலை. சொல்லு. வேலைங்கறது நாம யாருக்கோ ஏதோ காரியம் பண்றோம். அதுக்கு – அந்த வேலைக்கு ஊதியம் கிடைக்குது. இதை ஏன் போட்டுக் குழப்பணும்? எல்லாத்துக்கும் அரசாங்கமேதான் வழி காண்பிக்கணுமா?''

''பின்னே நாங்க ஓட்டுப் போடலை? எத்தனை வாக்குறுதி தராங்க..''

''காம் டவுன் சிவா... அரசாங்கம்னா யாரு? நீயும் நானும். இன்னும் பிறரும் தானே!''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு புரியுது அண்ணி. மேடைல பேசலாம் நீங்க. பிரமாதமா அப்ளாஸ் வாங்குவீங்க.''

வெறுமே புன்னகை செய்தாள் வித்யா.

''உங்களுக்குத் தெரியாது எங்க அவஸ்தை. ஒவ்வொரு வேலைக்கும் குறைஞ்சது பத்தாயிரம் பேர் அப்ளிகேஷன் போடறோம். ஏதோ ரிடர்ன் டெஸ்ட், இண்டர்வியூன்னு பேர் பண்ணி எவனுக்காவது சிபாரிசுல குடுத்திடறாங்க. இதெல்லாம் அனுபவிச்சாத்தான் மனசில வலி புரியும்.''

கை அலம்பிவிட்டு எழுந்தான்.

''சிவா.''

திரும்பினான்.

''நாளைக்கு என் கூட ஷாப்பிங் வர சௌகர்யப்படுமா உனக்கு?''

''வரேன்.''

தெப்பக்குளம் வெகு பிஸியாய் இருந்தது. சந்தோஷ முகங்களுடன் மனிதர்கள். இவர்கள் எல்லோருக்கும் வேலை இருக்கிறது. வாழ்க்கை இருக்கிறது. வாழ்வதற்கு ஓர் அர்த்தம் இருக்கிறது, என்னைத் தவிர எனப் புழுங்கினான் சிவா.

''சிவா... அடுத்த வாரம் உன் பர்த்டே இல்லையா!''

யாருக்கு நினைவிருக்கிறது அதெல்லாம். அதற்கெல்லாம் ஒரு தகுதி வேண்டும்.

''தெரியலையண்ணி.

''எனக்கு ஞாபகமிருக்கு.. வா, உனக்கு ஒரு ஸெட் டிரஸ் எடுத்துரலாம்.''

''எனக்கு வேணாம்.

''ஏன்?''

''இல்லை. என்கிட்டதான் டிரஸ்

விஜயநிலா

இருக்கே. எதுக்கு அனாவசியமா?''

''இந்த மாதிரி சின்னச் சின்ன சந்தர்ப்பங்கள் எல்லாம் லைப்ல நம்மனை ரிலாக்ஸ் பண்ணிக்கிறதுக்காகக் கொண்டாடறது சிவா. வா, மறுக்காதே. அப்படியே உங்க அண்ணனுக்கும் டிரஸ் எடுக்கணும்.''

அவளே பார்த்துப் பார்த்துத் தேர்வு செய்தாள், நவீன டிசைனாக, புதிய வெரைட்டியாக...

''நல்லா இருக்குதானே? குட். இப்ப அவருக்கு டிரஸ் எடுக்கணும். நீயே ஸெலக்ட் பண்ணிடு சிவா. உனக்குத் தான் உங்கண்ணன் டேஸ்ட் தெரியும்.''

பார்த்தான்.

டேபின் முழுக்க டிஸைன், டிஸைனாக ஷர்ட் பீஸ். அப்புறம் ஹாங்கரில் வரிசையாய் பாண்ட்...

எதை எடுக்கலாம்? டிஸைன் பரவாயில்லை. ஆனால் இந்த கலர் அண்ணனிடம் இருக்கிறது.ம்ஹூம். இது வேணாம். இது பரவாயில்லை.

எடுத்துப் பிரித்து, நிராகரித்துக் கடைசியில் ஒரு ஸெட் தேர்வு செய்தான்.

வெளியே வந்தனர். மனத்தில் கொஞ்சம் உற்சாகம் வந்து உட்கார்ந்து கொண்ட மாதிரி இருந்தது.

''வா சிவா... காப்பி சாப்பிட்டுப் போவோம்.''

ஹோட்டலுக்குள் நுழைந்தனர். மெலிதான கூட்டமிருந்தது. கடைசி டேபிளுக்குச் சென்றனர்.

''டிபன் சாப்பிடறியா? சரி லைட்டா ஏதாவது? ரெண்டு கட்லட். அப்புறம் காப்பி...''

சொன்னாள்.

''சிவா, நேத்து என்ன சொன்னே நீ...? எத்தனை ஆயிரம் பேரைச் சுலபமா ரிஜக்ட் பண்றாங்கன்னுதானே!''

''அதுக்கென்ன இப்போ. அதான் இந்த நாட்டிலே வழக்கமாயிடுச்சே.''

''தப்பு சிவா. போட்டி அதிகமாயிடுச்சு. அவ்வளவுதான். இப்பப்பாரு, நீயே எத்தனை டிரஸ்ஸை ரிஜெக்ட் பண்ணினே. அதெல்லாம் நல்லா இல்லைன்னா அர்த்தம்? இல்லை சிவா. நிஜத்தைப் புரிஞ்சுக்கணும். வேலையை நீ தேடாதே சிவா. உன்னை எஸ்டாபிளிஷ் பண்ணிக்கோ, உனக்கு விருப்பமான துறையிலே. அப்புறம் பாரு. எல்லாம் தானாகத் தேடி வரும்.''

புரிந்தது.

''நாளைக்கு என்ன, போராட்டத்துக்குப் போறியா சிவா?''

''இல்லை அண்ணி. ஆனா போராடப் போறேன். என் திறமைகளை வெளிக் கொண்டு வர்றதுக்கு.''

வித்யா அழகாய்ப் புன்னகை செய்தாள்.





திசை மாறும் அம்புகள்

"இதை விடப் பெரிய பானையா இல்லையாப்பா?'' — கேட்டவனின் குரலில் அதிகார தோரணை இருந்தது. பேண்ட்டும், டீ சர்ட்டும் போட்டிருந்தான். பெரிய மீசை. சரியாகச் சீவப்படாத தலை. பெரிய மனித் தரா, பேட்டை ரௌடியா என்று இனங்காண முடியாத இடைப்பட்ட உருவ அமைப்பு.

''இதுவே பெரிசுதானே சார்...? இதை விடப் பெரிசு எதுக்கு சார்...? இந்தப் பானை நல்லாயிருக்கும் சார்... எடுத்துக்குங்க சார்...'' — பவ்யமாக, வார்த்தைக்கு வார்த்தை 'சார்' போட்டுப் பேசினார் பெரியசாமி.

''அட, அது இல்லேப்பா! எனக்கு ஒரு... அம்பது லிட்டர் புடிக்கிற மாதிரி வேணும்ப்பா...'' — மீண்டும் அதட்டல் குரலில் பேசினான்.

''அம்பது லிட்டர் சைஸா...? அவ்வளவு பெரிசு இப்ப இல்ல சார்...''

''எனக்கு இப்பவே வேண்டாம்ப்பா... ரெண்டு, மூணு வாரத்துக்குள்ளே செய்து கொடுத்தாப் போதும். ஒரு அம்பது பானை தேவைப்படுது....

''அம்பது பானையா? எதுக்கு சார் அத்தனை பானை...?'' — பெரியசாமி வியப்பு மேலிடக் கேட்டார். ஒரு பெரிய ஆர்டர் கிடைத்து விட்ட சந்தோஷம் அவர் குரலில் இருந்தது.

''அட, நம்ம ஆத்துக் கோவில் திருவிழா வருதில்லே அடுத்த மாசம்? அதுலே தண்ணீர்ப் பந்தல் வைக்கிறதா வேண்டியிருக்கோம். வரிசையாப் பத்து இருபது இடத்திலே தண்ணீர்ப் பந்தலும், நீர்மோர்ப் பந்தலும் வைக்கப் போறோம்...''

''தண்ணிப் பந்தலுக்கா சார்...? ஒரு பானை இருபது ரூபா ரேட் ஆகும் சார்...'' — எங்கே கிராக்கி கை நழுவி விடுமோ என்ற பயத்தோடு, தயங்கியபடியே சொன்னார்.

''சரி, சரி பதினைஞ்சு ரூபா ரேட் போட்டுக்கோ....''

''கட்டுபடியாகாது சாமி...'' — அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடியே நெளிந்தார்.

''சரி சரி... இந்தா அட்வான்ஸ் அம்பது ரூபா... ரெண்டு வாரத்துக்குள்ளே குடுத்துடணும். லேட் பண்ணிடாதே...''

மகிழ்ச்சியோடு வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்ட பெரியசாமி, எல்லாப் பற்களையும் பளீரெனக் காட்டிக் கள்ளங்கபடமின்றிச் சிரித்தார்.

'ராஜ்கோகுல்'

பெரியசாமி உற்சாகத்தோடு செயல்படத் துவங்கினார். அவர் மனைவி கற்பகம் அதை விட உற்சாகமாக அவருக்கு உதவிக்கு வந்தாள்.

வாடகைக்கு வண்டி பிடித்து, மூன்று மைல் தாண்டியிருந்த ஏரியில் இருந்து மண் கொண்டு வந்து சேர்த்தார். குப்பை கூளம் நீக்கிச் சுத்தம் செய்து, மண் கட்டிகளை உடைத்து விட்டுச் சீராக்கி, நீர் தெளித்து ஊற வைத்தார்.

ஏற்கெனவே பதப்படுத்தி, சாக்குப் போட்டு மூடியிருந்த களிமண்ணில் இருந்து பெரிய துண்டாக அறுத்துக் கொண்டு வந்து சக்கரத்தில் வைத்தாள் கற்பகம். வலது காலை மடக்கி, இடது காலை நேராக நீட்டி, சக்கரத்தின் முன் அமர்ந்த பெரியசாமி, களிமண்ணைச் சக்கரத்தின் மையத்தில் வைத்து ஒழுங்குபடுத்தினார்.

''எப்படியோ குணசீலத்துப் பெருமாளு ஒரு வழி காண்பிச்சுட்டார். சரகுவை கைப் புள்ளையோட எப்படி வெறுங்கையோட அனுப்பறதுன்னு மலைச்சுக் கிடந்தேன். தலைச்சன் குழந்தையா வேற இருக்கு. முழுசா ஆயிரம் ரூபா கிடைக்குமில்லே மாமா....?'' — ஆவலோடு கேட்டாள் கற்பகம்.

''ஆமாம் கற்பகம். பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசாம, அம்பது ரூபாயை அட்வான்ஸ் கொடுத்துட்டுல்லே போயிருக்கார்...'' — அவரது பேச்சில் பெருமையும், பெருமிதமும் நிறையவே தெரிந்தன.

''அப்படின்னா காலுக்கு வெள்ளிக் கொலுசும், வெள்ளியிலேயே இடுப்புக் கயிறும் வாங்கிக் கொடுத்துடலாம்.''

''கவலையேபடாதே கற்பகம். உன் ஆசைப்படியே எல்லாத்தையும் ஜாம் ஜாம்னு செய்து அனுப்பிடுவோம். நமக்கு இருக்கிறது ஒரே மகள். அவளுக்கு இல்லாம வேற யாருக்குச் செய்யப் போறோம்...''

வீட்டின் உள்ளே அரிசி களைந்து கொண்டிருந்த சரஸ்வதியின் காதுகளில் தந்தையின் பேச்சு தேனாய் இனித்தது. கையை உதறிக் கொண்டு எழுந்து போனவள், தொட்டிலை நெருங்கிக் குனிந்து, தூங்கிக் கொண்டிருந்த மகனின் கன்னத்தில் முத்தமிட்டாள். ''நீ அதிர்ஷ்டக்காரன்டா, பயலே...!'' என்றாள்.

"என்னடா ஆச்சு போன வேலை?'' அதட்டலாகக் கேட்டார் முதலாளி.

''முடிச்சிட்டேன் முதலாளி. அட்வான்ஸ் குடுத்துட்டேன். ரெண்டு வாரத்துல பானை யெல்லாம் வந்து சேர்ந்துடும் முதலாளி.''

''சட்டுப் புட்டுன்னு செய்து முடிங்க. சீக்கிரம் ஆரம்பிச்சாத்தான், ஆத்துத் திருவிழா வுக்குச் சமாளிக்க முடியும்... திருவிழா வேற நெருங்கிடுச்சு... போ... போ... போய் வேலையைக் கவனி.''

அடுத்த பதினைந்து நாட்கள் ரொம்ப வேகமாக ஓடின. அந்தப் பதினைந்து நாட்களும் பெரியசாமிக்கு சோதனைக் காலமாக அமைந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

அவர் பானைகளைச் செய்து உலர வைக்க முற்பட்ட போது, பருவம் தவறிய மழையாக அடை மழை பிடித்துக் கொண்டு பிய்த்து உதறியது. நான்கைந்து நாட்கள் சூரியனையே பார்க்க முடியவில்லை. உலர வைக்க இடமில்லாததால் வேலை நின்று போனது.

அவர் துவண்டு போனார். கற்பகமும் நம்பிக்கையிழந்து பேச ஆரம்பித்து விட்டாள்.

ஒரு வழியாக மழை விட, வேலையை மீண்டும் சுறுசுறுப்பாகத் தொடங்கினார் பெரியசாமி. இரவு, பகல் பாராமல் தொடர்ந்து சக்கரத்தைச் சுழற்றினார்.

அம்மாவும், மகளும் செட்டியார் கடைக்குப் போய் கொலுசு, அரைஞாண் கயிறெல்லாம் பார்த்து வைத்து விட்டு வந்தாயிற்று.

விறகுக் கடைக்காரரிடம் கெஞ்சிக் கடன் சொல்லி விறகும், ஒரு வண்டி தேங்காய் உரிமட்டையும் வாங்கி வந்தார். கற்பகம் அடுத்த தெருவில் போய் ஆயிரம் விராட்டிகள் வாங்கி வந்தாள் — அதுவும் கடன்தான்!

பானைகளை அடுக்கிச் சூளை வைத்தாயிற்று. சூளையைப் பிரித்துப் பானைகளைச் சோதித்து, நல்ல பானைகளாக ஐம்பது பானைகளைத் தேர்ந்தெடுத்துத் தனியாக அடுக்கியும் ஆகி விட்டது!

ஆர்டர் கொடுத்தவரின் வருகைக்காகக் காத்திருந்தது பெரியசாமியின் குடும்பம்.

"**ஜீ**ப்பை அந்த மண் ரோடில் விடு'' —





"தலைவர் ஏன் அந்தரங்கச் செயலாளரை இப்படித் திட்டுகிறார்?"

"ராஜினாமா அறிக்கையை முதலில் பத்திரிகைகளுக்குக் கொடுக்காமல், மறந்து போய், அடுத்த நாள் தர வேண்டிய ராஜினாமா வாபஸ் அறிக்கையை முதலில் கொடுத்து விட்டாராம்!"

— எஸ். ப்ரியதர்சினி.

டிரைவருக்கு உத்தரவிட்டார் சப்–இன்ஸ்பெக்டர்.

காவேரிக் கரையில் பரந்து கிடந்த சவுக்குத் தோப்பின் ஊடே நுழைந்து சென்ற மண் சாலையில் ஜீப் ஊர்ந்தது. ஆள் நடமாட்டமே இல்லாமல் விரிந்து சென்றது மணல்வெளி.

"லெஃப்ட்லே தெரியுதே மாந்தோப்பு மாதிரி, அந்தப் பக்கம் போ...."

இடது பக்கம் சிறிது தூரம் சென்றதும் ஜீப் நின்றது.

"பெரிய பள்ளமா இருக்கு சார். வண்டி போகாது சார்..." என்று சொன்னான், திரும்பிப் பார்த்த டிரைவர்.

குதித்து இறங்கிய சப்–இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து, மூன்று போலீஸ்காரர்களும் குதித்து ஓடினார்கள்.

தோப்பில் இருபது முப்பது ஆட்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே பெரிய பெரிய பானைகளின் கீழே நெருப்பு நிதானமாக எரிந்து கொண்டிருந்தது.

தோப்பு முழுவதும் அழுகிய பழ வாடை.

சப்–இன்ஸ்பெக்டர் ஓட, கான்ஸ்டபிள்களும் ஓடினார்கள். ஓடி வரும் காக்கிச் சட்டைகளைப் பார்த்ததும், ஆங்காங்கே நின்றிருந்த ஆட்களும் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தார்கள்.

"ஏய் ஓடாதே நில்லு... ஓடாதே...! பிடிங்க அவனுங்களை..." எஸ். ஐ. கத்திக் கொண்டே ஓடினார்.

இரண்டு பேர் மட்டும் ஓடாமல் நின்றார்கள். அவர்களில் ஒருவன் பெரிய மீசைக்காரன் — பெரியசாமியிடம் ஆர்டர் கொடுத்தவன்!

"எய்? என்னடா பண்றீங்க? சாராயமா காய்ச்சுறீங்க..." — எஸ். ஐ. அடிக்க ஓங்கினார்.

"சார்... சார்... அடிக்காதீங்க சார்... முதலாளி நாங்க இல்லே சார்...."

"முதலாளியா...? யாருடா உங்க முதலாளி...?"

அவன், அவனது முதலாளி யார் என்று சொன்ன போது எஸ். ஐ. அதிர்ந்தார். ஓங்கிய கையை 'வாபஸ்' வாங்கிக் கொண்டார்!

"என்னய்யா கதை உடுறியா...? எதுக்குய்யா இவ்வளவு பெரிய பானைகளைச் செஞ்சே...? எங்கே சாராயம் காய்ச்சுறே...? மரியாதையா உண்மையைச் சொல்லு..." — எஸ். ஐ. கோபமாகக் கேட்டார்.

"இல்ல சார்... அதெல்லாம் எனக்குத் தெரியாது சார்... ஓர் ஆள் வந்து, தண்ணீர்ப் பந்தலுக்காக ஆர்டர் கொடுத்தார் சார்...." — பயந்து விழித்த பெரியசாமி சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"என்னய்யா நானும் ஒரு மணி நேரமாக் கேட்கிறேன். சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்கியே...? என்னை என்ன இளிச்சவாயன்னு நெனைச்சியா...?" கோபம் கடுமையாகியது. அருகே அடுக்கியிருந்த பானைகளை லத்தியால் ஓங்கி, ஓங்கி அடித்தார். பூட்ஸ் காலால் உதைத்துத் தள்ளினார். அடுக்கியிருந்த பானைகள் சரிந்து நொறுங்கின.

பெரியசாமியும் நொறுங்கிப் போனார். கட்டுப்படுத்த முடியாமல் கண்கள் குளமாயின.

கூட வந்திருந்த கான்ஸ்டபிள்கள் தங்கள் பங்குக்கு, ஆளுக்குக் கொஞ்சம் பானைகளை உடைத்தார்கள்.

கற்பகம் கதறி அழுதாள். சரசு சப்தமில்லாமல் கண்ணீரைக் கொட்டிக் கொண்டு நின்றாள்.

"சரி, சரி நீ இப்படியெல்லாம் கேட்டாச் சொல்ல மாட்டே. ஏறு ஜீப்பிலே. ஸ்டேஷன்லே வா உன்னைப் பேசிக்கிறேன்." கத்தியபடியே பரமசிவத்தை இழுத்துத் தள்ளிக் கொண்டு போய் ஜீப்பில் ஏற்றினார் எஸ். ஐ.

கற்பகம் தலையில் அடித்துக் கொண்டு அழ, ஜீப் பெரியசாமியுடன் சீறிப் புறப்பட்டது.

அவர்கள் பெரியசாமியைத் தள்ளிக் கொண்டு, ஸ்டேஷனுக்குள் நுழையும் போதே போன் அலறியது.

பேசியவர் எஸ். பி.

"சார்... குட்மார்னிங் சார்... நான் எஸ். ஐ. பேசறேன் சார்..."

"என்னய்யா பண்றீங்க? உங்க ஏரியாவிலே கள்ளச் சாராயம் தண்ணியா ஓடுதுன்னு பெட்டிஷன் வந்து குவியுது. நீங்கள்லாம் என்ன தூங்குறீங்களா...?" எஸ். பி. கோபமாகக் கேட்டார்.

"எங்கக் காய்ச்சுராங்கன்னு ஸ்பாட் பண்ண முடியலை சார். அடிக்கடி இடத்தை மாத்திடறாங்க சார். அது விஷயமாத்தான் சார் இப்ப ஒரு ஆளை அரெஸ்ட் பண்ணி இழுத்துக்கிட்டு வந்திருக்கேன் சார். விசாரிக்கிற விதத்திலே விசாரித்து, இரண்டொரு நாளிலே கண்டுபிடிச்சுடலாம் சார்..." — எஸ். ஐ. பேசிக் கொண்டே போனார்.

சோர்ந்து போன பெரியசாமி 'விசாரணை'க்காகக் காத்திருந்தார்!



அத்தியாயம் 52

விடுதலைக்குத் தடை

மணிமேகலைக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று குந்தவைப் பிராட்டி யோசித்தாள். அவளுடைய உள்ளம் தாங்க முடியாத துயரத்தினாலும் கவலையினாலும் குழம்பியிருந்தபடியால், யோசனை ஒன்றும் தோன்றவில்லை.

அச் சமயத்தில் அரண்மனை வாசலில் பெரியதொரு கோஷம் எழுந்தது.

"வானதி! அது என்னவென்று பார்! சக்கரவர்த்தியின் மனோ நிலையையும் உடல் நிலையையும் கூட இந்த ஜனங்கள் மறந்து விடுகிறார்கள்! இப்படி ஆரவாரம் செய்கிறார்கள்!" என்றாள்.

வானதி அரண்மனையின் முகப்பில் சென்று எட்டிப் பார்த்து விட்டு உடனே அவசரமாகத் திரும்பி வந்தாள். மிகுந்த பரபரப்புடன், "அக்கா! அவர் வந்து கொண்டிருக்கிறார்!" என்றாள்.

"அவர் என்றால் யார்?" என்று புன்னகையுடன் கேட்டாள் குந்தவை.

"அவர்தான், அக்கா! உங்கள் தம்பி!"

உடனே குந்தவை, "சரி; அப்படியானால் நீ இந்தப் பெண்ணைச் சற்று அப்பால் அழைத்துக் கொண்டு போ!" என்று சொன்னாள்.

வானதி தயங்குவதைப் பார்த்து விட்டு, "சீக்கிரம் போ! உன்னைப் பார்க்காமல் அவன் போய் விட மாட்டான். நான் உனக்குச் சொல்லி அனுப்புகிறேன்" என்றாள் இளையபிராட்டி குந்தவை.

வானதி மணிமேகலையின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அப்பால் சென்றதும், பொன்னியின் செல்வன் அந்த இடத்துக்கு வந்தான்.

"தம்பி! இது என்ன? நீ போகுமிடமெல்லாம் ஜனங்கள் கூடிக் கூச்சல் போடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அவர்களை அரண்மனை வாசலுக்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டாயே? மனம் புண்ணாகி வேதனையில் ஆழ்ந்திருக்கும் சக்கரவர்த்தியின் காதில் இந்த ஜனங்களின் கூச்சல் விழுந்தால் அவருக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்?" என்றாள்.

"நான் என்ன செய்யட்டும், அக்கா! எனக்கு மட்டும் மனவேதனை இல்லாமலா இருக்கிறது? கரிகாலருடைய வீரத் திருமேனி எரிந்து சாம்பராவதற்குள்ளே இந்த ஜனங்கள் 'அருள்மொழிக்குப் பட்டம்' என்று கூச்சல் போடத் தொடங்கி விட்டார்கள். இந்தக் கூச்சல் எனக்குக் கர்ண கடூரமாக இருக்கிறது. ஒவ்வொரு சமயம் ஒருவரிட

அமரர் கல்கி

மும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போய் விடலாமா என்று எண்ணுகிறேன். அப்படிச் செய்தால் குழப்பம் இன்னும் அதிகமாகி விடுமோ என்றும் பயமாயிருக்கிறது. மதுராந்தகரும் சிற்றரசர்களும் சூழ்ச்சி செய்து என்னையும் கொன்று விட்டார்கள் என்று ஜனங்கள் நம்பினாலும் நம்புவார்கள். அதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களை நினைத்தால் என் உள்ளம் திடுக்கிட்டு நடுங்குகிறது....''

''ஆம், ஆம்! அம்மாதிரி ஒருகாலும் செய்து விடாதே! அந்த எண்ணத்தையே விட்டு விடு! ஜனங்கள் நினைப்பது ஒரு புறம் இருக்கட்டும். சக்கரவர்த்தியின் நெஞ்சு நிச்சயமாகப் பிளந்து போய் விடும். மந்தாகினி தேவியையும், கரிகாலனையும் நினைந்து நினைந்து அவர் துயரப்பட்டுக் கொண்டிருப்பது போதும்!'' என்றாள் இளையபிராட்டி.

''ஆகையினால்தான் நான் ஓடிப் போகத் தயங்குகிறேன். எப்படியாவது ஜனங்களுக்கும் வீரர்களுக்கும் நல்ல வார்த்தை சொல்லி மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட அவர்களுடைய சம்மதத்தைப் பெறுவதற்குப் பார்க்கிறேன். நான் பேசும்போதெல்லாம் ஜனங்களும் வீரர்களும் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்பால் திரும்பியதும் உடனே பழையபடி கோஷம் போடத் தொடங்கி விடுகிறார்கள். நான் அவர்களுடைய மனத்தை மாற்றி விட்டதாக நினைத்துக் கொண்டு இப்பால் வருகிறேன். உடனே திருக்கோவலூர்ப் பாட்டனும் கொடும்பாளூர் வேளானும் போய்ப் படை வீரர்களுடைய மனத்தை மாற்றி விடுகிறார்கள்! அக்கா! அவர்களைப் பற்றி உன்னிடம் சொல்லத்தான் வந்தேன். மலையமானையும் வேளாரையும் நீ அழைத்துப் பேச வேண்டும். நான் எது சொன்னாலும் அவர்கள் காதில் வாங்கிக் கொள்வதில்லை. நீ சொன்னால் ஒருவேளை கேட்பார்கள்...''

''நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன், தம்பி! அவர்கள் பிடிவாதத்தை மாற்ற முடியவில்லை. வேறு ஏதேனும் உபாயத்தைத்தான் பார்க்க வேண்டும்.....''

''அக்கா! வேளாரிடம் நீ ஒரு செய்தியைக் கூறியிருக்க மாட்டாய். அதைச் சொன்னால் அவர் ஒருவேளை எனக்குப் பட்டம் கட்டுவதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்க மாட்டார்.''

''அது என்ன, தம்பி!''

''உன் தோழி வானதி செய்திருக்கும் சபதத்தைப் பற்றிக் கூற வேண்டும். அவள் என்னோடு சிங்காதனத்தில் அமருவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறாள் அல்லவா? அதைப் பற்றிச் சொன்னால், பெரிய வேளாருக்கு எனக்குப் பட்டம் கட்டுவதில் அவ்வளவு சிரத்தை இல்லாமல் போய் விடும்.''

''தம்பி! அதை நான் அவரிடம் சொல்லவில்லையென்றா நினைத்தாய்? சொல்லியாகி விட்டது. அதற்கு அவர் என்ன சொல்கிறார், தெரியுமா! 'ஒரு சிறு பெண்ணின் மூடத்தனத்துக்காக ஒரு பெரிய ராஜ்யத்தைப் பாழாக்கச் சொல்கிறீர்களா? வானதி இல்லா விட்டால், இந்தப் பாரத தேசத்தில் நூறு இளவரசிகள் அருள்மொழிக்கு மாலையிடக் காத்திருக்கிறார்கள். சிங்காதனம் ஏறச் சொன்னாலும் ஏறுவார்கள்; கழு மரத்தில் ஏறச் சொன்னால் கூட ஏறுவார்கள்!' என்று சேநாதிபதி கூறி விட்டு வானதியை ஒரு கோபப் பார்வை பார்த்தார். அந்தப் பெண் நடு நடுங்கிப் போய் விட்டாள்!''

அருள்மொழிவர்மன் புன்னகை புரிந்து, ''நல்ல வேளையாக அப்பொழுது மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விடவில்லையே!'' என்று சொல்லிக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தான்.

''வானதியை ஒரு காரியமாக அனுப்பியிருக்கிறேன்'' என்றாள் இளையபிராட்டி.

''அக்கா! நீயும் வானதியும் என் கட்சியில் உறுதியாக இருந்தால் ஒரு மாதிரி சமாளிக்கலாம். நாம் இருவரும் சக்கரவர்த்தியிடம் செல்வோம். சக்கரவர்த்தியின் கண்டிப்பான கட்டளைக்குத்தான் இந்தக் கிழவர்கள் இருவரும் கீழ்ப்படிவார்கள்...''

''அதற்கும் ஓர் இடையூறு இருக்கிறதே, தம்பி! செம்பியன் மாதேவி குறுக்கே நிற்கிறார்களே? நாம் சொல்வதற்கு விரோதமாக அவர் பிடிவாதமாகச் சொன்னால், நம் தந்தைதான் என்ன செய்வார்! அவருடைய மனதே பேதலித்துப் போனாலும் போய் விடும். ஆகையால் இது விஷயமாகச் சக்கரவர்த்தியைத் தொந்தரவு செய்யவும் எனக்குப் பயமாயிருக்கிறது.''

''அப்படியானால் நாம் இருவரும் சேர்ந்து செம்பியன் மாதேவியைத்தான் பிரார்த்தனை செய்து கேட்டுக் கொள்ள வேண்டும். அவருடைய மனத்தை மாற்ற முயல வேண்டும். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டக் கூடாது என்று அவர் பிடிவாதம் பிடிப்பதற்குக் காரணம் நாம் ஊகித்தது தான். சற்று முன்னால் முதன் மந்திரி அநிருத்தர் வீட்டில் அவரைச் சந்தித்தேன். மதுராந்தகரிடம் இன்றைக்குத்தான் அவர் உண்மையைக் கூறினார். 'நீ என் மகன் அல்ல' என்று சொன்னதும், நம் சித்தப்பாவின் முகத்தை நீ பார்த்திருக்க வேண்டும்.



களை சொட்டும் அவருடைய அழகிய முகம் கோர ராட்சதனின் முகம் போல் மாறி விட்டது. நல்லவேளையாக அந்தச் சமயம் நான் போய்ச் சேர்ந்தேன்.....''

''அப்படியா? அப்புறம் என்ன நடந்தது?'' என்றாள் குந்தவை.

''பாட்டியின் முன்னால் கைகூப்பி நின்று, 'அம்மா! மதுராந்தகர் தங்கள் வயிற்றில் பிறந்த மகன் அல்ல என்பதை நானும் அறிவேன். அதனால் என்ன? தாங்கள் அருமையாக வளர்த்த புதல்வர் தங்கள் புதல்வரே அல்லவா? ஆகையால் அவர்தான் மகுடம் சூட்டிக் கொள்ள வேண்டும்' என்றேன்....''

''அதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி என்ன பதில் கூறினார்?''

''அவர் பதில் கூறுவதற்கு முன்னால் திரும்பி வந்து விட்டேன்....''

''தம்பி! மதுராந்தகர் செம்பியன் மாதேவியின் புதல்வர் இல்லாவிட்டாலும், வேறு வகையில் அவருக்கு இந்தச் சோழ சிம்மாதனத்துக்கு உரிமை உண்டு என்று நீ சொல்லவில்லையா? அவரும் நம் தந்தையின் புதல்வர், உன் தமையன் என்று கூறவில்லையா?''

''சொல்லவில்லை, அக்கா!''

''ஏன், தம்பி! அதனால் நம் தந்தைக்குக் களங்கம் உண்டாகும் என்று அஞ்சினாயா? அல்லது பின்னால் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணினாயா?''

''இல்லை, அக்கா! நீயும் நானும் இத்தனை நாளும் அதைப் பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கை ஆதாரமற்றது என்று அறிந்தேன். அதனால்தான் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.....''

''அது எப்படி, தம்பி!''

''ஆம், அக்கா! முதன் மந்திரி அநிருத்தருக்கு அந்தச் செய்தியெல்லாம் நன்றாய்த் தெரியும். நம் தந்தை ஈழத் தீவிலிருந்து திரும்பி வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மதுராந்தகரும் நந்தினியும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தார்களாம். ஆகையால், அவர்கள் நம் உடன் பிறந்தவர்களாக இருக்க முடியாதல்லவா?'' என்றான் அருள்மொழி.

குந்தவை சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு, ''அருள்மொழி! இது தெரிந்தும் நீ மதுராந்தகருக்குப் பட்டத்தைக் கொடுப்பதற்கு விரும்புகிறாயா?'' என்று கேட்டாள்.

''ஆம், அக்கா! எப்படியும் மதுராந்தகர் மந்தாகினி தேவியின் வயிற்றில் பிறந்த புதல்வர். செம்பியன்மாதேவி எடுத்து வளர்த்த புதல்வர். எனக்கோ இராஜ்யம் ஆளுவதில் சிறிதும் ஆசை கிடையாது! உன் தோழி வானதிக்கும் சிங்காதனம் ஏறும் விருப்பம் இல்லை......''

''தம்பி! இராம கதையில் பரதர் தமக்குக் கிடைத்த இராஜ்யத்தை வேண்டாமென்று சொல்லி இராமரை அழைத்து வரப் போனார். குஹன் இதை அறிந்ததும் 'ஆயிரம் இராமர் உனக்கு இணையாக மாட்டார்' என்று கூறினானாம். 'ஆயிரம் பரதர்கள் உனக்கு இணையாக மாட்டார்கள்' என்று சோழ நாட்டு மக்கள் சொல்லப் போகிறார்கள்.....''

''பிற்பாடு அவர்கள் எது வேணுமானாலும் சொல்லட்டும். இச் சமயம் என்னை விட்டால் போதும் என்றிருக்கிறது. அக்கா! கடைசியாக, நான் ஒரு யுக்தி கண்டுபிடித்து மனத்திற்குள் வைத்திருக்கிறேன். அதைப் பற்றி உன் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்....''

''அது என்ன யுக்தி, தம்பி!''

''குடந்தைக்கு அருகில் பழுவேட்டரையர்கள் படை திரட்டிச் சேர்த்து வருகிறார்கள் என்பது தெரியும் அல்லவா....?''

''ஆமாம்; அவர்களுடன் பல சிற்றரசர்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரியும். ஆனால் அது மிகவும் சிறிய படை என்று கேள்விப்படுகிறேன். நம் பாட்டனாரும் வேளாரும் இங்கே வைத்திருக்கும் படையோடு போனால் மூன்றே முக்கால் நாழிகையில் அந்தப் படையை அழித்து விடுவோம் என்று சொல்கிறார்களே?''

''அப்படி ஒன்றும் நேராமலிருப்பதற்குத்தான் யுக்தி செய்திருக்கிறேன். ஒருவருக்கும் தெரியாமல் நான் மட்டும் ஒரு குதிரை மேல் ஏறிக் கொண்டு போய்ப் பழுவேட்டரையர்களிடம் என்னை ஒப்புக் கொடுத்து விடப் போகிறேன். அவர்கள் என்னைச் சிறைப்படுத்தி விடுவார்கள். அப்புறம் நம் பாட்டன் மலையமானும் சேநாதிபதி பெரிய வேளாரும் ஒன்றும் செய்ய முடியாது அல்லவா?''

குந்தவை மூக்கில் விரல் வைத்து அதிசயித்து விட்டு, ''அற்புதமான யுக்திதான், தம்பி! ஆனால் அதிலும் ஒரு சிறிய அபாயம் இருக்கிறது!'' என்றாள்.

''அது என்ன, அக்கா?''

''நீ பழுவேட்டரையர்கள் இரட்டும் படையை அடைந்ததும், அந்தப் படையில் உள்ள வீரர்கள் என்ன செய்வார்கள், தெரியுமா? 'அருள்மொழிவர்மர் வாழ்க!'



'பொன்னியின் செல்வருக்கே பட்டம்!' என்று கூச்சலிடத் தொடங்குவார்கள். உன்னைச் சிறை வைப்பதற்குப் பதிலாகப் பழுவேட்டரையர்களைப் பிடித்துச் சிறை வைத்தாலும் வைத்து விடுவார்கள்!''

அருள்மொழிவர்மர் சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றார்.

''ஆமாம்; அந்த அபாயம் ஏற்படலாம் என்று எனக்குத் தெரியாமற் போயிற்று. நல்ல வேளையாகத் தாங்கள் எச்சரித்தீர்கள். இந்தத் தஞ்சை புரிக் கோட்டைக்குள் மாறு வேடம் பூண்டு வந்தது போல் அங்கேயும் மாறுவேடம் புனைந்து போகிறேன்...''

''என்னதான் மாறுவேடம் பூண்டு போனாலும் எத்தனை நேரம் உண்மை வெளிப்படாதிருக்கும், தம்பி! ஒருவருக்குத் தெரிந்தால் போதுமே? ஒரு நாழிகைக்கெல்லாம் எல்லாருக்கும் தெரிந்து விடும். அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்களும் வந்து கூடி விடுவார்களே!''

அருள்மொழியின் முகம் சுருங்கிற்று.

''அக்கா! பின்னர் என்னதான் என்னைச் செய்யச் சொல்கிறீர்கள்? இந்த உலகத்தில் எதற்காக நான் பிறந்தேன்? பிறருக்குத் தொல்லை கொடுப்பதற்காகத்தானா? காவேரியில் நான் விழுந்து முழுகிய போதே இறந்து போயிருக்கக் கூடாதா!'' என்றான்.

''தம்பி! யார் கண்டார்கள்? ஜோதிடர்களும் ரேகை சாஸ்திரிகளும் கூறியதெல்லாம் உண்மைதானோ, என்னமோ! நீ வேண்டாம் என்று தள்ளினாலும் இராஜ்ய லக்ஷ்மி உன்னை வந்து அடைவாள் போலிருக்கிறது. நீ பிறந்த வேளை அப்படி இருக்கிறது!''

''அக்கா! தாங்களும் நம் பாட்டன் மலையமானோடு சேர்ந்து கொண்டீர்களா? தங்கள் மனமும் மாறிவிட்டதா?''

''பாட்டன் போதனையினால் என் மனம் சலிக்கவில்லை, தம்பி! ஆனால் அண்ணன் கரிகாலனுடைய ஓலையினால் கொஞ்சம் என் மனமும் மாறித்தான் இருக்கிறது. அவன் கண்ட கனவுகளையெல்லாம் நீ காரியத்தில் நிறைவேற்றுவாய் என்று எழுதியிருக்கிறான். அதைப் படித்ததும்...'' என்று கூறிய போது குந்தவையின் கண்களில் கண்ணீர் ததும்பிக் குரலும் தழுதழுத்தது.

பொன்னியின் செல்வன் ஆதித்த கரிகாலனுடைய ஓலையை வாங்கிப் படித்தான். அவனுடைய கண்களிலேயிருந்தும் கண்ணீர் பொழிந்தது.

ஓலையை அவன் படித்து முடித்ததும் குந்தவை கூறினாள்: ''தம்பி! நீ என்ன நினைத்துக் கொண்டாலும் சரிதான். என் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடுகிறேன். மதுராந்தகனும் நந்தினியும் நம் சோழ குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று தெரிந்து கொண்டதில் என் மனம் ஒருவாறு நிம்மதி அடைந்திருக்கிறது. சோழ குலத்தில் பிறக்காத ஒருவனைச் சோழ சிங்காதனம் ஏறச் செய்வதிலும் எனக்கு விருப்பம் இல்லை. செம்பியன்மாதேவியிடமும், மந்தாகினி தேவியிடமும் எனக்கு எவ்வளவு பக்தி இருந்தாலும், அவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க என்னால் முடியவில்லை. மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதை இனி ஒரு கணமும் என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது....''

''அக்கா! அக்கா! இது என்ன சொல்கிறீர்? செம்பியன் மாதேவி முன்னாலும், அநிருத்தர் முன்னாலும், மதுராந்தகன் முன்னாலும் 'எனக்குப் பட்டம் வேண்டாம்' என்று சொல்லி விட்டு வந்தேன். ஆயிரமாயிரம் போர் வீரர்கள் முன்னாலும் மகாஜனங்களின் முன்னாலும் அவ்விதமே சொல்லி விட்டு வந்திருக்கிறேன். இப்போது என் வார்த்தையை மீறச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டான் அருள்மொழிவர்மன்.

''தம்பி! உனக்கும் எனக்கும் நம் குல தெய்வமான துர்க்கா பரமேசுவரிதான் வழி காட்ட வேண்டும். உனக்கு என்ன யோசனை சொல்லுவது என்று எனக்கும் தெளிவாகத் தெரியவில்லை. ஆதித்த கரிகாலன் என் வார்த்தையைக் கேட்டிருந்தால், இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டே இராது! அந்த மகா வீரனுக்கு இந்தக் கதியா நேர்ந்திருக்க வேண்டும்?'' என்று குந்தவை புலம்பினாள்.

''இந்த ஓலை தங்களுக்கு எப்படிக் கிடைத்தது, அக்கா? யார் கொண்டு வந்தார்கள்? எப்போது தங்கள் கைக்கு வந்தது? ஏன் முன்னாலேயே சொல்லவில்லை?'' என்றான் அருள்மொழி.

''சற்று முன்னாலேதான் எனக்கு வந்தது. சம்புவரையரின் மகள் மணிமேகலை கொண்டு வந்து கொடுத்தாள்....''

''ஆம், ஆம்; மணிமேகலையைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவளிடம் இந்த ஓலை எவ்விதம் வந்தது?''

''அவளே இருக்கிறாள், தம்பி! நீயே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்! அவள் பேச்சை எவ்வளவு தூரம் நம்புவது என்று எனக்கே தெரியவில்லை'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

அருள்மொழிவர்மன் உள்ளே வந்தவுடனேயே, மணிமேகலையை அவன் முன்னால் நிறுத்தி வந்தியத்தேவனைப் பற்றிப் பிரஸ்தாபிக்கச் சொல்லுவதென்று இளையபிராட்டி தீர்மானித்திருந்தாள். இத்தனை சம்பாஷணைகளுக்கு மத்தியிலும் அவளுடைய உள் மனம் வந்தியத்தேவர் பாதாளச் சிறையில் இருப்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவரைப் பற்றித் தானே பேச்சு எடுக்கக் குந்தவை விரும்பவில்லை. மணிமேகலையை அழைப்பதற்கு ஒரு தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தாள். அந்தச் சந்தர்ப்பம் இப்போது கிடைத்ததும், வானதியைக் கூவி அழைத்து, மணிமேகலையையும் அழைத்து வரும்படி கூறினாள்.

மணிமேகலை வரும்போதே கண்ணீர் ததும்பிய சோக மயமான முகத்துடன் வந்தாள். இதைப் பார்த்த பொன்னியின் செல்வன் அவள் துயரப்படுவதற்குக் காரணமிருக்கிறது என்று எண்ணினான்.

''தம்பி! இந்தப் பெண்தான் மணிமேகலை. ஓலையை இவள்தான் கொண்டு வந்தாள். இது எப்படி இவளிடம் வந்தது என்று நீயே கேட்டுக் கொள்!''

''சகோதரி! எங்கள் தமையன் கடைசியாக எழுதிய இந்த ஓலையை நீ கொண்டு வந்து பத்திரமாக ஒப்புவித்தாய். இதற்காக உன்னிடம் நாங்கள் என்றைக்கும் நன்றி செலுத்துவோம்....!'' என்று மேலே அருள்மொழிவர்மன் தொடர்வதற்குள்ளே,



மணிமேகலை திடீரென்று அவன் முன்னால் விழுந்து வணங்கினாள்.

"இளவரசே! பொன்னியின் செல்வ! தாங்கள் இப்போது சொன்ன வார்த்தை சத்தியமா? என்னிடம் தாங்கள் நன்றி செலுத்துவது உண்மையானால்....."

இவ்வாறு சொல்லி விட்டு மேலே பேச முடியாமல் மணிமேகலை விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"அக்கா! இது என்ன? இந்தப் பெண் எதற்காக இப்படி விம்மி அழுகிறாள்? ஒரு வேளை அவளுடைய வீட்டில் நம் தமையன் இறக்க நேர்ந்ததே என்று வருந்துகிறாளா?" என்றான்.

"இல்லை, தம்பி! இவள் மனத்தில் இருப்பது வேறொரு காரியம். மணிமேகலை! என்னிடம் கூறியதை இளவரசரிடமும் சொல்லு!" என்று குந்தவைப்பிராட்டி அவளைத் தைரியப்படுத்தினாள்.

"ஐயா! தங்கள் தமையனைக் கொன்ற பாவி நான்தான். என்னைப் பாதாளச் சிறையில் போட்டு விட்டு அவரை விடுதலை செய்யுங்கள்!" என்று அழுது கொண்டே கூறினாள்.

அருள்மொழிவர்மன் திகைப்புடன் குந்தவையைப் பார்த்து, "அக்கா! இவள் என்ன சொல்லுகிறாள்? இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?" என்று கேட்டான்.

"இவளுக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை, தம்பி! ஆனால், சீக்கிரத்தில் வல்லத்து இளவரசரைப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்யா விட்டால் இவளுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்து விடும்!" என்றாள்.

"என்ன? என்ன? யார் பாதாளச் சிறையில் இருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டான்.

"ஈழ நாட்டுக்கு நான் ஓலை கொடுத்து அனுப்பிய வாணர் குல வீரரை அடியோடு மறந்து விட்டாயா, தம்பி!"

நெடுங் கனவிலிருந்து அப்பொழுதுதான் விழித்து எழுந்து இவ்வுலக நினைவு வந்தவனைப் போல் அருள்மொழிவர்மன் ஒரு நிமிட நேரம் தோற்றமளித்தான்.

தஞ்சைக் கோட்டைக்குள் அவன் பிரவேசித்ததிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக நடந்த சம்பவங்கள் அவனுடைய கவனத்தை முழுதும் கவர்ந்திருந்தன. கரிகாலருடைய மரணச் செய்தி வந்த பிறகு, சோழ சிங்காதனத்தில் மதுராந்தகரை ஏறச் செய்யும் மார்க்கத்தைப் பற்றிச் சிந்திப்பதிலேயே அவனுடைய உள்ளம் முழுதும் ஈடுபட்டிருந்தது.

வந்தியத்தேவனைப் பற்றி உண்மையிலேயே அவன் மறந்து விட்டிருந்தான்.

இப்போது அவன் பெயரைக் கேட்டதும் ஒரு துள்ளுத் துள்ளி, "யார்? என்னுடைய அருமை நண்பர் வந்தியத்தேவரா பாதாளச் சிறையில் இருக்கிறார்? எதற்காக? யார் அவரைச் சிறையில் அடைத்தது?" என்று கேட்டான்.

மணிமேகலை கூறிய விவரங்களைக் குந்தவை அவனுக்கு எடுத்துக் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு இருந்த பொன்னியின் செல்வன், "அக்கா! என்னைப் போன்ற நன்றி கெட்டவன் யாருமே இருக்க முடியாது. வாணர் குலத்து வீரரைப் பற்றி நான் விசாரிக்காமலே இருந்து விட்டேன். அது என் குற்றந்தான்! அவரைப் பாதாளச் சிறையில் அடைக்கத் துணிந்தவர்கள் என்னை விடப் பெரிய குற்றவாளிகள். நம் தமையனிடம் அவருக்கு எவ்வளவு பக்தி உண்டு என்பதை நான் அறிவேன். கரிகாலரின் மரணத்துக்கு அவரைப் பொறுப்பாளியாக்கத் துணிந்தவர்கள் யார்? இது என்ன மூடத்தனம்? அவரைத் தப்புவிப்பதற்காக இந்தப் பெண் தன் பேரில் குற்றம் சுமத்திக் கொள்வது நமக்கெல்லாம் ஒரு பாடங் கற்பிப்பது போலிருக்கிறது. இந்தப் பெண்ணைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. மற்ற காரியங்கள் அப்புறம் ஆகட்டும். இப்போதே பாதாளச் சிறைக்குச் சென்று வந்தியத்தேவரை விடுவித்துக் கொண்டு வருகிறேன். சம்புவரையர் மகளுக்கு நீ தேறுதல் கூறு!" என்று சொல்லி விட்டுத் திரும்பி, விடுவிடுவென்று நடந்தான்.

அவன் வாசற்படியை அடைந்த போது, அங்கே திடீரென்று திருக்கோவலூர் மலையமானும் கொடும்பாளூர் வேளாரும் தோன்றினார்கள்.

அவர்களுடைய தோற்றமே இளவரசரின் மனத்தில் ஒருவித ஐயத்தை உண்டு பண்ணியது.

பெரிய வேளார் தம் கையில் கொண்டு வந்திருந்த வேலை வாசற்படியின் குறுக்கே வைத்து இளவரசரைத் தடுக்கும் பாவனையில் நின்றார். அவருக்குப் பின்னால் மலையமானும் கையில் பிடித்திருந்த கத்தியைக் கீழே ஊன்றிய வண்ணம் இளவரசர் மேலே போவதைத் தடுப்பதற்கு ஆயத்தமாக நின்றார்.

பொன்னியின் செல்வர் பெரும் வியப்

அருள்வாக்கு



கோயிலுக்குப் போகிறோம். பிள்ளையார் ஸந்நிதியில் நிற்கிறோம். அப்போதைக்கு ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸ் குவிந்த மாதிரிதான் இருக்கிறது. அப்புறம் கையை, காலைச் சொறிந்து கொள்கிறோம். மனஸ் பிய்த்துக் கொண்டு கிளம்பி விடுகிறது! அப்படியே எந்தக் குப்பைத் தொட்டிக்கு வேண்டுமானாலும் ஓடட்டும் என்று விட்டு விடுவதா? அப்படி விட்டு விடாமல், நல்லவழியிலேயே, தெய்வ ஸம்பந்தமாகவே அந்த மனஸை இழுத்தால் தானே தேவலை? எப்படி இழுப்பது? பாழும் மனஸுக்கு இந்த விக்நேச்வர மூர்த்தி, தொப்பையும் தொந்தியுமாக இத்தனை அழகாக உட்கார்ந்திருந்துங்கூட, அவரிடமே தொடர்ச்சியாக ஒட்டிக் கொண்டிருக்க முடியவில்லையே! 'பரவாயில்லையப்பா!' என்று இங்கேதான் நம் ஸமயாசார புருஷர்கள் ஆறுதல் தர வருகிறார்கள். 'மனஸின் நேச்சர் அப்படித்தான் அப்பா! அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் திருத்தி நிலையாக ஒருமுகப்படுத்த முடியுமப்பா! அதற்கு எதிலும் 'சேஞ்ச்' வேண்டும். தெய்வ ஸம்பந்தமாகவுங்கூட அப்படி வேண்டும். அதையும்தான் நம்முடைய மதம் தருகிறதே! விக்நேச்வரரிடம் ஈடுபாடு குறைகிறதா, அழாதே! இதோ 'சேஞ்சா'க ஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதி. அப்புறம் இன்னம் பல 'சேஞ்ச்'கள் — அம்மன், ஸ்வாமி, தக்ஷிணா மூர்த்தி, துர்க்கை, நடராஜா, மநுஷ்ய ரூபத்தில் வந்த அறுபத்து மூவர் என்று எல்லாம் ஒன்று சேர்த்துத்தானே கோவில் என்று வைத்திருக்கிறோம்? ஒவ்வொன்றிடமும் ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸ் ஈடுபட்டுக் கும்பிட்டு விட்டுப் போயேன். மொத்தத்தில் ஒரு கணிசமான நாழி உன் மனஸ் தெய்வ ஸம்பந்தமாகவே ஈடுபட்டிருக்கும்' என்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

புடனும் சிறிது கோபத்துடனும் "சேநாதிபதி? இது என்ன? என்னைக் கூடச் சிறைப்படுத்தப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

"இளவரசே! இப்போது பாதாளச் சிறைக்குப் போகாமல் தங்களைத் தடை செய்கிறோம். அவசியம் நேர்ந்தால் சிறைப்படுத்தவும் செய்வோம்!" என்றார் பூதி விக்கிரம கேசரி.

அவர் கூறியது உண்மையாகவா, வேடிக்கையாகவா என்று பொன்னியின் செல்வருக்கு விளங்கவில்லை. ஆனால் வேடிக்கையைப் பொறுத்துக் கொள்ளும் மனோநிலையும் அச்சமயம் அவருக்கு இல்லை. ஆகையால் முன்னைவிடக் கோபமான குரலில், "எந்த அதிகாரத்தைக் கொண்டு என்னைத் தடை செய்ய முன்வந்தீர்கள்?" என்றார்.

"தாங்கள் எந்த அதிகாரத்தைக் கொண்டு பாதாளச் சிறையில் உள்ளவனை விடுதலை செய்யப் போகிறீர்கள்?" என்றார் பெரிய வேளார்.

"சேநாதிபதி! எனக்கு அந்த அதிகாரம் இல்லையா? நான் யார் என்பதை மறந்து விட்டீர்களா? அல்லது தங்களைத் தாங்களே மறந்து விட்டீர்களா?"

"என்னை நான் மறக்கவும் இல்லை; தாங்கள் யார் என்பதை மறக்கவுமில்லை. நான் தஞ்சைக் கோட்டைக்கு இன்று தளபதி. ஆகையால் பாதாளச் சிறைக்குக் காவலன். தாங்கள் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்; பொன்னியின் செல்வர். ஆயினும் தங்கள் தமையனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டிப் பாதாளச் சிறையில் வைக்கப்பட்டவனை விடுதலை செய்யத் தங்களுக்கு அதிகாரம் கிடையாது. சக்கரவர்த்திக்குத்தான் அந்த அதிகாரம் உண்டு; அல்லது சக்கரவர்த்தியின் ஸ்தானத்தில் முடி சூட்டிக் கொள்ளப் போகிறவருக்கு அந்த அதிகாரம் உண்டு. தாங்களோ சோழ சிங்காதனத்தில் ஏறப் போவதில்லையென்று பறைசாற்றிக் கொண்டு வருகிறீர்கள். ஆகையால் சக்கரவர்த்தியின் கட்டளையின்றிப் பாதாளச் சிறையிலிருந்து யாரையும் விடுவிக்க முடியாது!" என்றார் கொடும்பாளூர்ப் பெரிய வேளாராகிய சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி.

"குழந்தாய்! வேளார் கூறியது உண்மையான வார்த்தை. சின்னப் பழுவேட்டரையன் ஓடிப் போனபடியால் பெரிய வேளாரைத் தஞ்சைக் கோட்டைத் தளபதியாகச் சக்கரவர்த்தி நியமித்திருக்கிறார். ஆகையால் பாதாளச் சிறையிலிருந்து யாரையும் விடுவிக்க உனக்கு அதிகாரம் இல்லை!" என்று மலையமான் ஆமோதித்தார்.

பொன்னியின் செல்வர் அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மௌனமாக நின்றார்.

மணிமேகலையின் விம்மல் சப்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

(தொடரும்)

ஓர் அரசு ஊழியர் விடுப்பில் போகிறார்!

ராமன் அன்றைய தபால்களுக்காகக் காத்திருந்தான்.

மெசஞ்சர் தங்கவேலுவைப் பார்த்ததும் பரபரப்படைந்தான்.

''ஹெட் ஆபீஸ் தபால் எதுவும் இல்லை, சார்'' என்றபடி அவன் மற்ற தபால்களை எடுத்து அவன் மேஜை மீது வைத்தான்.

ராமன் கொதித்துப் போனான். **''தங்கவேலு, அட்மினிஸ்ட்ரேஷன் என்னய்யா நினைச்சிட்டிருக்கு? விளையாடறான்களா? ஏற்கெனவே நேர்ல போய், வர்ற நாலாம் தேதி என் கல்யாணம்னு சொல்லிட்டு வந்திருக்கேன். அப்படியே லீவ் லெட்டர் கொடுத்தாச்சு. இப்ப ப்ரிண்ட் பண்ணின இன்விடேஷனை அவன்களுக்கே நேர்ல கொண்டு போய்க் கொடுக்க முடியலியே! இனி எப்ப லீவ் கிடைச்சு, நான் எப்ப எல்லாருக்கும் இன்விடேஷன் வைக்கறது? தாலி கட்ட வேண்டிய முகூர்த்த நேரத்தில நான் இங்கே உட்கார்ந்து ஃபைலுக்கு முடிச்சுப் போட்டுக்கிட்டிருப்பேன்னு நினைக்கிறீங்களா?''**

''சார், ஆவேசப்படாதீங்க... என்ன பண்றது? அவங்களும் ஆளை டெப்யூட் பண்ணி இருக்காங்க. உங்க ரிலீவர்தான் வரலே.''

''தங்கவேலு, என்னய்யா டெபுடேஷன் போட்டிருக்கான்க? ஏற்கெனவே இன்ட்டீரியரா இருக்கிற இந்த எருமைப்பட்டிக்கு எவனும் வர மாட்டான். இதிலே வேற இவன்க, எண்பது கிலோ மீட்டருக்கு அப்பால இருக்கிற ஊர்லேருந்து டெபுடேஷன் போட்டா எப்படிய்யா வருவான்?''

''ஆமாம், சார். நியாயம்தான்! அதான் உங்க ரிலீவர் எம். சி. கொடுத்துட்டாராம்.''

''அப்ப எம்.சி. கொடுக்கிறவன் புத்திசாலி!''

''இல்லையா, பின்னே? எம்.பி.பி.எஸ். படிச்ச டாக்டர்தானே மெடிகல் சர்டிபிகேட் கொடுக்கிறார்?''

''அது தெரியாதா, எனக்கு... முன்கூட்டியே லீவ் எழுதிக் கொடுத்த நான் லீவ்ல போக முடியலே. எனக்கு வர வேண்டிய ரிலீவர் எம்.சி. கொடுத்து லீவ்ல போய்ட்டாரே! அவர் செஞ்சதுதான் புத்திசாலித்தனமான்னு கேட்கிறேன்?''

''சார், அவர் செஞ்சது மேலும் புத்திசாலித்தனம். லலிதா கேரிபேக்ல சால்ப் வாங்கற மாதிரி.''

''தங்க...வேலு நானே மண்டை காஞ்சு போய் இருக்கேன். என்னை வெறுப்பேத்திக் கொலைகாரனா ஆக்கிடாதே!''

''சார், டென்ஷன் ஆகாதீங்க, சார், நிதானமா யோசிங்க.''

''இதுக்கு என்னய்யா யோசனை? நானும் எம்.சி. கொடுக்கிறேன்.''

''வெட்டுங்க சார், இருபது ரூபாய். ஒரு மாசத்துக்கு வாங்கிட்டு வந்துடறேன்.''

''எருமைப்பட்டி டாக்டருக்குக் கூட இருவது ரூபாயா?''

''ஏன் சார், அவரும் மெடிகல் காலேஜில் தானே படிச்சாரு?''

ராமன் பர்ஸைத் திறந்து இருபது ரூபாயை உருவினான். தங்கவேலு திறந்த பர்சினுள் மற்ற கையிருப்புகளை எடை போட்டான்.

''சார், அப்படியே எனக்கு ஒரு பத்து ரூபா கடன்....''

''நல்ல... நேரம் பார்த்துக் கடன் கேட்கிறே! இந்தா....''

''வரேன், சார்'' என்று தங்கவேலு படியிறங்கினான்.

அன்று மாலை தங்கவேலு வாங்கி வந்த மெடிகல் சர்டிபிகேட்டைத் தபாலில் **அனுப்பி வைத்த ராமன், தொலைபேசிச்** செய்தியும் அனுப்பி வைத்தான்.

''ரிலீவர் வருவாங்களா, சார்?''

''கதறிக்கிட்டு வரணும், தங்கவேலு. இல்லேன்னா நாளைக்கு நான் ஆபீஸ்லியே துண்டை விரிச்சுப் படுத்திடுவேன். ஒரு துரும்பை அசைக்க மாட்டேன்.''

''ரொம்ப தில்லாப் பேசறீங்க சார்.''

''என்ன கிண்டலா? பேசறது மட்டுமில்லே. நாளைக்குச் செஞ்சு காட்டறேன்.''

அதற்கு அவசியம் நேரவில்லை.

நிர்வாகம் அனுப்பிய மாற்றாள் மறுநாள் காலையில் வந்து சேர்ந்தான்.

ராமன் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டான்.

எஸ்.குமார்

ராமன் மணமேடையில் இருந்தான். பக்கத்தில் பளீரென்று லட்சுமி. இடுப்பில் கிள்ளலாமா என்று யோசித்த போது தங்க வேலு பரிசுடன் வந்தான்.

''கங்கிராஜுலேஷன்ஸ், சார்.''

''தாங்க்யூ.''

''எல்லாரும் தான் கல்யாணம் பண்ணிக் கிறாங்க. அதிலே ஒரு த்ரில் கிடையாது. உங்களுது த்ரில் சார்.''

''த்ரில்லா?''

''மெடிகல் லீவ்ல கல்யாணம் பண்ணிக் கிட்டீங்களே!''

''.........''

''நிர்வாகத்தில் டி. எம். ஓவுக்கு டைரக்ட் பண்ணி, ஆக்ஷன் எடுத்தாலும் எடுப்பாங்க, சார்.''

''ஏற்கெனவே சாங்ஷன் பண்ண லீவுக்கு ஆள் அனுப்பலே. எம்.சி. கொடுத்துட்டுப் போனா ஆக்ஷனா? அதையும் பாத்துட றேன்.''

கல்யாணம் முடிந்த கையோடு மறுவீடு, பிக்னிக் எல்லாம் போய் விட்டு ஊர் திரும்பிய போது ராமன் வீட்டில் அந்தக் கடிதம் காத்திருந்தது.

அலுவலகக் கடிதம். பிரித்துப் படித் தான்.

மாவட்ட மருத்துவ அதிகாரிக்குக் கடிதம் எழுதி விட்டு, அவனுக்கு நகலை அனுப்பி யிருந்தார்கள்.

இனி –

அவன் மருத்துவ அதிகாரி கூப்பிடுகிற போது பரிசோதனைக்கு உடன்பட வேண் டும்.

கடிதத்தின் தேதியைப் பார்த்தான். பதி னைந்து நாட்களுக்கு முன்னால் எழுதப் பட்டிருந்தது.


இந் நேரம் டி. எம். ஓ.விடமிருந்தும் கடிதம் வந்திருக்க வேண்டுமே...

போஸ்ட் ஆபீசுக்குப் போய் விசாரித் தான். கடிதம் எதுவும் இல்லை.

நான்கு நாட்கள் கழித்து டி.எம்.ஓ.வின் கடிதம் வந்தது. பன்னிரண்டாம் தேதி **அவன் மருத்துவப் பரிசோதனைக்கு** வர வேண்டுமென்று கடிதம் குறிப்பிட்டிருந்தது.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவன் கொடுத்த மருத்துவச் சான்றித ழின்படியே அவன் பதினான்காம் தேதி



வேலைக்குப் போக வேண்டும்.

டி.எம்.ஓ. அலுவலகத்தில் காத்திருந்தது தான் அவனுக்குக் கிடைத்த தண்டனையாக இருந்தது.

அவன் முறை வந்து உள்ளே போன போது, எஸ். வி. ரங்கராவ் மாதிரி, கம்பீரமும் களையுமான டி.எம்.ஓ. ''என்னய்யா?'' என்றார்.

கடிதத்தைக் காட்டினான்.

அவரிடமிருந்த காகிதங்களைப் புரட்டினார்.

''என்ன ட்ரபிள்?''

''அமீபிக் டிசன்ட்ரி.''

''பெட்ல அட்மிட் பண்ணிடட்டுமா?''

''வேணாம், சார்.''

''ஏன்?''

''நவ் ஐ ஃபீல் பெட்டர்.''

''அப்போ ஃபிட்னஸ் கொடுத்துடறேன். ஆபீசுக்குப் போயிடு.''

''ஓகே, சார்.''

அவசரமாக ஃபிட்னெஸ் சர்டிபிகேட்டைக் கிறுக்கிக் கையில் கொடுத்தார்.

ஒருநாள் முன்னதாக அலுவலகத்துக்குப் போனான். டி.எம்.ஓ. கொடுத்த சர்டிபிகேட்டை நிர்வாக அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தான்,

''நீங்கள் ஒரு மாதத்திற்கு மருத்துவச் சான்றிதழ் கொடுத்து விடுப்பில் சென்றீர்கள். ஆனால் உங்களைப் பரிசோதித்த டி.எம்.ஓ. நலமாக இருக்கிறீர்களென்று எழுதியிருக்கிறார். உங்கள் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்கு விளக்கம் தேவை.''

நிர்வாக அலுவலகத்திலிருந்து வந்த கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்தான்.

''பாத்தியா, தங்கவேலு... எப்படி விரட்டறாங்க.''

''நீங்க கொஞ்சம் பொறுமையா இருந்திருக்கலாம்.''

''அடுத்த முகூர்த்தம் வரைக்குமா?''

''அதில்லே சார். அவங்க எப்படியும் ரிலீவரை அனுப்பி இருப்பாங்க. கல்யாணத்துக்கு மாப்பிள்ளை போக வேண்டியது அவசியம்னு அவங்களுக்குத் தெரியாதா?''

''எக்ஸ்ப்ளனேஷனா கேக்கறானுங்க? கொடுக்கிறேன், பாரு.''

ராமன் எழுதத் துவங்கினான்.

''எனக்கு உடல்நலம் குன்றியதால் டாக்டரின் ஆலோசனையின் பேரில் விடுப்பில் சென்றேன். முப்பத்தோராம் நாள் நலம் பெற்று அலுவலகத்தில் சேர வேண்டிய நான், டி.எம்.ஓ.வின் அறிவுரையின்படி முப்பதாம் நாளே அலுவலகத்தில் சேர்ந்து விட்டேன். துரதிர்ஷ்டவசமாக ஒரு நாள் முன்னதாக என் உடல் நலம் பெற்று விட்டதற்காக என் மீது நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாமென்று பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

தங்கவேலு படித்து விட்டு, ''தூள் கிளப்பிட்டே, சார்!'' என்றான்..

வெற்றிபாதையில் விரைந்திடுவீர்!

வாழ்வில் வளங்கான வழிகள்



கடலில் திசை தெரியாமல் தவிப்பவர்களுக்கு ''கலங்கரை விளக்கு'' ஒளி தந்து வழி காட்டும் அதுபோல் வாழ்வில் வளம் காணத் துடிப்பவர்களுக்கு முன்னேற்றத்திற்கான வழிகளை நாங்கள் கூறுகிறோம்.

பள்ளிக்கூடத்தில், கல்லூரியில் படித்து விட்டு ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி பேச முடியாமல் தவிக்கிறீர்களா?

சாதாரண தொழிலாளியாக இருந்து கொண்டு ஆங்கில அறிவை எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்று நினைக்கிறீர்களா!

எல்லோரும் ஆங்கிலத்தில் பேசும்போது நம்மால் நாலு வார்த்தை கூட பேச முடியவில்லையே என்று ஏங்குகிறீர்களா?

படிக்கக்கூடிய காலத்தில் படிக்காமல் தற்போது தொழில் or வியாபாரத்தில் ஈடுபட்டு இனி எப்படி படிக்க முடியும் என்று ஆழ்ந்த யோசனையில் மூழ்குகிறீர்களா!

கவலையை விடுங்கள் முன்னேற்றத்திற்கான எளிய வழிகள் இதோ, எளிய முறையில் தமிழ் மூலம் தபாலில் ஆங்கிலம் பயிலுவதற்கான சிறந்த பயிற்சியை இந்தியாவிலேயே தலைசிறந்த ஆங்கில கல்வி நிறுவனமாகிய...

''தி அமெரிக்கன் இன்ஸ்டிடியூட்'' ஏற்று பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சி அளித்து வருகிறது. பல்வேறு ஆங்கில பேராசிரியர்களே இப்பயிற்சியை பாராட்டியுள்ளனர் என்றும் பார்த்துக் கொள்ளுங்களேன்.

நீங்கள் செய்ய வேண்டியது ஒரு போஸ்ட் கார்டில் உங்கள் முகவரியை எழுதி தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட், எல்லிஸ் நகர், மதுரை-16, என்ற முகவரிக்கு அனுப்புங்கள். இலவச விபரங்கள் வந்து சேரும்.

இது தவிர தமிழ் மூலம் தபாலில் கணக்கர் பயிற்சி பெற்றால் ஒவ்வொரு ஊரிலும் கணக்கர் வேலைக்கு ஏராளமானவர்கள் தேவைப்படுவதால் இதில் மாதம் ரூ. 2000 வரை சம்பாதிக்க வாய்ப்புண்டு, எளிய சுலபமான வேலை வாய்ப்பு.

தமிழில் தபால் மூலம் சிறப்பாக ஆங்கிலம் பயில்வதற்கும், தமிழில் தபால் மூலம் கணக்கர் பயிற்சி பெறவும் உடனே தபால் கார்டில் எழுதவும்.

தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட்

எல்லிஸ் நகர், மதுரை-16.

மணல்வெளி மான்கள்

3

வந்தோமா வேலையைப் பார்த்துக் கொண்டு விடுவிடுவென்று போனோமா என்று முடியவில்லை. சாலையில் நேரே கண்மூடிக் கொண்டு நடப்பது சுளுவில்லை. அதுவும் அவனுக்கு.

கௌதமை எதிர்ப்பட்டவர்கள் அடிக்கடி நிறுத்தினார்கள்.

முதலில் காலி இரட்டை மாட்டு வண்டி ஓட்டிக் கொண்டு வந்த சிங்காரம். வயசு நாற்பது. பெரிய கெய்ஸர் மீசை. கற்றாழை நார் மாதிரி இதற்குள் வெளுப்பு. உடம்பு வாடாத மாதிரியே முகத்தில் சதா ஒரு குதூகலம்.

கடகடவென்று சக்கரப்பட்டை கப்பி ரோட்டில் உருள, கடையாணியில் சலங்கை. மாட்டுக் கழுத்தில் மணியோசை.

"தா... தா!" மாட்டை இழுத்துப் பிடித்துக் கொண்டே, "யோவ் மரிகப்புள்ளே, நெலா ராவிலே நடக்கற மாதிரி என்ன ஒய்யார நடை போட்டு வர்றீரு?" என்றான் சிங்காரம்.

யார் வாயையாவது கிண்ட வேண்டும் சிங்காரத்துக்கு. அவனுக்குக் கல்யாணமாகவில்லை. அதனால் ஒன்றும் குறைவு வந்து விடவில்லை. போன வாரம் காஞ்சிபுரம் பஸ்ஸில் அவன் பக்கத்தில் எவளோ ஒரு நாற்பது வயசுக்காரி உட்கார்ந்திருந்தாளாம்.

"என்ன வேட்டைதானா? ஆத்தங்கரை மீட்டிங் நடந்தாப்லே இருக்கு!" என்று கேட்டு விட்டுச் சிங்காரம் கண்ணைச் சிமிட்டினான்.

கௌதமுக்குச் சிரிப்பு வந்தது. காட்டவில்லை.

"மாமா, ஒம் புத்தி உன்னை விட்டுப் போகாதே!"

"புத்தியாச்சே மரிகப்புள்ளே! போய்ட்டா எப்பிடி?"

"இந்த நியூஸை விசாரிக்கத்தான் வண்டியை நிறுத்தினியா?"

"அஃகாம். இது பெரிய நாவலா. இத வேற விசாரிக்க வேணும்!" என்று மேலே ஏதோ சொல்லப் போன சிங்காரம் நிறுத்தினான்.

"நுங்கோ நுங்கு... நுங்கோ நுங்கு" என்று கூவிக் கொண்டு வந்த ஒரு நுங்குக்காரி, ஊரின் கடைசிக் குடிசையும் முடிந்து விடவே கூவலை நிறுத்தினாள்.

சிங்காரத்தின் பார்வை, அவள் மேல் விழுந்து விட்டதே, பேச்சு நின்றதன் காரணம் என்று புரிந்து கொண்டான் கௌதம்.

"நுங்கு என்னாம்மா வெலை?"

சிங்காரத்தின் பார்வையில் நுங்குக்காரி ஏகமாய் நெளிந்தாள்.

சரி, சிங்காரத்தின் அடுத்த அத்தியாயம் ஆரம்பமாகி விட்டது.

"நான் வரட்டுமா மாமா?"

"ஆங்... ஆங்... அப்ப பொறப்படறேங்கிறியா... புத்திசாலி மரிகப்புள்ளே நீ! நெல் அவிக்க அடுப்புத் தீனிக்கு தென்ன மட்ட ஏத்தத்தான் போயிட்டிருக்கேன். கல்யாணிம்மா காலம்பறவே காரியத்துக்குப் பூட்டுச்சாம். சபாபதி மொய்லியாரு அண்ணாசாமி தோப்புலே காத்துட்டிருப்பாரு!"

கௌதம் புன்முறுவல் பூத்தான். அவனுக்குப் புரிந்தது. சிங்காரம் எதைப் புரிய வைக்க விரும்புகிறானோ அது!

நித்யா தனியாக இருக்கிறாளாம்.

"அன்ன வாசலுக்கா போறே... ஐயோ இந்த வெயில்லியா?" என்று நுங்குக்காரியிடம் சிங்காரம் உருகத் தொடங்கியதும் கௌதம் வெட்டிக் கொண்டான்.

நிச்சயம் நுங்குக்காரி வண்டியில் ஏறியிருப்பாள்.

கௌதமுக்குள் ஒரு சிரிப்பு. இரக்கமா ஏளனமா விவரம் தெரிந்து எதையோ கடந்த கசப்பா.. தெரியவில்லை. அது இனம் புரியாத சிரிப்பு.

பெண் — சிங்காரத்தின் பலவீனம். அவன் தேடிக் கொண்டே இருக்கிறான். எதையோ தொலைத்து விட்டுத் தேடுவது போல்! தொலைந்தது எது, எப்போது?

நித்யா தனியாய் இருந்தால் உடனே பாய்ந்து கொண்டு ஓடி விட மாட்டேன் என்று இவனுக்குத் தெரியும். இருந்தாலும் சொல்கிறான்.

"என்னா கௌது யோசனை "என்னைப் பாத்துட்டுப் பாக்காம நடக்கிறியே!"

சவுந்தரம்மாள். நெற்றியில் குங்கும வட்டம். பட்டுச் சேலை. கழுத்தில் இரட்டை வடச் சங்கிலி. கண்ணில், பிரியம் நட்சத்திரச் சுடர் போல் தெறித்தது.

"கவனிக்கலே பெரியம்மா! எங்கே பட்டுப் புடைவையும் நகையுமாக் கௌம்பிட்டே?"

"காலையிலே சொல்லலே? போஸ்ட் மாஸ்டரு பொண்ணு வயசுக்கு வந்திருக்குன்னு."

"சாயங்காலம்தான் வீட்டுக்கு அழைச்சுக்கறாங்கன்னு சொன்னியே?"

"காலைலே புண்யாதானம் பண்றாங்களாம்! ஆளு மேல ஆளு வந்துடிச்சு."

"சரி போய்ட்டு வாங்க!" என்று சிரித்துக் கொண்டே விடை கொடுத்தான்.

"சாவியப் பக்கத்து வூட்டுத் தாத்தாகிட்டே குடுத்துட்டு வந்திருக்கேன்!" என்று

வையவன்

திரும்பி நடக்கப் போன சவுந்தரம் நின்றாள்.

''நீ ஒம்பது மணிக்கெல்லாம் வந்துடுவேன்னு பாய் ஊட்ல இருந்து இடியாப்பம் வாங்கி வச்சிருந்தேன்! அது வரட்டி மாதிரி காஞ்சிட்டிருக்குதோ என்னமோ?'' என்றாள்.

''நான் சாப்டுட்டேன் பெரியம்மா!''

''சாப்டுட்டியா எங்கே?''

''ஆதி கேசவனுக்குக் கூழ் வந்திருந்தது.''

''இப்பிடி எதாவது ஏடாகோடம் பண்ணுவேன்னு எனக்குத் தெரியுமே! அதெல்லாம் நடக்காது. சில்வர் பொகுணியிலே இடியாப்பமும் தேங்காப் பால் கிண்ணமும் இருக்கு. நீ காலி பண்ணித் தான் ஆவணும்.''

''காலிதானே பண்ணச் சொல்றே?''

''அப்பிடியா கத... சரி நட போவலாம் ஊட்டுக்கு. நீ தின்னுட்டப்பறம் நான் அறுவலுக்குப் போறேன்.'' என்று திரும்பி விட்டாள் சவுந்தரம்.

''இல்ல பெரியம்மா. நான் சாப்டுக்கறேன்.''

நாலு எட்டு நடந்தவள் மீண்டும் திரும்பினாள்.

''ஆங் கௌது! இன்னொன்னு சொல்ல மறந்துட்டேன். கல்யாணியம்மா ஊட்டிலே வெள்ளைப் பொன்னி வேவிச்சிருந்தாங்களாமே. அது மிஷினுக்குப் போய்ட்டு வந்திடுச்சாம். போன ஐட்டத்திலேயே குடுக்கறேன் குடுக்கறேன்னு கல்யாணியம்மா டவுன் வியாபாரிக்கு அளந்துட்டுது.''

நித்யாவின் அம்மா ஓர் உறவினர் கருமாதிக்குப் போயிருக்கிறாள் என்று பதில் நாக்கு வரையில் வந்து நின்று விட்டது.

''ஒரு மூட்டை கண்டிசனா இந்தத் தபா நம்ம ஊட்டுக்கு அளந்துடுன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடறியா?''

மறுக்க முடியவில்லை.

''சரி பெரியம்மா.''

சவுந்தரம் போய் விட்டாள்.

அவள் சொந்தப் பெரியம்மா இல்லை. துபாய்க்குப் 'போயிருக்கிற அவள் மகன் கோபியும் கௌதமும் ஒன்றாய்ப் படித்தவர்கள்.

அம்மா போன பிறகு பாதி நாள் அந்த வீடுதான் கதி. விழுந்த சூன்யத்தின் மீது படர்ந்த கருணை மாதிரி, சட்டென்று எதிர்ப்பட்ட பாலைவனத்தில் அவர்கள் வீடு ஒரு பசுமைப் புள்ளியாயிற்று.

கோபிநாத் படிப்பு வராததால் துபாய்க்குப் போய் விட்டான். ஏர்கண்டிஷனிங், ரெப்ரிஜரேஷன் நிறுவனம் ஒன்றில் பெரிய மெக்கானிக்காம். முப்பதாயிரம், நாப்பதாயிரம் என்று மாதச் சம்பளத்தைக் கேட்கவே பயமாயிருந்தது.

கோபிநாத்தின் ஒரே தம்பி சம்பத். சென்னையில் பி.டெக். படிக்கிறான்.





நிருபர்: நீங்க திருமணத்துக்குப் பிறகு தொடர்ந்து நடிப்பீங்களா?

நடிகை: அவர் வேண்டாம்னா நடிப்பேன்... நடிக்கச் சொன்னா, மாட்டேன்!

—வி. ரேவதி.

இரண்டு பிள்ளைகள் இருந்தும் பிள்ளை இல்லாத வீடுதான்.

ஊரோடு பிளஸ் டூ முடிக்கிற வரை அது கௌதமுக்குச் சொந்த வீடு போல. பள்ளிப் படிப்பு முடிந்து, கல்லூரிக்கு வெளியூர் போக வேண்டி வந்தது.

கோபிநாத் துபாய்க்குப் போன போது கூட சவுந்தரம்மாள் அவ்வளவு அழவில்லை.

பிளஸ் டூ முடிந்த போதுதான் கௌதமின் அப்பா போலீஸிலிருந்து ரிட்டயர் ஆனது. பையனைக் கல்லூரியில் சேர்த்துச் சொந்த ஊரிலிருந்து, சொல்லி விட்டுப் போகக் கூட்டி வந்திருந்தார்.

பூந்துறை ஸ்டேஷன் வரைக்கும் கோபிநாதனின் அப்பா ஜெயராமன் வந்திருந்தார்.

"நீ வாணாம் அண்ணாத்தே! அப்பிடியே ரயில் ஏறப் போறோம். நீ வெக்கு வெக்குன்னு திரும்பி வரணும்."

"என் மனசு கேக்காது தொர்சாமி! நா என்ன காலேஜ் வரிக்குமா வர்றேன்."

ரயில் புறப்பட்ட போது ஜன்னலுக்கு வெளியே எவ்வளவு நேரம் அந்தக் கை ஆடி ஆடி விடைகொடுத்தது! ஹாஸ்டலில் உறக்கம் கலைந்த இரவில், டேபிள் லாம்ப் வெளிச்சத்திற்கு அப்பால் ஜன்னல் இருளில் ஆடிய அந்தக் கை!

பாவம் கோபிநாத்!

அவன் பாசத்தில் நான் பங்கு போட்டுக் கொண்டேன். இப்போதும் இவர்களுக்குப் பார்க்க வேண்டும் போலிருந்தால் தபால் வரும். கௌதமுக்குத் தோன்றினால் அவனே வந்து விடுவான்.

எத்தனை நாள் இருப்பான், எப்போது புறப்படுவான் என்ற கணக்கே இல்லை. அது சரணாலயமில்லை. அவன் டவல், அவன் சோப்பு, அவன் துணிகள்... அவனுக்கென்று ஒரு அலமாரியில் இவை எப்போதும் காத்திருக்கும்.

இப்போது இடியாப்பமும் தேங்காய்ப் பாலும். சந்தோஷமாக இருந்தது. ஏதோ ஒரு திருப்தி.

கோடை வானத்தில் ஒரு கரு நிழல். வழி தவறிப் போன கறுப்பு ஆடு போல் மேகம்.

ஒரு காரணமுமின்றி அவனுக்குச் சீட்டியடித்துக் கொண்டு நடக்கலாம் போல் ஆசை.

வாய்க்குள்ளேயே அடித்துக் கொண்டான்.

எதற்கு இந்த குஷி?

ஆதியின் மோட்டார் பம்ப்பை ஓட விட்டதற்கா? இல்லை நித்யாவைச் சந்தித்ததா?

கிணுகிணுவென்று சைக்கிள் மணி அவன் நினைவோட்டத்தை நிறுத்திற்று.

சைக்கிள் காரியரில் தீக்குச்சிகளை அடுக்கிக் கெட்டித்த மரச் சட்டங்களுடன் தலையில் தொப்பியோடு அந்தப் பதின்மூன்று வயதுப் பையன் ஹுஸைன் நின்றான்.

"சலாம் சார்!" ஹுஸைனுக்குக் கணக்கு சொல்லித் தருவான் கௌதம். அதனால் அவன் ஹுஸைனுக்கு எப்போதும் சார்தான்.

"சலாம் ஹுஸைன்! எங்கே தீப்பெட்டிக் கம்பெனிக்குப் போறியா?"

"ஆமா சார்!" ஹுஸைன் பிரேக் பிடித்துக் கொண்டு, காரியரில் அடுக்கிய தீக்குச்சித் 'தடுக்கு'களின் கனத்தால் பாலன்ஸ் இல்லாமல் திணறுவது தெரிந்தது.

"நீ பொறப்படு! பாரு, வண்டி பாலன்ஸ் இல்லாம தடுமாறுதே."

"இருக்கட்டும் சார்!" அவன் அந்த இடையூறுக்கும் மத்தியில் சாருக்குச் செலுத்திய மரியாதைக்குச் சந்தோஷப்பட்டான்.

"சார்.. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒங்களை இஸ்டேஷனுக்கு வரச் சொன்னார் சார்."

"இன்ஸ்பெக்டரா?"

"ஆமா சார்!"

ஹுஸைன் வீடு ஸ்டேஷனுக்குப் பக்கத்துச் சந்தில்.

"எதுக்கு வரச் சொன்னாரு?"

"தெரியலே சார்?"

"சரி நீ போ!"

இன்ஸ்பெக்டர் ஊருக்குப் புதிதாய் வந்தவர். மகா கெடுபிடி என்றார்கள். ஆற்றங்கரையிலும் முத்துசாமி கோயிலிலும் கள்ளச் சாராய நடமாட்டம் காணவில்லையாம்.

கப்பாரால் மாடியில் பாய்ண்டிற்கு ஒரு ரூபாய் வைத்து நடக்கும் டோர்னமெண்ட் ரம்மி நின்று விட்டதாம்.

பூச்சாண்டிக் கதை மாதிரி ஏதோ அதிசயம் பேசினார்கள்.

இருந்தாலென்ன? சுத்தமான கையோடு, தூசு தும்பு இல்லாது உதறிய மனசோடு எனக்கென்ன போலீஸ் ஸ்டேஷனில் வேலை?

ஹுஸைன் தடுக்குகளை மார்பில் அப்பித் தழுவுவது மாதிரி பிடித்துக் கொண்டு

இன்றுமுதல் ஆறே 6 வாரங்களில்

க்ளியர்·டோன்

க்ரீம் உமக்கு மெருகேற்றும் சிகப்பழகு·

முதல் வாரம்



முன்றே நாட்களில் என்
சருமத்துக்கு அதிக மென்மை!

2ம் வாரம்



மாசுமரு எல்லாம் மறைந்து.
அப்பாடா!

3ம் வாரம்




பாருங்க! இப்ப என்
முழங்கைகள் மழமழ.

4ம் வாரம்



"ஒளிவீசுதே உன்னோட
மேனியழகு" என்றாள் என் சிநேகிதி.

5ம் வாரம்



வெய்யிலிலே கூட என்
உடம்பு கறுக்கலே, பத்திரமா!

6ம் வாரம்



இப்போது நான் ஒரு
க்ளியர்-டோன் ரசிகை!

க்ளியர்-டோனில் உள்ள ஒப்பற்ற ஃபார்முலா உங்கள் சருமத்தை ஒளிநிறக்க வைக்கிறது. செப்பழகு பொலிய அதோடு மட்டுமல்ல. க்ளியர்-டோனில் உள்ள தனிச் சிறப்புப் பொருள் ஒன்று, அலங்கோல மாசுமறுக்களை அகற்றுகிறது. க்ரீமில் உள்ள மாயிஸ்ச்சரைஸர் தளதள ஈரவளமூட்டி உங்கள் மேனியழகுக்கு கவனிக்கத்தக்க மென்மை ஒளிமெருகூட்டுகிறது — விருக்கென ஆறே 6 வாரங்களில்!

விடாமல் அன்றாடம் இரு தடவைகள் க்ளியர்-டோன் இட்டு வந்தீரானால் அழகுவண்ண விளைவுகளை — வெய்யில், நிழல் எதனிலும் — நிலைநிறுத்திக் கொள்ள அதுவே உதவும்.



க்ளியர்·டோன்

லண்டன் • பாரிஸ் • நியூயார்க்

பாவடித் தெருவுக்குத் திரும்பினான்.

கோபிநாதன் வீடும் அதே தெருதான்.

கால் பழக்கதோஷத்தால் அங்கே திரும்பி விட்டது.

இல்லை. அரிசிக்குச் சொல்லி விட்டு வர வேண்டும். நித்யா வீட்டில் அவளைத் தவிர வேறு யாருமில்லை. அது தெரிந்ததாலேயே அங்கே போகப் பிடிக்கவில்லை.

அவனும் அவளும் தனியாக இருந்திருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள். சிரித்திருக்கிறார்கள். ஆனால் சந்தர்ப்பங்களை உருவாக்குவதோ உருவானவற்றை உபயோகிப்பதோ எங்கோ அவனைச் சிறுமைப்படுத்திற்று.

சொன்னால் சிங்காரம் நம்புவானா?

'ஆமாம், சிங்காரம் நம்புவதுதான் இப்போ ரொம்ப முக்கியம்!' தனக்குள்ளேயே ஒரு தட்டுப் போட்டுக் கொண்டு சன்னிதி வீதிக்குத் திரும்பினான்.

நித்யா வீட்டு வாசலில் எவராது தென்பட மாட்டார்களா? ஆள் விட்டு வரச் சொல்லலாம்.

சன்னிதி வீதியில் அனந்த சயனப் பெருமாள் ஆலயத்தின் உற்சவ மண்டபம் தெருவை 'அடைத்து நின்றது.

மேகம் விலகி விட சுள்ளென்று வெய்யில், எங்கோ கத்தும் சிள் வண்டுப் பின்னணியோடு. தெரு கோடை நடுப் பகலின் கொடுமைக்கு அஞ்சிப் பின்வாங்கிய நிசப்தம். ஒரு பையன் கூடத் தென்படவில்லை. வேறு வழியே இல்லை.

கதவைத் தட்டி விட்டுத் திண்ணை மேல் உட்கார்ந்து கொண்டான்.

உள்ளே என்னவோ நசநசவென்று அம்மிக் கல்லில் பலமாக நகங்கும் ஒலி. நின்றது.

''யாரது?''

''கௌதம்.''

லொடக்கென்று தாள் திறந்து கனமான தேக்குக் கதவு கரகரத்துத் திறந்தது.

''ஏன் வெளியிலே உட்கார்ந்திருக்கிங்க! உள்ளே வாங்க!''

தெரு என்பதால் அவள் 'வாங்க போங்க' போடுவதை ரசித்தான்.

''உள்ளே என்னமோ பலமாச் சமையல் நடக்கறாப்லே இருக்கு.''

''சமையலும் இல்லே மண்ணாங்கட்டியுமில்லே.'' நீ எழுந்து வரப் போகிறாயா இல்லியா என்பது போல் எரிச்சலோடு பார்த்தான்.

''அம்மிச் சத்தம் கேட்டதே?''

''ஒரு பெங்களூரா மாங்கா கெடச்சுது. உப்பும் மொளகாத் தூளும் போட்டு, அதை நசுக்கிக்கிட்டிருக்கேன். கொண்டாரட்டுமா?''

''அறுத்தே தின்னலாமே.''

அவள் சுற்று முற்றும் ஒரு வட்டம் பார்த்து விட்டுக் குரலை அடக்கிக் கொண்டு பதில் சொன்னாள்.

''உன் தலை! இந்த ஐடியா தர்றதுக்காகத்தான் ஐயா பெரிய தாசில்தார் மாதிரி வெளியே உக்காந்து பேசறீங்களா?''

''தாசில்தார் இல்லே. கலெக்டர்.''

''என்ன கலெக்டர்.. பில் கலெக்டரா இல்லே... டின் கலெக்டரா?''

''ரைஸ் கலெக்டர்.''

அவள் நாக்கை கோபமாகத் துருத்திக் கடித்தான்.

திறந்த கதவின் வழியே புழுக்கிய அரிசி மணமும், அம்மியில் அரைந்த பெங்களூரா வாசனையும் கலந்து வந்தன.

''நீ உள்ளே வரப் போறதில்லேன்னா நான் கௌம்பறேன். தெருவிலே என்ன டிராமா டயலாக் பேசறே?''

யாரோ தெருவில் சைக்கிளில் போகவே நித்யாவுக்குத் தரவிருந்த பதிலை அவன் மாற்றினான்.

''பெரியம்மா இந்த வெள்ளைப் பொன்னி ஐட்டத்திலே ஒரு மூட்டை அடுத்து அனுப்பச் சொன்னாங்க.''

அவன் வேண்டுமென்றே உரக்கச் சொன்னான்.

''இதுக்கு மேல கத்தினியானாக் கூட அதோ போறவன் காதில் விழப் போறதில்லே,'' என்று அவனை மட்டம் தட்டினான் நித்யா.

''ஏன்?''

''அவன் செவிடு''

''போகட்டும் விடு. கட்டாயம் அனுப்பனும். நான் வரட்டா?'' அவன் இவ்வளவு சட்டென்று எழுந்து விடுவான் என நித்யா எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)



இளைஞன்: 1980 — ஆம் வருஷம், வேலைக்காகப் பதிவு செய்தப்போ 90 — க்கு முந்திக் கிடைச்சிடும்னு சொன்னீங்க... இன்னும் கிடைக்கலியே சார்?''

வேலை வாய்ப்பு அலுவலர்: 90 என்று வருஷமா சொன்னோம்? வயசைச் சொன்னோம்!

— வி. ரேவதி.





இந்திரன் சந்திரன்

ஏமாந்தார் சொத்துக்கு எஜமானராய் இருக்கும் மோசடிக் குத்தகைக்காரர்களின் முகமூடியைக் கிழிக்கும் கதைதான்.

இதுவரை கமலை இந்த அளவுக்கு உருக்குலைத்துப் போட்டதில்லை. தாடைக்குள்ளும் வயிற்றுக்கு வெளியிலும் கன்னாபின்னாவென்று என்னென்னத்தையோ வைத்துக் கட்டி... கோரம்டா சாமி. ஆனால் இத்தனை கோரத்திலும் தன்னால் இனம் காட்ட முடியும் என்று சவால் விட்டிருக்கிறாரே, அங்கே நிற்கிறார் அசல் கமல்.

மேயராய் இருந்து ஊர் மேயும் கமல், தனக்கு மிஞ்சி இந்த உலகத்தில் எவருமே, எதுவுமே இல்லை என்ற ஆணவ மிடுக்கில் அனாயாசமாய்ப் புகுந்து விளையாடுகிறார். அந்தப் பெரிய அச்சகத்துக்குள் புகுந்து 'மேயரின் மன்மத லீலைகள்' என்று போஸ்டர் எழுத்தில் அச்சாகிக் கொண்டிருந்த அத்தனை பத்திரிகைகளையும் எரித்து, எதிர்த்து வரும் அத்தனை பேரையும் சாய்த்து... ஆணைத்தனமான ஆர்ப்பாட்டங்கள் இருக்கட்டும்; அத்தனையும் மன்னிக்கலாம் போல் சாகு முன் தன் குழந்தையிடம் அவர் காட்டும் பாசக் கனிவு எப்படி?

மீசையில்லாத வாலிபக் கமல், நிருபர் விஜயசாந்தியிடம் சேலையாய்த் தழுவிக் கொள்ளும் அந்தப் பாந்தம் செமை கிளுகிளு என்றால், ஜெயலலிதா (இது புதுசு சார்) விடமிருந்து நாசுக்காக விலகிக் கொண்டு, 'ஹப்பா' ,அந்த ஆள் எப்படி சமாளிச்சானோ...' என்று முணுமுணுப்பது குபீர்ச் சிரிப்பு.

'விஜயசாந்தி இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிசத்தில் துணிச்சலாய்ப் புகுவது சிலிர்ப்புத்தான்.

வில்லன் சரண்ராஜ் ஆரம்பத்தில் ஜி.கே.யின் ஜால்ரா ராஜாய் இருந்தவரை பாவமாய்த் தெரிந்தார். 'நீ என்கிட்ட சுருட்டினதையெல்லாம் வைரமா மாத்தி வச்சிருந்தியே, அதைப் பார்த்துட்டேன்,' என்று மேயர் கமல் அவரைக் கார்னர் பண்ணியதும், ஒரு சிலிர்ப்புக் காட்டி அவரை இறுக்கிக் கொண்டு, 'மரியாதையா என் வைரத்தை என்னண்டை ஒப்படைச்சிடு.' என்று மோத ஆரம்பித்து, ஒரு கொலையையும் முடித்துக் கொண்டு அடுத்து வரும் அப்பாவிக் கமலை பிளாக் மெயில் ரகத்தில் வசியம் பண்ணி, சிரித்துச் சிரித்தே மிரட்டிக் காரிய சாதனம் பண்ணும் போது கொஞ்சம் அடையாளம் காட்டுகிறார்.

சக்கர நாற்காலியில் ஊர்ந்து கொஞ்சமே வந்தாலும் நெஞ்சில் பிழிசல் காட்டி விட்டார் ஸ்ரீவித்யா. அயோக்கியத்தனமான முரட்டுக் கணவனுடன் போனில் உரையாடும் போது என்னால் கடைக்குட்டியின் பிறந்த நாளுக்கு வர முடியாது என்று கணவன் போனை வைத்த பிறகு, 'என்ன, பாப்பாவுக்குப் புது கவுன், சாக்லெட் எல்லாம் வாங்கி வர்றீங்களா? அப்படியே கேக்கும் வாங்கி வாங்க...' என்று அழுகையில் ஆனந்தப் பூச்சுக் காட்டும் நெகிழ்ச்சி பாவம் உருக்கம்.

செத்துப் போன அயோக்கியருக்குச் சிலை வைத்துச் சிலாகித்துப் பேசும் அளவுக்கு அவரை என்னத்துக்கு உயர்த்த வேண்டும்? ஊழல் பேர்வழிகளையெல்லாம் அடையாளம் காட்டிச் சட்டத்தின் முன்னால் நிறுத்துவதை விட்டு விட்டு, பொது மக்கள் தீர்ப்பில் மரண தண்டனை பெற விடுவது பரிகாரமாகுமா?

இப்படி சில பல அபத்தங்கள் தெலுங்கு மணத்தோடு சற்றுத் தூக்கல். டப்பிங் அடையாளம் தெரியாத ஒருவித சிவப்புப் படம்.

— பி. எஸ். எஸ்

R.M.வீரப்பன்

அளிக்கும்

சத்யா மூவீஸ்

பணக்காரன்

சென்னை

ஆல்பட் A/c

அன்னை அபிராமி A/c

தினசரி 4 காட்சிகள்

உதயம் A/c

கிரவுன்

ஸ்ரீ பிருந்தா A/c

தினசரி 3 காட்சிகள்

மற்றும் தமிழகமெங்கும்

P.வாசு

இளையராஜா



தயாரிப்பு

G.தியாகராஜன்

V.தமிழழகன்

M.C. சேகர்

K.R. கிருஷ்ணன்

அன்புக் கணக்குகள்!



குமரேசன் சோர்ந்து போய் வெளியே வந்தான். அவன் அப்படி ஒன்றும் செலவாளியல்ல. அப்படியிருந்தும் தந்தை அவனைக் கோபித்துக் கொண்டதை அவனால் எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

'இப்படியே சொந்தச் செலவு ஆயிட்டே போனா.... ஹாஸ்டல் வாழ்க்கையை முடிச்சிக்கிட வேண்டியதுதான். உன்னைப் போலத்தானே, உன் தம்பியும், ஹாஸ்டல்ல படிக்கிறான். இன்னும் சொல்லப் போனா... மெட்றாஸ்லே செலவு எக்கச்சக்கம். இருந்தும் அவன் உன்னை மாதிரி ஊதாரியில்லை. திருச்சியிலே அப்படி என்னதான் செலவோ....!' — என்ற தந்தையின் குமுறலைத் தம்பியிடமே கேட்டு விடலாம் என்று நினைத்து மாடியிலுள்ள கதிரேசனின் அறைக்குள் நுழைந்தான்.

தம்பி கதிரேசனோ, இந்த உலகின் நினைவே இல்லாமல் 'வாக்மேன்' இசையில் ஆழ்ந்திருந்தான். வாய் நொறுக்குத் தீனியை அசை போட்டுக் கொண்டிருந்தது.

இரண்டு நிமிட மௌனத்திற்குப் பின், குமரேசன்தான் பேசினான்.

''தம்பி, உன்னைப் பார்த்தா ரொம்பப் பொறாமையா இருக்கு.''

''என்னண்ணா! என்ன விஷயம்?''

''தம்பி, நான் சீரியஸாத்தான் கேட்கிறேன்: இந்த வருஷம், படிப்பு, ஹாஸ்டல் செலவு போக, உன்னுடைய சொந்தச் செலவு எவ்வளவு ஆச்சு?''

''எல்லாம் போக, மாசக் கணக்குப் பார்த்தாக்கூட இருநூறு ரூபாயிலிருந்து முந்நூறு ரூபாய் வரைதான் ஆகியிருக்கும்.''

''தம்பி, முந்நூறையே விட்டுத் தள்ளு. குறைந்தபட்சம் இருநூறுன்னு கணக்குப் போட்டாலும் ரெண்டாயிரம் ரூபாய்க்கு மேலே செலவழிச்சிருக்கியே. இத்தனைக்கும் நீ பி.ஏ.தான் படிக்கிறே. நானோ போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்....''

''சரிண்ணா... அதுக்கு என்ன இப்போ?''

''நீயும் நானும் ஒரே வயிற்றுப் பிள்ளைகள்தானே. நான் ஆயிரம் ரூபாய் செலவு செய்து விட்டேனாம். அப்பா என்னைத் 'தண்டச் செலவு... ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாதவன்...' அப்படி இப்படின்னு கண்டபடி திட்டிட்டார். அம்மா கூட அப்பா திட்டும் போது பக்கத்திலேதான் இருந்தாங்க. ஹூம்... ஒரு வார்த்தை கூட அனுசரணையா...''

குமரேசனின் குமுறலைக் கேட்டு கதிரேசன் சிரித்து விட்டான்.

''அண்ணா! என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன். தெரிஞ்சோ தெரியாமலோ அப்பா என்னை சைக்காலஜி படிக்க வைத்தது எவ்வளவு நல்லதாப் போச்சு பார்த்தீங்களா! நான் அந்த சைக்காலஜியை ப்ராக்டிகலா அப்ளை செய்யறேன். அவ்வளவுதான்....''

''அந்த பாழாய்ப் போன சைக்காலஜியை எனக்கும்தான் கொஞ்சம் சொல்லேன்...''

''சொல்றேண்ணா! அதுக்கு முன்னாடி, நீங்க ஒண்ணு தெரிஞ்சிக்கணும். காமர்ஸ் படிக்கிற உங்களுக்கு 'வரவு'ன்னு ஒண்ணு இருந்தா 'செலவு'ன்னு ஒரு 'அக்கவுண்ட்' இருந்தாகணுங்கறது தெரியுமில்ல. விஞ்ஞானம் கூட 'விசை'ன்னு ஒண்ணு இருந்தா 'எதிர் விசை'ன்னு ஒண்ணு இருந்தே ஆகணுங்கறது. அது மாதிரி, இந்த உலகத்துலே பெரும்பாலானவங்க 'பலன்'னு ஒண்ணை எதிர்பார்த்துத்தான் எந்த ஒரு செயலையும் செய்யறாங்க. அப்பா அம்மா கூட....''

''என்ன தம்பி இது... நீ பேசறதே புது மாதிரியாயிருக்கு. நாம அப்பா, அம்மாவுக்குத் திருப்பிச் செய்யறதுக்கு நம்மகிட்டே தனிப்பட்ட முறையிலே ஏது பணம்? அவங்க கொடுக்கற பணம்தானே. அதையே திருப்பித் தரச் சொல்றியா?''

''அண்ணா... இன்னும் விளக்கமாச் சொல்றேன் கேளுங்க. தான் வாங்கிக் கொடுத்த பிஸ்கட்டில் ஒரு பாதியைத் தின்று விட்டு, 'அப்பா, இந்தா உனக்கு...' — என்று மழலை பேசும் குழந்தையைக் கண்டு எந்தத் தகப்பனாவது கோபித்துக் கொள்கிறானா? குழந்தையின் கையில் இருப்பது, தான் வாங்கிக் கொடுத்த பொருள்தான் என்றாலும், கொடுப்பது குழந்தையல்லவா?''

சஜன்

''ஹூம்... அது மாதிரி...''

''நம்மகிட்டே அன்பு செலுத்தற அப்பா அம்மாகிட்டே....

''ஏன், என் அன்பில் என்ன குறை?''

''அதை எப்படி நீங்க புரிய வைக்கிறீங்க?''

''நீ மட்டும் அப்படி என்ன புதுவிதத்தில் புரிய வைக்கிறாய்?''

''அப்படிக் கேளுங்கள். பிள்ளைகளாப் பிறந்தவங்க வாங்கிக்க மட்டும்தான் உரிமையுள்ளவங்க. திருப்பிக் கொடுக்கவும் கூடக் கடமைப்பட்டவங்கன்னு ஒவ்வொருத்தரும் முதல்லே தெரிஞ்சிக்கணும். அப்பாவைப் பார்த்தீங்க இல்லே. அவர் இப்போ போட்டுட்டிருக்கிற ஸ்வெட்டர் நான் போன வாரம் அனுப்பினது. அம்மா கையில் இருக்குதே அந்த வளையல் நான் வாங்கி வந்தது. தங்கச்சி தேவி கழுத்திலே இருக்குதே அந்த முத்து மாலை போன வாரம் என் சிநேகிதன் மூலமாக் கொடுத்தனுப்பிச்சது.''

''அது சரி; இதெல்லாம் லட்ச ரூபாய் பெறுமோ?''


''அண்ணா, அன்பைத் திருப்பிச் செலுத்தறதிலே 'விலை' அப்படிங்கற சொல்லுக்கு அர்த்தமே கிடையாது. இன்னைக்கெல்லாம் இருந்தா, நான் வாங்கிக் கொடுத்த ஸ்வெட்டரின் விலை நூறு ரூபா கூட இருக்காது. இதை விட விலையுயர்ந்த ஸ்வெட்டர் அப்பா பீரோவிலேயே இல்லையா? ஆனா, அந்த ஸ்வெட்டரை நான் அப்பாகிட்டே கொடுத்து...''

''ஹூம்... ஏன் நிறுத்திட்டே... சொல்லு...''

''அப்பா... உங்களுக்கு இந்த மார்கழி மாசத்துலே குளிரு தாங்காதுன்னு இந்த ஸ்வெட்டரை வாங்கி அனுப்பிச்சேம்ப்பா. குளிரு தாங்குதாப்பா உங்களுக்குன்னு நான் அன்பாக் கேட்ட போது, உடனே அம்மாவைக் கூப்பிட்டு, 'பாரடி... அவனும்தான் இருக்கான். இந்த மாதிரி என்னைக்காவது ஒரு நாளு கேட்டிருக்கானா?'ன்னு சொல்லி அசந்து போயிட்டாரு. மறுநாள் நான் ஊருக்குக் கிளம்பறப்போ ரெண்டு நூறு ரூபாயைச் செலவுக்கு வச்சுக்கோன்னு கொடுத்தார். இது மாதிரிதான் அம்மாவும். நான் வாங்கிக் கொடுத்த வளையல் மூன்று மாசத்துக்குள்ளாறயே கறுத்துப் போயிடும்னு தெரியாதா? ஆனா, அம்மாவோ, வெளியூர்லே நம்ம கையால சாப்பிடாட்டாலும், பையனுக்குப் பாசமும், அன்பும் கொஞ்சம் கூடக் குறையலையேன்னு சந்தோஷப்பட்டு, அப்பாவுக்குத் தெரியாம, ஒரு நூறு ரூபாயைக் கையிலே திணிச்சாங்க. ஏன், தங்கச்சி தேவியை மறந்துட முடியுமா? நான் இருபது ரூபாய் மதிப்புள்ள முத்து மாலையைக் கழுத்திலே ஆசையாப் போட்ட பிறகு, தங்கச் செயினைக் கழற்றி வைத்து விட்டு, பக்கத்து வீட்டு ஸ்நேகிதிகிட்டே, 'எங்க அண்ணன் மெட்ராஸ்லேயிருந்து வாங்கிக் கொடுத்திருக்காரு. எங்க அண்ணனுக்கு என் மேலே எவ்வளவு பாசம்'னு சொல்றப்போ, எனக்கே உடம்பெல்லாம் புல்லரிச்சிடுச்சி. நான் எவ்வளவோ தடுத்தும் கூட, தன் பாக்கெட் மணியிலிருந்து, இருபத்தைந்து ரூபாய் கொடுத்திச்சு. இதையெல்லாம் அப்பாவும், அம்மாவும் நம்மகிட்டே கேட்பாங்களா? கேட்கத்தான் மனசு வருமா? ஆனா.... நாம கொடுக்கும் போது... அதுவும் பாசத்தையும் அன்பையுமே கொட்டிக் கொடுக்கும்போது, எந்தத் தகப்பனும் தாயும், மகனின் பரிசுப் பொருளை வாங்கிக் கொள்ள மறுத்ததாக இதுவரை சரித்திரமே கிடையாதே!''

தம்பி கதிரேசனின் வார்த்தைகளில் நெகிழ்ந்து போன குமரேசன், தம்பியைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

வெத்திலே பாக்கு எப்படி போடுறது?



வெற்றிலையில் சுண்ணாம்பு தடவியபின், காம்பு, நுனி, நீண்ட நடு நரம்பு, ஆகியவற்றை நீக்குதல் வேண்டும்.

○○ பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு ஆகிய மூன்றும் கூட்டி மெல்லும் பொழுது, அதில் ஊறும் முதல் நீர் நச்சுத் தன்மை வாய்ந்தது. அதனால் அதை வெளியே உமிழ்ந்துவிட வேண்டும்.

○○ காலையில் பாக்கு மிகுதியாகவும், உச்சியில் சுண்ணாம்பு மிகுதியாகவும், மாலையில் வெற்றிலை மிகுதியாகவும் கொள்ள வேண்டும்.

○○ பாக்கை முதலில் வாயில் போடாமல், ஒரு வெற்றிலையை மென்று விழுங்கிய பிறகே பாக்கைப் போட வேண்டும்.

ஆதாரம்: 'தமிழர் கண்ட மருத்துவம்' என்ற நூலிலிருந்து.

தகவல்: ஜி. நீலாமணி கோவிந்தராசன்

கிருஷ்ணன் உடனே வியர்த்துப் போனான். இப்படித் திடுதிப்பென்று, வந்தனாவின் அண்ணன், அவளைத் தேடிக் கொண்டு வருவான் என்று, அவன் எதிர் பார்க்கவே இல்லை.

மாடியில், தனியறையில், குடி போதையில் இருக்கும் அரவிந்த், வந்தனாவிடம் தன் காதலைத் திணித்துக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், இவரிடம் என்ன பதில் சொல்வது?

''உங்களைத்தான் கேட்டேன். வந்தனா, என் சிஸ்டர் இங்கே வந்...'' என்ற கோபி தன் கேள்வியை முடிப்பதற்கு முன்பாக வாசலருகில் வந்தனாவின் செருப்புக்களைப் பார்த்து விட்டான்.

''அட, இங்கேதான் வந்திருக்கா, எங்கே?''

கிருஷ்ணன் சுதாரித்துக் கொண்டு, ''மாடில அரவிந்த் உங்க தங்கையோட பேசிகிட்டிருக்கான். இருங்க, நான் போய்க் கூட்டிட்டு வர்றேன்,'' என்றான். ''நீங்க இங்கே உட்காருங்க.''

கிருஷ்ணன் அவசரமாகப் படிகள் ஏறி மாடிக்கு வந்தான். அறையின் கதவை அதிக ஓசையில்லாமல் தட்டினான் சற்று அவசரம் காட்டி. சில வினாடிகள் கழித்துச் சாவி போட்டுக் கதவைத் திறந்த அரவிந்தின் கண்கள், மிகவும் சிவந்திருந்தன. நிற்கவே முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான். எதிரே இவன் வந்ததுமே சரிந்து அவன் தோளில் சாய்ந்து கொண்டான். கண்கள் செருகின.

''வந்தனா எங்கே அரவிந்த்? அவ அண்ணன் வந்திருக்கார்?''

இவன் கேட்ட கேள்வி அரவிந்திற்கு ஏறவே இல்லை. ''கோபம் வந்து இரண்டு கன்னத்திலேயும் மாறி மாறிப் பளார், பளார்னு அறைஞ்சுட்டேன். அப்படியும் என்னைக் காதலிக்க மாட்டேங்கறாடா. நியாயம் சொல்லு,'' என்றான் குழறலாக.

கிருஷ்ணன் அவசரமாக உள்ளே பார்க்க... மேலாடை சரிந்த நிலையில் கட்டில் அருகே தரையில் கிடந்த வந்தனா மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். உதடு கிழிந்து ரத்தம் வழிந்திருந்தது.

''முட்டாள், என்னடா செஞ்சே அவளை?'' பதறினான் கிருஷ்ணன்.

''நீ சொன்ன மாதிரி கிஸ் மட்டும்தான் செஞ்சேன். அப்படியும் ஐ லவ் யூன்னு சொல்லலை. அறைஞ்சேன். வேறெதுவும் செய்யலை'' என்றவன், 'ஓவ்' என்று வாந்தி எடுக்க முனையவே... அவனைக் கைத்தாங்கலாகப் பாத்ரூமுக்கு அழைத்துச் சென்ற கிருஷ்ணனுக்கு, என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கீழே அண்ணன் காத்திருக்கிறான். மேலே, அரவிந்தின் படுக்கையறையில், தங்கை உடம்பில் கீறல்களோடு, கன்னத்தில் விரல் அச்சுப் பதிவுகளோடு மயங்கிக் கிடக்கிறாள். இவனோ, தன்னுணர்வு இல்லாமல், தடுமாறி நிற்கிறான்.

பெரிய சப்தத்துடன் வாந்தியெடுத்தான் அரவிந்த்.

கீழே உட்கார்ந்திருந்த கோபி எழுந்து கொண்டான். மாடியிலிருந்து வாந்தி எடுக்கிற சப்தம் வருகிறது. வந்தனாவின் குரலையே காணோம். அவளை அழைத்து வருவதாகச் சொல்லிச் சென்ற கிருஷ்ணனையும் காணோம். என்ன நடக்கிறது அங்கே?

''வந்தனா!'' குரல் கொடுத்துக் கொண்டே படியேறினான் கோபி.

வாந்தியெடுத்த களைப்புடன், போதை மயக்கமும் சேர்ந்து கொள்ள, கிருஷ்ணன் கைத்தாங்கலாகக் கூட்டி வந்து, படுக்கையில் படுக்க வைத்த நொடியிலேயே உறங்கிப் போனான் அரவிந்த்.

அறைக்குள் வந்து, வந்தனாவைப் பார்த்து விட்ட கோபி, பதறிப் போய், ''வந்தனா! வந்தனா! என்னம்மா இது?'' என்று அவளருகே ஓடி வந்தான். அவள் கன்னங்களைத் தட்டினான். மேலாடையைத் திருத்தினான். கோபமாகத் திரும்பினான்.

''என்னாங்கடா இது? அவளுக்கு என்னடா ஆச்சி? இங்கே என்னடா நடந்துச்சி?'' ஆக்ரோஷமாகக் கிருஷ்ணனின் சட்டையைப் பிடித்து உலுக்கினான் கோபி. ஆல்கஹாலின் நெடி அவன் மூக்கைத் தாக்கிற்று.

வல்லமை தாராயோ?

14

பட்டுக்கோட்டை பிரபாகர்

கைகளைப் பிடித்துக் கொண்டு நின்ற கிருஷ்ணன், ''பதறாதீங்க. பயப்படற மாதிரி எதுவும் இங்கே நடந்திடலை. வேலையை ராஜினாமாப் பண்ணி அவமானப்படுத்திட்ட கோபமும், போதையும் சேர்ந்து அரவிந்தை முரட்டுத்தனமா நடந்துக்கச் செஞ்சிடுச்சி. விபரீதமா எதுவும் ஆய்டலை. ஆத்திரமா உங்க தங்கையை அறைஞ்சுட்டான். மயங்கிட்டா. அவ்வளவுதான். விவரமாப் பேச நேரமில்லை. வாங்க. முதல்லே அவங்களைப் பக்கத்திலே இருக்கிற டாக்டர்கிட்டே கூட்டிப் போகலாம். நம்ம சண்டையை வச்சுக்கவோ, ஆத்திரப்படவோ இப்போ நேரமில்லை. வாங்க, பிடிங்க, சொல்றேன்'' என்றான்.

கோபிக்கு அதிர்ச்சி இன்னும் ஜீரணமாகவில்லை. பதற்றம் பிரதானமாக இருந்தது.

முதலில் டாக்டரிடம் செல்ல வேண்டும் என்பதுதான் முக்கியம் என்பதை உணர்ந்தான். வந்தனா அருகில் வந்து, அவளைத் தோள்களுக்கடியில் கைகொடுத்துத் தூக்க, கிருஷ்ணன் கால்களைப் பிடித்துத் தூக்கினான்.

''வந்தனா, யம்மாடி... கண்ணைத் திறந்து பாரும்மா,'' என்று கண்ணீர் சொட்டப் புலம்பிக் கொண்டே படிகளிறங்கினான் கோபி.

கீழே வெய்ட்டிங்கில் இருந்த ஆட்டோவில் வந்தனாவுடன் இருவரும் ஏற, டிரைவர், ''என்னங்க இது, என்ன ஆச்சு?'' என்றான்.

''சும்மா மயக்கம்ப்பா. பக்கத்திலே கனகதுர்க்கான்னு ஒரு டாக்டரம்மா இருக்காங்க. வண்டியை எடு முதல்ல,'' என்றான் கிருஷ்ணன்.

கோபி தன் மடியில் இருந்த வந்தனாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆட்டோ தடக், தடக் என்று குலுங்கி ஓடியது. ஒரு விளக்குக் கம்பம் உள்ளே வெளிச்சமடித்து விட்டுக் கடந்தபோது, வந்தனா மெலிதாக முனகி, முகத்தைச் சுருக்கியது தெரிந்தது. இரண்டு கன்னங்களிலும் சிவப்பாக விரல் அச்சுக்கள்!





நிலா, நிலா வாங்கோ!

ஒரு நாள் என் நண்பன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அவர் தம் மூன்று வயதுக் குழந்தையை, ''இனிமேல், 'வா, போ,'' என்று யாரையும் சொல்லக் கூடாது'' என்று கடுமையாகக் கோபித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது நான் அந்தக் குழந்தையைச் சமாதானப்படுத்தி, ''பாப்பா, எங்கே ஒரு நர்ஸரி ரைம் பாடு, பார்க்கலாம்,'' என்றேன்.

அப்பாவால் எச்சரிக்கப்பட்ட அந்தக் குழந்தை பாடிய பாட்டு:

நிலா, நிலா வாங்கோ!
நில்லாமல் வாங்கோ!
மலைமேலே ஏறி வாங்கோ!
மல்லிகைப்பூ கொண்டு வாங்கோ!

— பி. வி. சீனிவாசன்.

பாவி! இப்படியா அறைவான் மிருகத்தனமாக?

கனகதுர்கா மருத்துவமனையில் கூட்டல்குறி ஒட்டின 'பியட்' கார் நின்று கொண்டிருந்தது. இரண்டு நர்ஸ்கள் வார இதழில் குறுக்கெழுத்துப் போட்டிக்காகப் பென்சிலுடன் விவாதம் செய்து கொண்டிருந்தவர்கள் இவர்களைப் பார்த்து எழுந்து கொண்டார்கள்.

ட்ரெஸ்ஸிங் அறையில் படுக்க வைத்துவிட்டு, டாக்டரை உறக்கத்தில் இருந்து எழுப்பிக் கொண்டு வந்தார்கள். வாசல் அகலத்தில் இருந்த டாக்டர் கனகதுர்கா லூசாகியிருந்த தனது கொண்டை ஊசிகளை டைட்டாகச் செருகிக் கொண்டே வந்து, ''வாங்க கிருஷ்ணன், என்ன இது, என்ன ஆச்சு?'' என்றார்.

கிருஷ்ணனுக்கு என்னவென்று சொல்வதென்று புரியவில்லை. அதற்குள் கோபி முந்திக் கொண்டான்.

''டாக்டர், நான் கோபி. இவ என் தங்கை. தொழிலதிபர் அரவிந்த் வீட்டிலே இவளைத் தனிமையில வரவழைச்சு, குடி போதையில, கன்னா, பின்னான்னு அடிச்சுட்டான். அதில மயங்கிட்டா. அப்படின்னு சொல்றதுதான். எனக்குப் பயமா இருக்கு. கொஞ்சம் பாருங்க.''

கோபி சொல்லி முடிக்கும் வரைக்கும் காத்திருக்காத டாக்டர் வந்தனாவைச் சோதிக்க ஆரம்பித்துவிட்டார். பல்ஸ் பார்த்து, இமைகளைப் பிரித்துப் பார்த்து, ஸ்டெத் வைத்துப் பார்த்து... இவர்கள் பக்கம் திரும்பினார்.

''பயப்பட ஒன்றுமில்லை. வெறும் அதிர்ச்சி மயக்கமாத்தான் தெரியுது. ஷி ஈஸ் நார்மல். உதடு கிழிஞ்சிருக்கிறதும், அங்கங்கே நகக் கீறல்களும் பார்க்கிறப்போ ரேப் அட்டெம்ப்ட் மாதிரி தெரியுதே?''

''என்னது!'' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டான் கோபி.

''இந்தக் கேசை நான் எடுத்துக்கலாமான்னே யோசிக்கணும். நீங்க ரெண்டு பேரும் கொஞ்சம் வெளியில இருங்க.''

இருவரும் வெளியில் வந்து, கதவு சாத்தப்பட்டதும் கிருஷ்ணனின் சட்டையைப் பிடித்தான் கோபி, ''ஏன்டா படுபாவிங்களா, என் தங்கையின் வாழ்க்கையை நாசம் பண்றதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா? உங்களை விடமாட்டேன்டா. தொலைச்சிடுவேன் தொலைச்சி.''

கோபி அவனைத் திட்டிக் கொண்டேயிருக்க, கிருஷ்ணன் எதுவுமே பதில் பேசாமல் பரிதவிப்புடன் தன் நகத்தைக் கடித்துக் கொண்டு நின்றான்.

அறைக் கதவு திறக்கப்பட்டது.

கனகதுர்கா தெளிவுபெற்ற முகத்துடன், ''விபரீதமா எதுவும் நடந்துடலை. ஆனால் பலவந்த முயற்சிகள் நடந்திருக்கு. அப்படியா கிருஷ்ணன்?'' என்றார்.

''இல்லை டாக்டர், குடிபோதையில இருந்தான் அரவிந்த். இந்தப் பொண்ணு தன்னை அலட்சியப்படுத்தி, தான் போட்டுக் கொடுத்த வேலையை ராஜினாமா செய்துட்டாளேங்கிற ஆத்திரத்திலே அடிச்சுட்டான். அதான் நடந்தது. விவரமா அப்புறம் சொல்றேன். உங்களுக்கு எந்த வில்லங்கமும் வராது. இது கேஸாய்டாது. இப்ப என்ன மருத்துவ உதவி செய்யணுமோ, செஞ்சிடுங்க, ப்ளீஸ்...''

அடுத்த பத்து நிமிடங்களில் வந்தனாவின் உடம்பில் இருந்த கீறல்களுக்கும், உதட்டின் காயத்திற்கும் மருந்து போடப்பட்டு, பிளாஸ்திரி ஒட்டப்பட்டு, ஊசிகள் போடப்பட்டு, ஓர் அறையில் அட்மிட் செய்யப்பட்டாள்.

''காலைல விவரமாப் பேசிக்கலாம். ராத்திரி உங்க தங்கை இங்கேயே இருக்கட்டும். எதுவும் நடந்துடலை. தைரியமா இருங்க. வருத்தம் வேணாம். நான் புறப்படறேன்,'' என்றான் கிருஷ்ணன்.

''போடா. அவ கண் முழிக்கட்டும். நடந்ததைச் சொல்லட்டும். அதுக்கப்புறம் பார்த்துக்கிறேன். எங்கே போய்டுவீங்க? காக இருக்குங்கிற திமிரா?'' என்றான் கோபி ஆத்திரமாக.

கிருஷ்ணன் மௌனமாக வெளியேறி, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நடந்தான். விளையாட்டாகச் சொன்ன ஒரு

யோசனை இவ்வளவு தூரம் விபரீதமாகக் கொண்டு வந்துவிட்டதே!

உணர்வுகள் திரும்பி, தன் நிலை உணர்ந்த பிறகு வந்தனா என்ன செய்யப் போகிறாள்? சாதாரணமாகவே தன்மானம் பார்ப்பவள்.

கிருஷ்ணன் பெருமூச்சு விட்டான். அரவிந்த் பங்களாவிற்கு ஓர் ஆட்டோ பிடித்துக் கொண்டு புறப்பட்டான்.

விடியற்காலை நான்கு மணிக்கு அரவிந்த் விழிப்பு ஏற்பட்டுப் புரண்டான். சட்டென்று எழுந்து அமர்ந்தான். தலை தெறித்து விடும் போல் வலித்தது. லேசாக ஹேங்க் ஓவர் இருந்தது. முன்னிரவில் நடந்தவை உடனே நினைவுக்கு வர, எழுந்து விளக்குகளையெல்லாம்போட்டான்.எங்கே வந்தனா? என்ன நடந்தது அப்புறம்?

கீழே சரிந்து விழுந்தாள். நான் கிருஷ்ணன் தோளில் சாய்ந்து கொண்டு வாந்தி எடுத்தேன். வந்தனாவை அறைந்து, கட்டிப் பிடித்து, கன்னத்தில் மூர்க்கமாக முத்தமிட்டு... அய்யோ! நான்தானா? ச்சீ! நிஜமாக நான்தான் அப்படியெல்லாம் நடந்து கொண்டேனா? எங்கே அவள்?

அரவிந்த் பதற்றமாக இறங்கி வந்து பார்க்க, ஹாலில், சோபாவில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான் கிருஷ்ணன்.

அவனைத் தட்டி எழுப்பிப் பதற்றமாகக் கேட்டான்: "டேய், ராத்திரி கசமுசான்னு எப்படியெப்படியோ நடந்துக்கிட்டேன் போலிருக்குதுடா. வந்தனா எங்கே? என்ன நடந்துச்சு?" எனக்கு எதுவுமே நினைவில இல்லை. சொல்லு."

கிருஷ்ணன் வந்தனாவின் அண்ணன் வந்ததில் இருந்து துவங்கி விளக்கமாக எல்லாவற்றையும் சொல்லி முடித்ததும்...


பளீர், பளீர் என்று இரு கைகளாலும் தன் முகத்தில் அறைந்து கொண்டான் அரவிந்த்! "அய்யோ! நான்தானா அப்படியெல்லாம் நடந்துக்கிட்டேன்? ச்சே! நீ சொன்னால் எனக்குப் புத்தி எங்கே போச்சு! மயக்கம் வர்ற வரைக்கும், ஆஸ்பத்திரிலே சேர்க்கிற அளவுக்கு அவளைத் துன்புறுத்தி... ஓ... நோ! என்ன ஆச்சுடா எனக்கு? வா! முதல்ல அவளைப் பார்த்து அவ கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்கணும். புறப்படு." என்றான்.

"இருடா. உணர்ச்சிவசப் படாதே. இப்ப அவளை நீ சந்திக்கிறது சரியில்லை. உணர்வு திரும்பியிருந்தாலும் உன் மேல ஆத்திரமா இருப்பா. வேணாம்."

"முட்டாள்தனமாகப் பேசாதே. என்னோட பைத்தியக்காரத்தனமான செய்கையால ஒரு அப்பாவிப் பொண்ணு ஆஸ்பத்திரியில கிடக்கிறா. எத்தனை பேருக்கு டென்ஷன்! வரப்போறியா இல்லையா?"

அரவிந்த் பத்தே நிமிடங்களில் உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

(தொடரும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

எத்தனை துணிச்சல்! என்னவொரு தன்னம்பிக்கை!

* 'இளைஞர்கள் பார்வையில் இன்றையப் பெண்கள்' கருத்தரங்கு நல்ல சுவாரஸ்யம். முதலில் ஆண்கள், தாங்கள் பெண்களை விட உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மையை விட்டொழித்தால் போதும்; எல்லாப் பிரச்னைகளும் சரியாகி, உண்மையிலேயே சமத்துவம் ஏற்பட்டு விடும்!

மங்கைநல்லூர். ஆர். செல்வ ராணி.

* நா. காமராசனின், 'கிராம தேவதை' கவிதை அதற்கே உரிய கிராமிய முறையில் அமைந்திருந்தது மிக அருமை.

சீர்காழி — 11. வி. வெங்கட் ராமன்.

* எந்தக் காரியத்திலும் — முயற்சியிலும் இறங்காமலேயே வெற்றியின் பெருமையைப் பங்குபோடுவதற்குப் போட்டி போடும் இந்தக் காலத்தில் ஐந்து பெண்களும் தங்களின் வெற்றிக்குப் பயிற்சியாளர் தான் காரணம் என்பதும், பயிற்சியாளரோ அப் பெண்களின் உழைப்புத்தான் காரணம் என்பதும் பாராட்டப்பட வேண்டிய — எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டிய — பெருந்தன்மையான பண்பாகும்!

தூத்துக்குடி — 5. வி. ரவி.

* வாஸந்தியின், "வழக்கு" குறு நாவலும், அதற்கு ம.செவின் ஓவியமும் மகளிர் சிறப்பிதழில் பெருமை சேர்க்கின்றன.

சங்கை, எம்.ஜி. இராமச் சந்திரன்.

* பெண்களின் மென்மையான மனத்தின் சின்னச்சின்ன எதிர்பார்ப்புகளைக் கூட மழுங்கடிக்கச் செய்திடும் கணவன்மார்களை அப்பட்டமாகச் சித்திரித்ததோடு, 'பெண் என்பவள் ஒரு குடும்பத்தின் ஆண்மகன் நிலை குலையும் போது அவனைத் தாங்கும் சக்தி படைத்த வலிமை பெற்றவள்' என்பதையும் தெளிவாகக் காட்டியது, எஸ். பட்டம்மாவின் 'வலிமை' சிறுகதை மட்டுமல்ல; வாஸந்தியின் 'வழக்கு' எனும் நெடுங்கதையும் கூடத்தான்! மகளிர் சிறப்பிதழுக்கு ஒன்று 'மணிமகுடம்' என்றால் மற்றொன்று 'மாணிக்கக் கல்..' என்பதே பொருத்தம்.

கோவை — 16. கா.க. வேலாயுதன்.

* கிடைத்த எம்.பி.பி.எஸ் சீட்டைப் புறக்கணித்து, நர்சாகப் பயிற்சி பெற்றுப் பணியாற்றும் பொற்செல்வி, இந்த நூற்றாண்டின் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல்! இந்த 'மதிப்புக்குரிய பெண்மணியை' உலகம் அறிதல் வேண்டும்!

சிட்லபாக்கம். அ. ஷண்முக சுந்தரம்.

* மகளிர் சிறப்பிதழில் எதைப் பாராட்டுவது, எதைப்பாராட்டாமல் விடுவது என.. ஒரே குழப்பம். அத்தனை அருமை. ஷபானா ஆஸ்மி மாதிரி ஊருக்கு ஒரு பெண்ணாவது இருக்க வேண்டும். அப்பா! எத்தனை துணிச்சல்! என்ன ஒரு தன்னம்பிக்கை!

சென்னை — 45. அ. ஜப்பார் காதர்.

* 'ஏழை எளியவர்களுக்குக் கால்கள் உள்ளன என்பதையே அரசியல் வாதிகள் மறக்கடித்து விட்டனரே' என்று கூர்மையாக அரசியல் வாதிகளைச் சாடும் ஷபானா ஆஸ்மி, ஒட்டுமொத்தமான சமுதாய மாற்றம் ஏற்படும் போது நாம் உயிரோடு இல்லாவிட்டாலும் அதன் வெற்றியில் ஒரு சிறுபங்கு நிச்சயம் தம்முடையதாக இருக்கும் என்று அழுத்தமாகக் கூறியிருப்பது அவருடைய ஈடு இணையற்ற தன்னம்பிக்கையைக் காட்டுகின்றது!

கோவை — 16. பெ. அருண்.

* தேசிய முன்னணி அரசைப் பாராட்டி, நமது கடன் 20,526 கோடி என்பதையும் சுட்டிக்காட்டிக் கடைசியில் நிதி விஷயத்தில் அவர்கள் புத்திசாலித்தனத்தைக் காட்ட வேண்டும் என்று லேசாக ஒரு குட்டும் போட்டு விட்டீர்கள். இது கல்கிக்கே கைவந்த கலை.

பூனாம்பாளையம். என்.ஆர். சுப்பிரமணியன்.

* 'கடன் ரத்து என்பதும், இலவச விநியோகம் என்பதும் வெறும் மாயை தான்' எனத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். தங்கள் கருத்து சரியான கருத்துத்தான். தமிழக அரசு அறிவித்துள்ள இலவச அரிசி, இலவச வேட்டி — சேலை, பள்ளியில் இலவசச் செருப்பு, இவைகளை எல்லாம் உடனடியாக நிறுத்தி விட வேண்டும். அதற்குப்பதிலாக வசதியில்லாதவர்களுக்கும் நடுத்தர வர்க்கத்திற்கும் எல்லாப் பொருள்களும் குறைந்த விலையில் கிடைத்திட வழி செய்ய வேண்டும்.

பொள்ளாச்சி. சோ. தமிழ்விரும்பி. தி. மு. க. தலைமைக் கழகப் பேச்சாளர்.

வட்ட மேஜை

* கல்கி 14.1.90 இதழில் நீங்கள் கேட்டவை பகுதியில் ஆர்.எம்.வீ.யின் அரசியல் செல்வாக்குப் பற்றிக் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானது. அரசியல் உள்நோக்கத்துடன் கூறப்பட்டதோ என்ற ஐயத்தையும் உண்டு பண்ணுகிறது. திருச்சியில் நடந்த பிராமணர் சங்க மாநாட்டில் ஆர்.எம்.வீ. பேசிய கருத்துக்களின் சாராம்சம்:

1. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை நம்முடைய வேதங்களும், பல மதங்களும் குறிப்பிடுகின்றன. இந்தக் கொள்கையை எப்போதும் கடைப்பிடிப்பவன் நான்.

2. பிராமணர்கள் இந்திய தேசிய விடுதலைக்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய அரும் பெரும் தொண்டுகளையும் தியாகத்தையும் யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. தமிழ் ஆர்வத்தால் பெயர்களைத் தமிழில் மாற்றும் பழக்கத்தை முதன் முதலில் ஏற்படுத்தியவர் ஒரு பிராமணரே. "சூரிய நாராயண சாஸ்திரியார்" என்ற தம்முடைய இயற் பெயரைப் 'பரிதி மாற் கலைஞர்' என்று மாற்றிக் கொண்டார்.

3. இந்த நாட்டில் ஜாதிக்காகச் சங்கம் தேவையில்லை என்ற நிலை உருவாகும் போது பிராமணர்களுக்கும் சங்கம் அவசியமில்லை.

4. 'கடவுள் மறுப்பு, பிராமணர் எதிர்ப்பு போன்ற செயல்கள் எல்லாம் தற்போதைய சூழ்நிலைக்குத் தேவையில்லாத ஒன்று. இவை காலாவதியாகிவிட்ட காசோலைக்கு ஒப்பாகும்.

5. 'நாட்டு நலனை மனத்தில் கொண்டு எல்லோரையும் நல்ல முறையில் வழி நடத்திச் செல்ல வேண்டிய தார்மீகப் பொறுப்பு இன்னமும் பிராமண சமூகத்திற்கு இருக்கிறது.

சென்னை — 18. எஸ். பாலசுப்பிரமணியன், மாநிலத் தலைவர் தமிழ்நாடு பிராமணர் சங்கம்.



யாரோ ஒருவனை எதிர்பார்த்த அவ்விருவரும் மோட்டார் சைக்கிளில் வந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்துத் திகைத்த போது —

வண்டியை நிறுத்தி, அதிலிருந்து இறங்காமலே அவர்களை உற்றுப் பார்த்தார் அவர். கால்களைச் சாலையில் பதித்து மோட்டார் சைக்கிளை முன்னே நகர்த்தினார்.

அவர்களை அணுகியதும் ஒரு காலை அழுத்தி வன்றி வண்டியை நிறுத்தினார்.

பார்வை அவர்கள் மீதே நிலைத்திருந்தது. முகத்தில் மெள்ளச் சிரிப்பு விரிந்தது.


திகைத்துப் போன அவ்விருவரும் சட்டென்று சமாளித்துக் கொண்டார்கள்.

ரஞ்சனா ஓரடி முன்னே வந்தாள். கேட்டாள்.













இன்ஸ்பெக்டர் வண்டியிலிருந்து இறங்கினார். ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினார். திரும்பி, இடுப்பின் மீது கைகளை வைத்துக் கால்களை ரோடின் மீது அழுத்தமாகப் பதித்துக் கம்பீரமாக நின்றார்.
அவர் முகத்தில் ஒரு தீவிரம் தெரிந்தது. ஏதோ ஒரு முடிவை அவர் உறுதியாக எடுத்து விட்டதைப் போலத் தெரிந்தது.
அவ்விருவருமே அதைப் புரிந்து கொண்டார்கள்.
'இவரைக் கழற்றி விடுவது அவ்வளவு சுலபமாக இருக்கப் போகிறதில்லை' என்று நினைத்தாள் மாலினி.
'உண்மையைச் சொல்லிவிட வேண்டிய நேரம் வந்துவிட்டது' என்று முடிவு செய்தாள் ரஞ்சனா.
இன்ஸ்பெக்டர்தான் பேசினார்.
இந்த நிமிஷத்தோட உங்க முயற்சிகளை நிறுத்திக்குங்க. இதுக்கு மேலயும் உங்களை நான் அனுமதிக்கறதுக்கு இல்லை. உங்க நன்மைக்குத்தான் சொல்றேன்.
உங்க அறிவுரையை நீங்க நிறுத்திக்கலாம். அதன்படி நாங்க நடந்துக்கறதாக இல்லை.
எங்களைக் காப்பாத்திக்கற துணிவும் திறமையும் எங்களுக்கு இருக்கு.
எதுக்காகப் பிடிவாதம்? தற்செயலான ஒரு விபத்தை வீணான கற்பனையால விபரீதமாப் பார்க்காதீங்க.
மனசு திறந்து சொல்றேன். வசுமதியோட மரணம் தற்கொலையோ விபத்தோ இல்லை...
தற்கொலை செய்துக்கற அளவுக்கு அவ கோழை இல்லை. அது விபத்தும் இல்லை. காரணம் நீச்சல்ல அவ கெட்டிக்காரி. ஸோ... நிச்சயமா அது கொலைதான். இப்போ என்ன சொல்றீங்க?
தொடரும்



தளபதி வீரமணிக்கு நோபெல் பரிசு தரலாமா?

* கே. வேல்சாமி, மதுரை.

? 'ஜெ' சுறுசுறுப்பாகச் செயல்படுவதாகத் தோன்றுகிறதே?

! ஆமாம், காலையில் ஒரு கதையை அனுப்பினால் மாலைக்குள் படம் போட்டு அனுப்பி விடுவார். ரொம்ப நாட்களாகவே அவரிடம் இந்தச் சுறுசுறுப்புக் குறையவே யில்லை! ஆமாம்... நீங்கள் ஓவியர் ஜெயராஜைத்தானே குறிப்பிடுகிறீர்கள்?

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? பார்திராஜாவின் ''மலரும் நினைவுகள்'' எப்படி'

! அதிகம் தன்னைப் பற்றிப் பீற்றிக் கொள்ளாமல், எப்படியெல்லாம் சிந்திக்கிறார் என்பதைப் புரிய வைத்தார். சுட்டதைச் சுருட்டி டப்பாவில் அடைத்துத் தயாரிப்பாளரிடம் கொடுக்காமல், சிறப்பாக எடுக்க வேண்டும் என்ற அவரது எண்ணம் தெரிந்தது. கேள்வி கேட்பவர் தமது முகத்தையே காட்டாமல் கேட்டது புதுமையாக இருந்தது!

* பி. ஆர். சோப்ரா மணியன்,
சென்னை — 4.

? திராவிடக் கழகக் கண்மணிகள் திருச்சி புதூர் அக்கிரஹாரத்தில் குடுமி அறுப்புப் போர் நடத்திய போது, ''பிராமணப் பெண்களைத் தேசியமயமாக்குவோம்'' எனக் கோஷம் எழுப்பியதாகப் பத்திரிகைச் செய்திகள் சொல்கின்றன. ஒரு மனித ஜாதியை தேசியமயமாக்குவது உலகப் பொருளாதார வரலாற்றில் புதிய கோட்பாடாகத் தெரிகிறது. எனவே கருஞ்சட்டைச் செம்மல் தளபதி வீரமணிக்கு இவ்வாண்டு பொருளாதார நோபெல் பரிசைச் சிபாரிசு செய்தால் என்ன?

! பிராமணர் மாநாட்டில் தரக்குறைவாகச் சிலர் பேசியதும், கோஷங்கள் எழுப்பியதும்தான் நீங்கள் குறிப்பிட்டது போன்ற எதிர்க் கோஷங்கள் எழக் காரணம் என்பதாகவும் சில செய்திகள் வருகின்றன. முட்டை முதலா, குஞ்சு முதலா என்ற பிரச்னையை ஒதுக்கி விட்டு, இருதரப்பிலும் வெறுப்பை நீக்கி, அன்பினால் வெற்றி கொள்ளப் பார்ப்பதே நல்லதாயிருக்கும்.

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? பஞ்சாப் பிரச்னைகளுக்கான ஆலோசனைகளில் காங்கிரஸைச் சேர்க்கக் கூடாது என்று சொல்வது சரிதானா?

! லூதியானாவில் அண்மையில் நடந்தது ஒரு நல்லெண்ணப் பேரணிதானே தவிர, ஆலோசனைக் கூட்டம் அல்ல. அதில் காங்கிரஸ் கலந்து கொள்ளக் கூடாது என்று சில சீக்கியப் பிரிவினர் கூறினர். இதனால் இந்தப் பேரணி நடப்பதே சந்தேகமாகி விடும் போலிருந்தது. நல்லவேளை ராஜீவ், ''காங்கிரஸ் கலந்து கொள்ளாது'' என்று அறிவித்து, பேரணி நடந்து நல்லெண்ணம் பெருக உதவினார். இதில் தேவிலால் உபயமும் உண்டு. பஞ்சாப் பிரச்னை காங்கிரஸால் உருவாக்கப்பட்டது என்பதால் அது பேரணிகளிலும் பேச்சு வார்த்தைகளிலும் கலந்து கொள்ளக் கூடாது என்ற கருத்து சரியல்ல. அந்தக் காரணம் பற்றியே அது கலந்து கொள்வது அத்தியாவசியமாகிறது!

* என். பாலகிருஷ்ணன், சென்னை — 4.

? சித்திரமாலாவில் இப்போதெல்லாம் தொடர்ந்து தமிழ்ப் பாடல்களும் ஒளிபரப்பாகின்றனவே?

! விசித்திரமாலாதான்!

* மஞ்சுதேவன், கல்கத்தா.

? வேடந்தாங்கல் சென்று பல தேசப் பறவைகளைப் பார்த்து மகிழ்ந்ததுண்டா?

! இரண்டு மூன்று தடவை போனதில் ஒரு தடவை கேட்ட சுகமான 'கடி' மறக்க முடியாதது: ஒரு கல்லூரி மாணவன் நண்பனிடம், ''இது ருஷ்யப் பறவை; இது பர்மா; இது அமெரிக்கா'' என்று ரீல் விட, மூன்றாவதாக ஒருவன் கூறினான்: ''இதுக்குத்தான் அந்தந்த தேசப் பறவை அந்தந்த தேச உடையில் வரணும்கிறது. இவன் ரீல் விட முடியாதில்லே!'' முதல் மாணவன்: ''அது சரி, அப்போ நம்ம ஊர் காக்காவுக்கெல்லாம் யார் வேட்டி கட்டறது?'' மூன்றாவது மாணவன்: ''வேட்டி கட்டின காக்கா

தானே, செக்ரடேரியட் பக்கம் போய்ப் பாரு! நிறைய வருது!''

*** கே. ஷகிலாபானு மொய்தீன், ரெட்ஹில்ஸ்.**

? ''பல இலக்கியவாதிகளை உருவாக்கியது அவர்களின் பணத் தேவைகள்தான்'' என்று எழுத்தாளர் தாமரை மணாளன் கூறியிருக்கிறாரே?

! பணத் தேவ்வயும், பிரபலமடையும் ஆசையும் எழுத்தாளர்களை உருவாக்க லாம்; இலக்கியத்தை உருவாக்க முடியாது! இலக்கியத்தை உருவாக்குவது ஆற்றல் மட்டுமே!

*** வசந்தா காந்த், கருப்பம்புலம்.**

? ராகவானந்தம், ஹண்டே விலகலை, ''பொம்மைகள் விழுந்தால் கோபுரம் சாய்ந்து விடாது'' என்று வீரப்பன் கூறியிருக்கிறாரே?

! அஸ்திவாரம் அசைந்ததால் விழுந்த பொம்மைகள், என்பதை வீரப்பன் பொம்மை மறக்கக் கூடாது.

*** எம். முத்து, மதுரை.**

? உங்கள் நெஞ்சைத் தைத்த விஷயம் ஏதாவது?

! ''பல மாவட்டங்களில், குறிப்பாகச் சேலம் மாவட்டத்தில் சாராயம் பகிரங்கமாக விற்கப்படுகிறதே; மதுவிலக்குக் கொள்கையில் மாற்றம் உண்டா, என்ன?'' என்பதாக வாழப்பாடி கேட்டிருப்பதுதான். அவரது கிண்டல் ரசிக்கும்படியாகவும், செய்தி வேதனை அளிப்பதாகவும் உள்ளது.

*** ஏ. பி. வரதராஜ பெருமான், திருத்தங்கல்.**

? இல்லறத்துக்குப் பின் துறவறம்; துறவறத்துக்குப் பின் இல்லறம் — எது சிறந்தது?

! இல்லறத்துக்குப் பின் துறவறம் — புரிந்து கொள்ளக் கூடியது. துறவறத்துக்குப் பின் இல்லறம் அசிங்கமானது.

*** எஸ். சிவபாண்டியன், எட்டியத்தளி.**

? 'இசை ஞானி' சுப்புடுவைப் பற்றி?

! ஏன், இளையராஜா மீது உங்களுக்கு

> *** ரூ. 20 பரிசு பெறுபவர்:**
>
> **எல். ஆர். விஜயகுமார்,**
> **பிளாட் 24, ஏழாவது தெரு,**
> **கார்த்திகேயபுரம்,**
> **மடிப்பாக்கம்,**
> **சென்னை — 600 091.**

என்ன கோபம்?

*** என். எடிசன் மதுபாக்கியா, அச்சம்பாடு.**

? யாரைக் கண்டு மூக்கின் மேல் விரல் வைக்கிறீர்கள்?

! சிறுவர் இலக்கியத்துக்காகப் பூவண்ணன் புரிந்துள்ள தொண்டினைப் பாராட்டி, மத்திய அரசின் Indian Council for Child Education என்ற அமைப்பு, அவருக்கு 25,000 ரூபாய் பரிசளித்து கௌரவித்துள்ளது. இதற்கு முன் இப் பரிசைப் பெற்றவர், உலகப் புகழ் பெற்ற குழந்தை எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட் மட்டுமே என்பதைப் பெருமிதத்துடன் அறியும் போது மூக்கின் மேல் விரலை வைத்துத்தானே ஆக வேண்டும்!

*** எல். ஆர். விஜயகுமார், சென்னை.***

? குப்பை அள்ளும் நவீன லாரியை அறுபது லட்சம் செலவில் வாங்கியிருப்பதற்கு ஏதேனும் பலன் இருக்குமா?

! ரோடு போட இயந்திரம் வாங்கினார்கள் — ரிப்பேர். கொசு ஒழிக்கப் புகைக்கும் யந்திரம் வாங்கினார்கள் — தூங்குகிறது. சாக்கடை அடைப்பை நீக்க யந்திரம் வாங்கினார்கள் — மனிதர்கள் சாக்கடையில் இறங்குவது நின்றபாடில்லை. குப்பை அள்ளும் லாரி மட்டும் எங்கே உருப்படப் போகிறது? ஆனால் ஒன்று, யாருக்கேனும் ஏதேனும் பலன் இல்லாமல் போகாது!

*** மு. தேன்மொழி கல்யாண சுந்தரம், மேட்டுப்பாளையம்.**

? நடிகை தீபா அரசியலிலிருந்து விலகிக் கொள்வதாக அறிக்கை விட்டிருக்கிறாரே?

! 'இதை யாரும் வரவேற்காததால் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்' என்று நாளை அவர் கூறக்கூடும். எனவே வரவேற்று விடுவோம்!

* கருகருப்பு



* மலர்ந்த நினைவுகள்



* பணத் தேவைகள்...



* மூக்கின் மேல் விரல்.



* என்ன கோபம்?



கஸ்தூர்பா காந்தி சத்யாகிரகி ஆன கதை!

ஒரு சிறுகதை போல் அமைந்து இதயத்தைத் தொடுவதாக இருக்கின்ற இந்த நிகழ்ச்சி, சுசிலா நய்யார் எழுதி, சமீபத்தில் வெளியிடப்பட்ட 'காந்திஜி வாழ்க்கை வரலாறு' என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் சட்டம் படித்து விட்டு வழக்குரைஞர் தொழில் நடத்த 1891ல் பம்பாய் திரும்பினார் காந்தி. மனைவியையும் இரு பிள்ளைகளையும் வைத்துக் காப்பாற்றும் அளவுக்கு வரும்படி கிடைக்கவில்லை. இரு ஆண்டுகளுக்குப் பிறகு டர்பனில் வியாபாரம் செய்து வந்த தாதா அப்துல்லா நிறுவனம், ஒரு கேஸ் நடத்திக் கொடுக்க காந்தியைத் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்தது. டர்பன் சென்று கேஸ் விவரங்களைப் பரிசீலித்த காந்தி, தமது கட்சிக்காரர்களிடம் பலம் அதிகமில்லை என்றும் வீண் பண விரயம்தான் ஆகும் எனவும் கண்டார். தமது வருமானத்தைப் பற்றி சற்றும் கவலை கொள்ளாமல், கட்சிக்காரர்களை அழைத்து, விஷயத்தைத் தெளிவாக்கி, சமரசம் செய்து வைத்தார்.

எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷம். காந்தியை வெகுவாகப் பாராட்டினார்கள். விருந்து கொடுத்தார்கள். பரிசுகள் தந்தார்கள். அன்று இரவே இந்தியா திரும்ப கப்பலில் இடம் கிடைத்தும் விட்டது. அப்போது இருதரப்பினரும் சேர்ந்து காந்தியை அங்கேயே இருந்து தங்கள் வியாபார வேலைகளில் சட்டபூர்வமான பணிகளைச் செய்து தருமாறு வேண்டினார்கள். காந்திக்கு இதற்காக அவர் வேண்டும் சன்மானத்தைத் தருவதாகவும் கூறினார்கள்.

காந்தி இதற்குச் சம்மதிக்கவில்லை. 'இந்த வேலை முடிந்ததும் இந்தியா திரும்புவதாக வாக்களித்து விட்டு வந்திருக்கிறேன்' என்றார். ஆனால் அவர் தமது முடிவை மறுபரிசிலனை செய்ய வேண்டிய அவசியம் அப்போதே ஏற்பட்டது! மாலை தினசரிப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த ஒருவர், சர்க்கார் ஒரு புது சட்டம் கொண்டு வர மசோதா தாக்கல் செய்திருப்பதைச் சொன்னார். அதன்படி, இந்திய வியாபாரிகளின் உரிமைகள் பறிபோய் விடும். அவர்களைச் சேர்ந்தவர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து குடியேற இனி பல தடைகள் ஏற்படும்.

வழியனுப்பு உபசாரத்துக்கு வந்திருந்த பலரும் இச் செய்தி அறிந்து திகில் அடைந்தனர். காந்தியும் கவலை கொண்டார். அவரிடம் அவர்கள் சொன்னார்கள்: "எங்களுக்கு வியாபாரம் செய்யத்தான் தெரியும்; இதுபோன்ற சட்டங்களை எதிர்த்து மனு போடுவது, மந்திரிகளைச் சந்தித்துப் பேசுவது, நியாயம் கிடைக்க வாதம் புரிவது முதலியவற்றுக்கான திறமைகள் எங்களிடம் இல்லை. நீங்கள் இங்கிலாந்தில் வழக்குரைஞராகப் பயிற்சி பெற்று வந்திருப்பதால் உங்களை மதிப்பார்கள். எங்களுக்கு உதவுங்கள்."

கப்பல் டிக்கெட்டைத் திருப்பி அனுப்பிப் பயணத்தை ரத்து செய்தார் காந்தி. மறுநாள் காலையிலிருந்தே மனுக்கள் எழுத ஆரம்பித்தார். மந்திரிகளை மட்டுமின்றி





தளபதி ஸ்மட்ஸையும் நேரில் பார்த்து, "இப்படி இந்தியர்களை வெறுத்துச் சட்டம் செய்யாதீர்கள்'' என்று மன்றாடினார்.

காந்தியை நேரில் பார்க்கும் போது அவர் கூறுவதில் உள்ள நியாயத்தை ஒப்புக் கொள்வது போல் நடிப்பார்கள்; அவர் அப்பால் சென்றதும் அதை மறந்து விடுவார்கள். ஒன்றன் பின் ஒன்றாக இந்தியர்களைப் பாதிக்கும் சட்டத்தை இயற்றுவார்கள்!

காந்தி அசாதாரண பொறுமையுடன் இருந்தார். ''மறுபடி ஸ்மட்ஸிடம் போய் ஏமாறாதீர்கள்'' என்று சிலர் கூறும் போது காந்தி அளித்த பதில்: ''என் சத்தியாக்கிரகக் கொள்கை ஒருவரை நம்புவதுதான். அவர் பொய்ச் சொல்லி என்னை ஏமாற்றினாலும் மறுபடி மறுபடி அவரிடமே போய் அவர் மனத்தை நல்ல வழியில் மாற்ற முயற்சி செய்வேன்!''

காந்தியை விவாதத்தில் தோற்கடிக்க முடியாது. அதனால் ஸ்மட்ஸ் அவரை நேரில் பார்க்கும் போது ஒத்துப் போவது போல் பேசி விட்டு பின்னர் வேறுவிதமாக நடந்து கொள்வார்! இருவரும் பேசும் போது சாட்சி யாரும் இருக்க மாட்டார்கள். இதனால் காந்தி உடனுக்குடன் குறிப்புக்கள் எடுத்துக் கொண்டு, வீடு திரும்பியதும் விரிவாக அவற்றை எழுதி வைப்பார். இப்படிச் செய்வதால் ஸ்மட்ஸ் திருந்தி விடப் போவதில்லை என்றாலும் உண்மை என்ன என்பதை நடுநிலையாளர்களாவது— இன்றில்லா விட்டாலும் எதிர்காலத்திலாவது — புரிந்து கொள்வார்களே என்பதால் இவ்வாறு காந்தி நடந்து கொண்டார். ஸ்மட்ஸ் இயற்றிய சில சட்டங்களைத் தென்னாப்பிரிக்க நீதிமன்றம் ஒப்புக் கொள்ளவில்லை, நிராகரித்தது என்றால் அதில் காந்தியின் பங்கு கணிசமானது.

ஒரு முஸ்லீம் மனைவி, 1913ம் ஆண்டு இந்தியா சென்று சில மாதங்கள் உறவினருடன் இருந்து விட்டுத் தென்னாப்பிரிக்கா திரும்பினார். கப்பலிலேயே இருந்த அதிகாரி அவரை திருமணச் சான்றிதழ் காண்பிக்கச் சொன்னார். அத்தகைய சான்றிதழ் தம்மிடம் இல்லையென்றும் ஆனால் தமது கணவருடன் பல காலமாகத் தாம் தென்னாப்பிரிக்காவில் தான் வசித்து வருவதாகவும் அந்தப் பெண்மணி எடுத்துக் கூறியும் பயனில்லை. திருமணச் சான்றிதழ் இல்லையெனில் தென்னாப்பிரிக்காவில் இறங்க அவருக்கு உரிமை இல்லை என்று தடுத்து விட்டார் அதிகாரி.

வழக்கு உயர்நீதி மன்றம் சென்ற போது நீதிபதி இருதரப்பையும் விசாரித்தார். அவருக்கு அப் பெண் மீது கருணை பிறந்தது. ஆனால் சட்டத்தை மீறி தாம் தீர்ப்பு வழங்க முடியாது என்று கூறி, அதிகாரியின் செயலுக்கு அங்கீகாரம் வழங்கி விட்டார்!

இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சட்டம் இப்படித்தான் பேசுகிறது என்பதை அதுவரை எந்த இந்தியரும் கவனித்திருக்க வேயில்லை. முஸ்லிம்களும் சரி, இந்துக்களும் சரி, பலர் முன்னிலையில் விவாகச் சடங்குகளை நடத்துவார்களே தவிர, திருமணத்தை ரிஜிஸ்தர் செய்து கொள்ளும் பழக்கம் இல்லை. தென்னாப்பிரிக்காவில் இருந்த எல்லா இந்தியப் பெண்மணிகளுக்கும் பெரும் கவலை உண்டாயிற்று. உறவினர்களைப் பார்க்க இந்தியா சென்று வர முடியாது; சந்தோஷம், துக்கம் எதிலும் பங்கேற்க முடியாது என்ற நிலை.

காந்தி இந்த அநீதியை எடுத்துக் காட்டி, இதனை நிவர்த்திக்க ஒரு புதிய சட்டம் இயற்றுமாறு ஸ்மட்ஸைக் கேட்டுக் கொண்டார். 'முடியாது' என்று அப்பட்டமாக மறுத்து விட்டார் ஸ்மட்ஸ். லண்டனுக்கு எழுதியும் பலனில்லை.

ஒரு நாள் காந்தி, கஸ்தூர்பாவிடம், ''சட்டப்படி நீ என் மனைவி இல்லை!'' என்றார்.

''என்ன பேச்சு இது?'' என்று கடிந்து கொண்டார் கஸ்தூர்பா.

''அப்படிப் பிரச்னையை ஒதுக்கி விடுவதால் என்ன லாபம்? நீ என்ன செய்யப் போகிறாய், இந்த நிலைமையை மாற்ற?'' என்று கேட்டார் காந்தி.

''நான் என்ன செய்ய முடியும்?''

''ஏன், புருஷர்கள் மாதிரி பெண்களும் சத்தியாகிரகம் செய்து சிறை புகலாம்!''

''நான் போகத் தயார். ஆனால் சிறை உணவு எனக்கு ஒத்துக் கொள்ளாதே?''


''உனக்கு ஒத்துக் கொள்ளக்கூடிய எளிய உணவைக் கேள்; தர மறுத்தால் உண்ணா விரதம் இரு!''

''ஆக, நான் சாவதற்கு வழி தேடுகிறீர்கள்!'' என்றார் கஸ்தூர்பா கிண்டலாக.

''நீ சிறையில் இறந்தால் எனக்கு நீ தேவியாகி விடுவாய்! அதன் பிறகு உனக்குப் பூஜை செய்ய ஆரம்பிப்பேன்!'' என்றார் காந்தி.

கஸ்தூர்பா கண்கள் பனிக்க, நெகிழ்ந்து போனார். பதினைந்து பெண்மணிகளை அழைத்துத் தாம் சிறைபுக இருக்கும் தீர்மானத்தை வெளியிட்டார். அவர்கள் எல்லோரும் அவருடன் சிறை செல்ல முன்வந்தார்கள்.

— ஆர். சந்திரசூடன்.



கம்ப்யூட்டர் மகாபாரதம்!

○○ புகைபிடிப்பவர்கள் பலர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடத்தான் விரும்புகிறார்கள். ஆனால் விட முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு உதவ அமெரிக்காவில் ஃப்ளோரிடா மாநிலத்தில் பணியாற்றும் ஓர் இந்திய டாக்டர் ஒரு மாத்திரையை உருவாக்கியுள்ளார்.

"ஒரு மாதத்தில் புகைபிடிக்கும் பழக்கம் மறைந்துவிடும். அறுபது முதல் எண்பது சதவீதம் கேஸ்களில் வெற்றி உறுதி" என்கிறார் டாக்டர் அப்துல்லா.

○○ அதிசயப் பிறவியான ராஜன் மகாதேவன் என்ற மற்றோர் இந்தியர், அமெரிக்காவின் கான்ஸாஸ் பல்கலைக் கழகத்தில் மனஇயல் படித்து வருகிறார். இந்த மாணவரையே ஆராய்ச்சி செய்ய ஒரு லட்சத்து ஐம்பத்தேழாயிரம் டாலர் மான்யம் வழங்கப்பட்டுள்ளது!

ராஜன் மகாதேவன் ஆச்சரியமான அளவில் ஞாபக சக்தி உள்ள முப்பத்திரண்டு வயது மாணவர். பக்கம் பக்கமாக எழுதப்பட வேண்டிய கணித சாஸ்திர எண்களையும், குறிகளையும் அநாயாசமாக ஞாபகத்திலிருந்தே ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திக் கூறிக் கொண்டே போகிறார்!

இத்தகைய வியப்பளிக்கும் ஞாபகசக்தி இவருக்கு எப்படி உண்டாயிற்று என்பதை ஆராய்ந்தால் மனிதர்களின் ஞாபக சக்தி என்ற இயல்பை விஞ்ஞான பூர்வமாகப் புரிந்து கொள்ள முடியும் என்று கருதப்படுகிறது. ஏனெனில், ராஜன் மகாதேவன் சின்னச் சின்ன விஷயங்களை மறந்து போய் விடுகிறார்! கார்ச் சாவியை எங்கே வைத்தோம் என்பதை மறந்து விட்டுத் தவிப்பார்!

○○ அமெரிக்காவில் வசிக்கும் மற்றோர் இந்திய விஞ்ஞானி டாக்டர் ரமணி நாராயண் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குப் பெரும்பணியாற்றியிருக்கிறார். தற்போது ஏராளமான பிளாஸ்டிக் பொருள்கள் புழக்கத்தில் உள்ளன அல்லவா? இவை பழசாகிப் போனால் நிராகரிக்கப்படுகின்றன. ஆனால் இவை மண்ணோடு மண்ணாக மக்கி மறைவது கிடையாது. அதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகும். ஆனால் இப்போது ரமணி கண்டுபிடித்துள்ள பிளாஸ்டிக்கினால் செய்யப்படும் பொருள்கள் நீடித்து உழைப்பது மட்டுமல்ல; அதன் பயன் முடிந்து நிராகரிக்கப்படுமானால் இரண்டே ஆண்டுகளில் மண்ணோடு மண்ணாகி மக்கி மறைந்துவிடும்!

○○ அமெரிக்காவில் இப்போது ஒரு புது ரக டெலிவிஷன் வந்துள்ளது. வீடியோவுடன் இதனை இணைத்த பிறகு, நீங்களே கேமராமேனாகவோ, டைரக்டராகவோ மாறலாம்! ஒரு பட்டனை அழுத்தினால் லாங் ஷாட், குளோஸ் அப் ஷாட் ஆக மாறும்! இன்னொரு பட்டனைத் தட்டினால் காமிராக் கோணம் மாறி அந்தக் காட்சி வேறு கோணத்தில் எடுக்கப்பட்டது போல் தோன்றும்! இப்படிப் பல்வேறு காட்சிகளையும் நமக்கு இஷ்டப்பட்ட கோணத்தில், விருப்பமான தொலைவில் (லாங் ஷாட், மிட் குளோஸ் அப், குளோஸ் அப்) பார்க்கலாம்!

○○ ராமாயணம் அல்லது பாரதத்தைக் கம்ப்யூட்டரில் அடக்கும் காலம் வந்துவிட்டது! முதல் முயற்சியாக அமெரிக்காவில் பைபிளைக் கம்ப்யூட்டரில் அடக்கி விட்டார்கள்! உள்ளங்கை அளவினதான இலேசான கம்ப்யூட்டர் இது. பாட்டரியில் இயங்குகிறது. பைபிளின் எந்தப் பக்கத்தை வேண்டுமானாலும், அதில் எந்த அடியை வேண்டுமானாலும் கம்ப்யூட்டர் பட்டனைத் தட்டிக் கேட்டுப் படிக்கலாம்! அதுமட்டுமல்ல; 'வரிகளைப் பற்றிப் பைபிள் என்ன சொல்கிறது?' என்று கேட்டால், இந்தக் கம்ப்யூட்டர் எந்தெந்த இடங்களிலெல்லாம் 'வரி' என்ற சொல் வருகிறதோ, அந்தப் பகுதிகளைத் திரையில் காட்டும்! அப்படியே 'மோஸஸ்' பற்றிப் பேசும்! 'மன்னிப்பு' பற்றி எந்தெந்த இடங்களில் பைபிள் பேசுகிறது என்று கூறும்! இதோடு போயிற்றா? 'மோஸஸையும் வரிகளையும் இணைத்துக் கூறு!' என்று கட்டளையிட்டால், மோஸஸ், வரிகள் பற்றி எந்தெந்த இடத்தில், என்னென்ன சொல்லியிருக்கிறார் என்று விளக்கும்!



''இந்த ஏரியாப் பிச்சைக்காரங்க ரொம்ப அட்வான்ஸ்ட் டைப்!''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஆண்டுச் சந்தா மாதிரி ஒரு தொகை கொடுத்திட்டா மறுபடி நம்மைத் தொந்தரவு பண்ண மாட்டாங்க!''

— இளை. அ. கதிர்வேல்.

''உன் பையன் உன்னை எப்படிக் கூப்பிடறான்?''

''அதையேன் கேக்கறே. 'அம்மா'ன்னு கூப்பிடணும்ங்கிறேன். அவர் தான் 'மம்மி'ன்னு கூப்பிடச் சொன்னார். அவன் ரெண்டுக்கும் பொதுவா 'அம்மி'ன்னு கூப்பிடறான்!''

— இளையமணி.





''புதுசா வந்திருக்கிற இன்ஸ்பெக்டரைப் பார்த்துட்டு எல்லாத் திருடனும் வேற ஏரியாவுக்குப் போயிட்டாங்களாமே?''

''ஆமா... அவருக்கு மாமூல் கொடுத்துக் கட்டுப்படி ஆகலியாம்!''

— வி. ரேவதி.

''ஏன்டா, உனக்கு வெட்கமா இல்லே? நேத்து காதலியை அழைச்சுக்கிட்டு வெளியே போனே, ரெண்டு ரூபா தான் செலவாச்சுங்கிறியே?''

''நான் என்ன செய்ய? அவகிட்ட இருந்ததே ரெண்டு ரூபாதானே!''

— ராமுசாமி.





நர்ஸ்: ஹூம்... ஆபரேஷன் சக்ஸஸ்னா அன்னிக்கு எங்களுக்கு எல்லாம் டாக்டர் பெரிய பார்ட்டி கொடுப்பார்!

மற்றவர்: அதை ஏன் பெருமூச்சோடு வருத்தமாச் சொல்றீங்க?

நர்ஸ்: அவர் கடைசியாப் பார்ட்டி கொடுத்து மூணு வருஷம் ஆகுதே!

— இளை. அ. கதிர்வேல்.



* மூப்பனாரிடமும் வேண்டுகோள் விடுத்தார்கள்...

பத்து வருடங்களாக ஒரு போராட்டம்!

அன்று யார் முகத்தில் விழித்தார்களோ, பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த கிராம முன்சீப், கர்ணம் போன்ற பதவிகளை ஒரே நாளில் இழந்துவிட்டார்கள்! ஒருவர் இருவர் அல்ல, 24,000 கிராம உத்தியோகஸ்தர்கள்! 14.11.80 அன்று இப்படிப் பதவி பறித்த புண்ணியத்தைக் கட்டிக் கொண்டவர் எம். ஜி. ஆர்.

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், கிராம நிர்வாகத்தில் ஊழல்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவும் கிராம அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள் என்று அ.தி.மு.க. அரசு அன்று காரணம் கூறியது. ஆனால் கணிசமான கிராம அதிகாரிகள் தி. மு. க. அனுதாபிகள் என்று யாரோ அவரிடம் 'கோள் மூட்டி விட்டதும், அ.தி.மு.க. ஆட்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பதும்தான் உண்மைக் காரணங்கள் என்று பேசப்பட்டது.

வேலை இழந்த கிராம உத்தியோகஸ்தர்களின் போராட்டம் 80 — ஆம் வருடம் ஆரம்பித்து இன்றும் தொடர்கிறது. ஜனாதிபதி தொடங்கிக் கீழ்மட்டம் வரை, எல்லோரையும் பார்த்தாகி விட்டது. பலன் ஒன்றுமில்லை. இதற்கிடையில் பதவியிழந்த கிராம உத்தியோகஸ்தர்களில் கிட்டத்தட்ட 300 பேர் பாவம், செத்தே போய் விட்டார்கள்!

வேலை இழந்த கிராம உத்தியோகஸ்தர்களின் செயலாளரான ராஜகோபாலன், பிரச்னையை விவரமாகக் கூறினார்:

வேலை பறிக்கப்பட்டதும் நாங்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனோம். அதன் தீர்ப்புப்படி, எங்களில் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்திருந்த 6,000 பேருக்கு மீண்டும் வேலை கிடைத்தது. பாக்கி 18,000 பேர் இருக்கிறோம். எங்களது கோரிக்கை என்னவென்றால், இவர்களுக்கு ஏதேனும் ஒரு வேலை வாய்ப்புக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதும், அப்படி வேலை வேண்டாம் என்று ஓய்வு பெற விரும்புபவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதும்தான்.''

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாக கிராமத்துக்கு இரண்டு பேரை, 200 ரூபாய்ச் சம்பளத்தில் அமர்த்த தி.மு.க. அரசு முடிவெடுத்து இருக்கிறதாம். "எங்களை அந்தப் பணிகளில் அமர்த்தினாலும் போதும்'' என்கிறார் ராஜகோபாலன். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பணிபுரிந்த 110 கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தமிழக அரசு பென்ஷன் கொடுத்து வருகிறதாம். ''அரசியல் சட்டப்படி எல்லோருக்கும் சம உரிமை உண்டு. எனினும் எங்களுக்கு பென்ஷன் கிடையாது. அவர்களுக்கு உண்டு! இது என்ன நியாயம்?'' என்று கேட்கிறார் ராஜகோபாலன்.

தி.மு.க. அரசு, தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக 'வேலை இழந்த கிராம அதிகாரிகள் துயர் துடைக்கப்படும்' என்று சொல்லியிருந்தது. சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்று சொன்ன கலைஞரை மலை போல் நம்பியிருக்கிறார்கள் வேலை இழந்த இந்தக் கிராம அதிகாரிகள்.

— ப்ரியன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka



ட்ரை-வீவ் ப்ளாட்டிங் பேப்பர் சோதனை:

1. ஒரு மேஜைக் கரண்டி அளவு நீர் மையை விஸ்ப்பர் மீதும், ஒரு மேஜைக் கரண்டி அளவை வேறு ஏதாவது நாப்கின் மீதும் விடவும்.
2. இரண்டின் மீதும் ப்ளாட்டிங் பேப்பரை வைக்கவும்.
3. விஸ்ப்பர் மீது வைக்கப்பட்ட தாள் மிக சுத்தமாகவும் மிக உலர்ந்த தாகவும் தோன்றும்.

வேறு எந்த நாப்கினையும்விட மிக சுத்தமாகவும் மிக உலர்ந்ததாகவும் வைத்துக் கொள்கிறது

ஏனெனில், விஸ்ப்பரில் மட்டுமே 'ட்ரை-வீவ்' என்ற ஒப்பற்ற உறை உள்ளது. இந்த உறை, உங்களிடமிருந்து ஈரத்தை, நாப்கினின் உள்அடுக்கிற்குள் இழுத்துக் கொள்கிறது. ஆகவே அதன் மேற்புறம், எப்போதும் உலர்ந்ததாக இருக்கும், இப்போதுதான் நீங்கள் நாப்கினை மாற்றியது போலத்தோன்றும்.

விஸ்ப்பர், உங்கள் உள்ளாடைக்குள் கச்சிதமாகப் பொருந்திக் கொள்கிறது. நழுவாது, நகராது. காரணம், அதில், அதிக-விரிவான ஒட்டும்பட்டி உள்ளது. அது, நாப்கினை வசதியாக உரிய இடத்தில் வைத்துக் கொள்கிறது.

விஸ்ப்பர் பற்றி ஏதாவது விளக்கம் தேவையா?

எங்களிடம் ஒரு விசேஷ மிஸ் விஸ்ப்பர் ஸர்விஸ் உள்ளது. இது, விஸ்ப்பர் பற்றியோ பெண்ணின் சுகாதாரம் பற்றியோ உங்கள் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் தரத் தயாராக உள்ளது.



தொடர்பு கொள்ளவும் இம் முகவரிக்கு:

Ms. Whisper* Service, P.O. Box No. 6276, Bombay 400011.

பாதுகாப்பின் மிக சுத்தமான மிக உலர்ந்ததான உணர்விற்கு - விஸ்ப்பர்.

CLARION/B/PG/53/203 TAM